


# தி.மு.க வுக்கு புதிய பதவி ஏதுமில்லை

# அரசு பதில் அளிக்குமா?





ஜீலை 24 – ஜீலை 30, 2011 July 24 - July 30, 2011 பக்கங்கள் -28 25.00

சுடர் ஒளி
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA
THE SUDAR OLI



# குருதி தோய்ந்த பொழுதுகள்

## ஒப்பரேஷன் ஜெரோனிமோ

வடக்கின் தாயாம்

## முத்திரைச் சந்தியை முற்றுகையிடும் துரோகம்

# கனவுக்கன்னி மர்லின் மன்றோவுக்கு 26 அடி உயரச் சிலை





காலஞ்சென்ற ஹொலிவூட் நடிகை மர்லின் மன்றோவின் 26 அடி உயரமான சிலையொன்று அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது. துருப்பிடிக்காத இரும்பு மற்றும் அலுமினியத்தாலான இந்த சிலை 15422 கிலோகிராம் எடையுடையது. சேவார்ட் ஜோன்ஸன் எனும் சிற்பக் கலைஞர் இச்சிலையை உருவாக்கியுள்ளார்.

1955 ஆம்ஆண்டு வெளியான 'த செவன் இயர் இட்ச்' என்னும் திரைப் படத்தில் வரும் மர்லின் மன்றோவின் வெகு பிரபல்யம் பெற்ற காட்சியொன்றை சித்தரிக்கும் விதத்தில் இச்சிலை வடிமைக்கப்பட்டுள்ளது.

1926 ஆம் ஆண்டில் கலிபோர்னியா மாநிலத்தின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பிறந்தவர் மர்லின் மன்றோ.

1946 ஆம் ஆண்டில் தனது 20 ஆவது வயதில் சினிமா உலகில் பிரவேசிக்கும் வாய்ப்பு மர்லின் மன்றோவுக்குக் கிட்டியது. அழகும் கவர்ச்சியும் கைகொடுக்க, சினிமா உலகில் பணமும் புகழும் வந்து குவிந்தன. 1948 ஆம் ஆண்டில் கலிபோர்னியாவின் அழகுராணி விருதும் மர்லின் மன்றோவுக்குக் கிட்டியது. 1950 ஆம் ஆண்டுமுதல் 1960 ஆம் ஆண்டுவரை சினிமா உலகில் கொடிகட்டிப் பறந்த மர்லின் மன்றோ உலகின் பல கோடி ரசிகர்களின் கனவுக் கன்னியாக வலம் வந்தவர். 1962 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் அதிகாலை லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள தனது வீட்டில் மர்லின் மன்றோ மர்மமான முறையில் இறந்து கிடந்தார். அதிகளவு தூக்க மாத்திரைகளை அருந்தித் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்டபோதிலும், மர்லின் மன்றோவின் மரணத்துக்கான உண்மையான காரணம் குறித்து நீண்டகாலமாகவே சர்ச்சைகள் நிலவி வந்தன.


5 தசாப்தங்களுக்கு மேலாக

நிலையானதும் ஸ்திரத் தன்மையும் கொண்ட சேவைக்கு

சென்ட்ரல் பினான்ஸ்

யாழ் மண்ணில்

நிதி வளம் பெருக, நாம் உங்களுடன்!





உங்கள் அனைத்து நிதித்தேவைகளுக்கான தீர்வுகள் எம்மிடம் உள்ளன.
பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான குத்தகை வசதிகள்.
மக்ஸிமோ ட்ரக்களுக்கான கவர்ச்சிகரமான குத்தகை வசதிகள்.
டிமோ பட்டா வாகனங்களுக்கு விசேட நிதி வழிமுறைகள்.
மக்ஸிமோ ட்ரக் மற்றும் டிமோ பட்டா வாகனங்களுக்கான இலவச காப்புறுதி சேவை.
நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான அதி கூடிய வட்டி வீதம்.

சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 1608, 021 222 1942



## பல வாத்தியங்களை வாசிக்கும் தனி மனிதன்

தெருவோர பிச்சைக்காரர்கள் தமது வருமானத்திற்காக இசையின் உதவியை நாடுகின்றனர். ஆனால் இவர் முற்றிலும் வேறுபட்டவர்.

பல பேர் இணைந்தே ஓர் இசைக் கலவையைத் தயாரிப்பார்கள். ஆனால் இங்கு ஒரு தனி மனிதன் பல தாள வாத்தியங்களை வாசித்து ஒரு முழுமையான இசையை வழங்குகின்றார். சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட வாத்தியங்களை ஒரே நேரத்தில் வாசிக்கின்றார். அதிலும் பாடிக் கொண்டே வாசிக்கின்றார் என்பது சிறப்பம்சம்.




லொறி, டிபர், ட்ரக் வாகனங்களுக்கு

லீசிங்

சுமை

குறைக்கப்பட்டுள்ளது







பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத **லொறி, டிபர், ட்ரக்** கனரக வாகனங்களை மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில் லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.

CF

சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி


ஃபிட்ச் ரேட்டிங்ஸ் A+ (lka)

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com


HOLMES POLLARD & STOTT

# சொங்கியின் தாய் வரிக்குதிரை



தென் கிழக்கு சீனாவில் அமைந்துள்ள எக்ஸியாமென் ஹாயிங் மிருகக் காட்சிசாலையில் உள்ள வரிக்குதிரை ஒன்று அரியவகை சொங்கி குட்டியை ஈன்றுள்ளது. இதன் தந்தை ஒரு கழுதையாகும். சொங்கி எனப்படுவது வரிக்குதிரைக்கும் வேறு மிருகத்திற்கும் பிறக்கும் கலப்பினமாகும். அங்கு தற்போது பிறந்துள்ள சொங்கியின் உயரம் 3 அடி என்பதுடன் அதன் எடை 30 கிலோ கிராமாகும்.

# எலி உடம்பில் செயற்கை கல்லீரல் பொருத்திச் சாதனை!



எலிகளைகளுக்குள் மனித செல்களை கொண்டு உருவாக்கப்பட்ட கல்லீரல் பொருத்தி புதிய மருந்துகளின் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முறையில் மருந்துகள் குறித்த தரம் உடனடியாகவும் துல்லியமாகவும் தெரியவரும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். இந்த முறையால், நோய்களுக்கு தீர்வுகாண விரைவில் மருந்து கிடைக்க ஏதுவாகும் என்பதும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் நம்பிக்கை.

ஆலிஸ் சென் தலைமையில் அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மருத்துவ பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் சாதனை இது. புதிய மருந்து சோதனைக்காக ஹெபடோசைடஸ் என்ற மனித செல்கள் மற்றும் எலிகளின் தோலில் காணப்படும் செல்களைக் கொண்டு செயற்கையாக உருவாக்கப்பட்ட கல்லீரல், எலிக்கு பொருத்தப்பட்டுள்ளது. இவற்றின் செயல்பாடுகள் மனித கல்லீரலைப் போன்று இருப்பது உறுதி செய்யப்பட்ட பின்னர் புதிய மருந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மரபணுக்கள் குறித்த மருத்துவ ஆய்வுகளுக்கும் இது பேருதவியாக இருக்கும்.

# பெற்றோல் குடித்து வாழும் வினோத மனிதன்!



வாகனங்கள், இயந்திரங்கள் இயங்குவதற்கு பெற்றோல் தேவை. ஆனால் சீனாவில் ஒரு மனிதனின் இயக்கத்துக்கும் பெற்றோல் தேவைப்படுகின்றது. இம்மனிதனின் பெயர் **Chen Jejun.** வயது 71. கல் அறுத்தல், நெசவு செய்தல் போன்ற தொழில்களை செய்பவர். தனிமையில் வாழ்கின்றார். இவர் மிகவும் விசித்திரமான பழக்கத்தை கொண்டிருக்கின்றார். இவர் உடல் வலியை போக்குகின்றமைக்காக கடந்த 42 வருடங்களாக பெற்றோல் குடித்து வருகின்றார், மாதாந்தம் 3.5 லீற்றர் வரை குடிக்கின்றார். 1969 ஆம் ஆண்டில் இருந்து இப்பழக்கத்தை மேற்கொண்டு வருகின்றார். ஒரு முறை இவருக்கு இருமலுடன் கடுமையான வலி ஏற்பட்டு இருக்கின்றது. எந்த மருந்தும் குணப்படுத்தவில்லை. இவருக்கு காச நோய் ஏற்பட்டு இருக்கின்றது என்றும் பெற்றோல் குடிக்கின்ற பட்சத்தில் குணமாகி விடும் என்றும் ஊர்ப் பெரியவர்கள் சிலர் சொல்லி இருக்கின்றனர்.


# 29 வயதில் தாத்தாவான இங்கிலாந்து இளைஞன்..!



இங்கிலாந்தில் வேல்ஸ் பகுதியில் உள்ள பிரிட்ஜென்ட் என்ற இடத்தைச் சேர்ந்தவர் ஷெம்டேவிஸ் (29). இவரது மகள் தியா (14). இவள் தன்னுடன் படிக்கும் 15 வயது சிறுவனுடன் பழகினாள். அதன் விளைவாக கர்ப்பமும் அடைந்தாள். இதை தொடர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன்பு ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். அதன் மூலம் இங்கிலாந்தில் மிக குறைந்த வயதில் தாத்தாவான இளைஞர் என்ற பெருமையை டேவிஸ் பெற்றுள்ளார். இவரும் தனது மகளை போல 14 வயதில் செல்லி என்ற சக மாணவியுடன் காதல் வயப்பட்டார். நெருங்கி பழகியதன் விளைவாக கர்ப்பிணி ஆன செல்லி தியாவை பெற்றெடுத்தாள். அப்போது டேவிசுக்கு 15 வயது. 'தியாவே ஒரு குழந்தை தற்போது அவளுக்கு ஒரு குழந்தையா? அதை நினைக்கும்போது எனக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் உள்ளது' எனது மகள் கர்ப்பம் அடைந்திருப்பதை அறிந்ததும் முதலில் நான் அதிர்ச்சி அடைந்தேன். பின்னர் யோசித்தபோது தான் அவளது இதே வயதில் நான் செய்த தவறைத் தான் அவளும் செய்திருப்பதை உணர்ந்து என்னை சமாதானப்படுத்தி கொண்டேன் என்றார் தியாவின் தந்தை. தியாவின் தாய் செல்லி கூறும்போது, நான் செய்த அதே தவறை தியாவும் திரும்ப செய்து விட்டாள். இது போன்ற செயலில் ஈடுபடக்கூடாது என நான் அவளுக்கு பலமுறை எடுத்துரைத்தேன். இருந்தும் நடந்து விட்டது என்றார்.

# கணினி விளையாட்டு மோகத்தில் பெண்கள்

கம்பியூட்டர் விளையாட்டில்தான் அதிக திருப்தி கிடைப்பதாக பெண்களில் பலர் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆண்கள் 22.3 சதவிகிதம் நேரத்தையும், பெண்கள் 23.2 சதவிகிதம் நேரத்தையும் விளையாட்டில் செலவிடுகின்றனர். துணையுடன் படுக்கை அறையை பகிர்ந்து கொள்வதை விடுத்து, படுக்கை அறையிலேயே விடிய விடிய கம்ப்யூட்டர் விளையாட்டில் மூழ்கும் பெண்களின் சதவிகிதமும் அதிகமாக உள்ளன. இவர்கள் நண்பர்கள், கணவர்கள் உறவினர்களிடம் இருந்து தனிமைப்பட்டு வருகின்றனர். இதுபற்றி, மனித உறவுகள் நிபுணர் டக்ளஸ் வீஸ் தெரிவித்துள்ள கருத்தில், கம்பியூட்டர் விளையாட்டில் மூழ்கிப் போகும் நபர்கள் தங்களது வாழ்க்கைத்துணை, நண்பர்கள், உறவுகள் போன்றவற்றை இழக்க நேரிடும். அவர்கள், தனிமையில் தள்ளப்பட்டு, ஒருவிதமன நோய்க்கு ஆளாகும் ஆபத்தும் உள்ளது என்று எச்சரித்துள்ளார்.



# காதல் கொலை



காதல். வரைவிலக்கணங்களுக்குள் சிக்கிக்கொள்ளாத ஏதோ ஒன்று. சில நேரங்களில் அது சடம். சில நேரங்களில் வாழ்வுக்கு புது வெளிச்சம் தரும் முடிவற்ற ஒளி. இதன் தோற்றம் தான் எங்கிருந்து என்பதை யாரும் கண்டு பிடிக்கவில்லை. சமய நம்பிக்கைகள் ஆதாம் ஏவாளை சுட்டிக்காட்டினாலும், மனிதன் உள்ளிட்ட உணர்வுள்ள அனைத்து ஜந்துக்களிடமும் சுரக்கின்ற ஓர் சுரப்பி காதல். இதனால் தான் காதலால் கசக்கிப்பிழிந்த கவிதையைத் தவிர, தத்துவம், உளவியல் என்பவற்றால் அதற்கு விளக்கம் காணமுடியாமல் இருக்கிறது. ஏதாவது இரண்டுக்கிடையில் ஏற்படும் ஓர் உணர்வுடன் சங்கமித்த மின்னல் வெட்டு. அத்தோடு அந்த உணர்வைத் தக்க வைத்துக் கொள்வதிலும் அதில் வெற்றி பெறுவதிலும் அன்பில் கலந்த உயிரிகளின் விருப்பு வெறுப்புகள், விட்டுக் கொடுப்புக்கள் போன்றவற்றில் ஏற்படும் தாராளங்கள் தான் காரணமாகின்றன. உண்மையாக காதலிப்பவர்கள் இந்தப் பாய்தலில் தவறிழைக்கும் போது தாம் பலியாகின்றனர் அல்லது காதலைப் பலியாக்குகின்றனர்.

மனிதர்கள் கண்டுபிடித்த ஓர் அரிய உணர்வாக காதல் இருப்பினும் அது சில சந்தர்ப்பங்களில் காமத்துக்கான தொடக்கமாக தொடங்கப்பட்டு விடுகிறது. நம்மைத் திகில்கொள்ள வைக்கும் அசிட் வீச்சுகளுக்கும், உயிரோடு எரித்தல்களுக்கும், கொலைகளுக்கும் இந்தத் தவறான காதல் ஊற்றுத்தான் பிரதான காரணம். இந்தக் கொலைகள் நம்மை ஜீரணிப்பற்ற சுவாசம் கொண்ட மனிதர்களாக மாற்றினாலும், சில காதற் சாவுகள் நியாயபூர்வமானவையாக, விமர்சனத்தோடு ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக மாறிவிடுகின்றன. இந்த நியாயபூர்வமான காதற் சாவுகளுக்கு எதுகாரணம்? சில உண்மைக் கதைகள் இங்கே பகிரப்படுகின்றன.

■ ஜெரா

நான் உயர்தரம் படித்த காலத்தில் அறிமுகமான ஓர் காதல். பாடசாலைச் சீருடையில் கருவான காதலைத் தமக்கிடையில் அறிமுகப்படுத்திக் கொண்டவர்கள். அந்த வயதில் எல்லோராலும் அது அருவருக்கத் தக்க ஒரு உணர்வாகப் பார்க்கப்பட்டாலும், அவர்கள் துணிந்து சுமந்து கொண்டனர். பிரதேச வாதமும் சாதிப் பிரச்சினையும் காதல் பிரிப்புக்கான சுவராய் எழுந்தபோதிலும், அச்சுவரின் மேல் நடைபயின்றது அந்த பயம் அறியா இளங்காதல். அழகானவர்கள். பார்க்கும் எல்லோரையும் அன்பாலும், அழகாலும் ஆச்சரியப்பட வைப்பவர்கள். யுத்தம் பலவற்றையும் பறித்துக் கொண்டு இருந்த வேளையில் காதலனின் இடுப்புக்குக் கீழான பகுதியையும் கிழித்து இயங்க முடியாமல் செய்து விட்டது. அவன் சக்கர நாற்காலிக் குரியவனானான். அந்தக் காதலுக்குக் கிடைத்த முதல் சீதனமாக உயர் கல்விக்கான வாய்ப்பு இருவருக்குமே கிடைத்தது. உயர் கல்விப் பீடம் பல வண்ணமயங்களாலான மாயத் தோட்டமாக இருந்தபோதி லும் அவள் அவனைக் கைவிடவில்லை. விரிவுரை மண்டபங்களுக்குள்ளும், நூலக வெளிகளுக் குள்ளும் அவள் அவனைச் சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளிச் செல்லும் பொழுதுகள் பலரையும் காதல் பற்றிச் சிந்திக்க வைக்கும். அவர்களின் அந்த நொந்து விழும் பயணங்களைப் பார்க்கும் போது அவர்களுக்குப் பின்னால் உண்மை க்காதல் பயணித்துக் கொண்டிருப் பதைப் பல தடவை பார்த்திருக்கிறேன். ஆனாலும் இந்த உண்மைக் காதல் வாழவில்லை. செத்துப் போயிற்று. யுத்த வடுவும், தொடர்ச்சியாக இவ்வழகிய காதல் மீது விழுந்த சமூகத்தின் ஊனமும், இருவருக்கிடையில் உருவாகி வந்த வாழ்வு மீதான விரக்தியும் மூன்றடி ஆழம் கொண்ட வயற் குளத்துக்குள் தம்மைப் புதைத்துக் கொள்ளும் மனத் துணிவை வழங்கியது. ஒரு காதல் கடைசியாய் அந்த வண்ண வெளியிலிருந்து மரணித்தது. ★

இந்தக் கதை இங்கு நடந்ததல்ல. கடல் கடந்த தேசம் ஒன்றுக்குரியது. அங்கு ஓர் மிகப் பெரும் பாடசாலை இருந்தது. கிட்டத்தட்ட ஒரு கல்விப் பீடத்துக்குச் சமமானது. அங்கேதான் இந்தக் காதலும் ஒருதலையாகப் பிரசவித்தது. அவன் அவளுக்கு சிரேஷ்ட அந்தஸ்துக்குரியவனாக இருந்த போதிலும், காதலுக்குத் தான் கண் இல்லையே! அவளிடம் முதன் முதலாய் காதல் முளைவிட்டது. காதலைச் சுமந்தவன் அவளுக்குப் பின்னால் அலையத் தொடங்கினான். அந்த அலைதல் உயிரைத் தொலைத்தலுக்கான பயணமாக இருக்கப் போவதை உணராத நண்பர்கள், ஒவ்வொரு இரவிலும் அவனது காதற் கதைகளுக்காக அவனோடு குழுமி இருப்பர். தன் நோக்கமெல்லாம் மறந்து படிப்பதும் தேடுவதும் அவளைப்பற்றியதேதான் என்பதை அவன் தன் கடமையாகக் கொண்டிருந்தான். ஆனால் அவளோ நீண்ட காலமாக இவற்றைக் கண்டு கொள்ள வில்லை. தொடர்ச்சியான ஏமாற்றங்களைப் பரிசளித்துக் கொண்டிருந்தாள். ஏமாற்றுப் பரிசில்களால் தன்னை நிரப்பிக் கொண்டவனாக கொஞ்சக் காலத்தில் மாறிப் போனான் அவன். ஆயினும் நண்பர்களுடனான சந்தோசங்களையும் துன்ப துயரங்களையும் மரணத்தை ஏந்தப் போகும் கடைசி நாள் இரவு வரை கைவிடாமல் பங்கிட்டுக் கொண்ட வனாக இருந்தான்.

அன்று சனிக்கிழமை. எப்போதும் சுறுசுறுப்பாக, கூச்சல்களோடு இயங்கிக்கொண்டிருக்கும் அந்தப் பாடசாலை விடுமுறை எடுத்திருந்தது. இவர்கள் அந்த இடத்தைச் சந்திப்பதற்கான இடமாகத் தெரிவு செய்திருந்தனர். காலை, திட்டமிட்டபடி அங்கே தம் கதைகளைப் பகிர்ந்துகொண்டிருக்கையில் உயிரைப் பொசுக்கும் நஞ்சுப் போத்தலைக் கையில் வைத்தபடியே பேசிக் கொண்டிருந்தான். ஏதோ ஒரு கதை முற்றியது. முரணைக் கக்கிவிட்டது. அது அவன் கையிலிருந்த நச்சுத் திராவகத்தை முழுவதுமாக ருசிக்க ஓர் சந்தர்ப்பத்தை அளித்தது. காதலிக்கு முன்னால் மரணித்துபோனான். காதலும் காதலியும் இப்போது எங்கேயோ தெரியாது? ★

இது என் அறைகளுக்குள் வாழும் காதல். வாழ்வின் பாதிப் பகுதியை சந்தோஷங்களுக்குள்ளும் மீதிப் பகுதியை துயரங்களுக்குள்ளும் செலவிடுவதற்காக காதலைத் துணிந்து கைப்பற்றிக் கொண்ட ஒரு நண்பனின் கதை. இந்தத் தலைவன் கொஞ்சம் உணர்வு பூர்வமானவன். வீட்டில் நாய்க்கும், அம்மாவுக்கும் இடையில் செலுத்தப்படும் அன்பின் வித்தியாசம் உணராதவன். இதனால்தான் இந்த நூற்றாண்டிலும் ஒரு காதலோடு மட்டும் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கிறான் அவன். கடக்க வேண்டிய கண்டங்கள் எல்லாம் கடந்து ஓர் உயர்நிலை கல்விப் பொழுதுகளில் முதல் நாள் அவளைக் கண்டவுடனேயே தன்னைப் பரிகொடுத்ததாக பெரும்பாலான இரவுகளில் என்னிடம் புலம்பி இருக்கிறான். அவளது பிறந்த தினத்தில் தன் காதலை வெளிப்படுத்தியதோடு இருவருக்கும் இடையில் உண்டான மோதல் தான் நான்கு வருடமாக இன்றைக்கும் நீடிக்கிறது. இருவருக்கும் இடையில் காதல் இருக்கிறதா? இல்லையா? என்பது சந்தேகத்துக்குரிய விடயம். ஆனால் மோதல்கள் தாராளம். சில சந்தர்ப்பங்களில் சண்டைகளின் சத்தம் என்னை அறையை விட்டே ஓடச் செய்யும். இந்தக் காதலில் உள்ள சில சுவாரஷ்யங்களை சொல்லியே ஆகவேண்டும். காதலிக்கத் தொடங்கிய காலத்தில் இந்தத் தலைவன் வாடகை அறையிலிருக்கும் தன் தலைவிக்கு வாரம் ஒரு கவிதை எழுதித் தபாலிடுவான். அந்தக் கவிதைகளில் முள்ளிவாய்க்கால், பிணங்கள், ஊனப்பட்ட சனங்கள், பிச்சைக்காரர்கள். இயேசுநாதர் போன்ற விடயங்கள் கட்டாயம் இருப்பதைத் திருட்டுத்தனமாகப் படித்திருக்கிறேன். அவன் ஒவ்வொரு திங்களும் கவிதை எழுதி மேசை மீது வைத்துவிட்டுக் குளிக்கச் சென்றதும். நான் செய்யும் முதல் காரியம் அதனைத் திருடிப் படிப்பது தான். சில வேளைகளில் அதைப் படிக்கும்போது எனக்கே நான்கைந்து பேரைக் காதலிக்கவேண்டும் போல் இருக்கும். தொடர்ச்சியாக இந்தக் கவிதையுத்தம் நடத்திய நண்பனுக்கு வாரத்தில் ஒரு நாள் ஐந்து நிமிடம் மட்டும் கதைப்பதற்குத் தலைவி உத்தரவளித்த சந்தோசத்தை மதுபானம் வாங்கி நண்பர்களுக்குக் கொடுத்துக் கொண்டாடினான். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் எங்காவது ஓர் மறைவான இடத்திலிருந்து அவர்கள் கதைக்கத் தொடங்க நானும் இன்னொரு நண்பனும் என்ன கதைக்கிறார்கள் என்பதை ஒட்டுக் கேட்டுவிடுவோம். அதில் ஒன்றும் இருப்பதில்லை. என்ன சாப்பிட்டீங்க? எப்படி இருக்கிறீங்க? படிக்கவில்லையா? இவை மூன்றும் தான் திருப்பித் திருப்பிச் சுழலும் கேள்விகள்.


ஒரு கட்டத்தில் வெறுத்துப் போய் ஒட்டுக் கேட்பதையே நிறுத்திவிட்டோம். அதற்குப் பின்னர் உலகத்திலேயே அதிக நேரம் கைத்தொலைபேசியில் கதைக்கும், S.M.S அனுப்பும் மனிதர்களாக அவர்கள் மாறியிருந்தனர். பரீட்சைக்காலங்களைக் கூட மறந்து கைத்தொலைபேசியோடு வாழ்ந்த நாட்களைப் பார்த்திருக்கிறேன்.

எவ்வளவுதான் நெருக்கமான உறவு அவர்களுக்கிடையில் இருந்தபோதிலும், ஒரு முறை கூடத் தன்னை நேரில் சந்தித்து கதைக்க அவள் தயாராக இல்லை, அதற்கு காரணம் கூட அவளிடம் இல்லை, என்பதை என்னிடம் கூறி வருத்தப்படுவான். சில வேளைகளில் கற்பனையையே உடைத்துக் கடந்துவிடும் அவனது கற்பனைகள் என்னை ஆத்திரம்கொள்ளச் செய்யும். சிறு சந்தோசங்களுக்காகக் கூட கவலை பூசும் பொழுதுகளிலிருந்து விடுதலையளிக்காத அவளைப் பற்றிய இவனின் காதல் எனக்கு வியப்பாகவே இருக்கும். எத்தனையோ இரவுகள் அவளோடு சண்டை பிடித்துத் தூக்கத்தைக் கிழித்துக் கொண்டு தலையணைகளை நனைத்திருப்பான். எல்லாம் எனக்குத் தெரிந்தும் நான் தலையிட்டதில்லை. ஆனாலும் இரண்டு தடவைகள் அவனைத் தற்கொலை முயற்சியிலிருந்து காப்பாற்றி இருக்கிறேன். இந்த இறுக்கத்தினூடே பயணிக்கும் அவர்களது காதல் சாலை எப்போதும் விபத்துகளுக்குத் தயாராகவே இருப்பதை, அந்தக் காதற் பயணத்தை அவதானிக்கும் ஓர் காதல் வாசகனுக்குத் தெரிகிறது. ஆனாலும் அவர்கள் அதனை உணர்ந்தும் உணராமலும் தமது பொழுதுகளைச் சண்டைகளுக்குள் அமிழ்த்திச் செல்கின்றனர். உயிர் விடுதலுக்கான சமிக்ஞைகள் காட்டிய பின்னும் ஓர் காதல் எனக்கு முன்னால் வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

காதலுக்குள் வாழ்வதை விட காதலுக்கு அண்மையில் வாழத்தொடங்கியதால், ஏன் நியாயபூர்வமான காதல் தற்கொலைகளும், நியாயபூர்வமற்ற கொலைகளும் நிகழ்கின்றன என்பதைக் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. எப்போதும் நமது அழுக்கு நமக்கு தெரியாமல் பக்கத்திலிருப்பவர்க்கே அதிகம் தெரியுமாம். நான் கண்ட காதல் விடயத்திலும் அதுதான் நடந்திருக்கிறது. காதல் வாழ்வதற்கான ஓர் சுதந்திர வெளி. அதில் எவரும் பயணிக்க ஓடங்கள் கிடைக்கின்றன. நீரோட்டத் திசையும், துடுப்பை வலிக்கக் கொண்டிருக்கும் சக்தியுமே வெற்றிகரமான காதல் பயணத்திற்கு வேராய் அமைகின்றன. ★

காதலிப்பவர்களுக்கு மட்டும்...





# வாக்கு மாறாத வாக்கு

## தொலையா நினைவுகள்

எங்கள் கிராமம் பதினைந்து வட்டாரங்களைக் கொண்டது. எங்கள் ஊரிலுள்ள கிராமசபைக்கெனத் தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்கள் தமக்கென ஒரு தலைவரைத் தெரிவு செய்து கொள்வார்கள். அவரது தலைமையிலே கிராமசபையின் நிர்வாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

அன்றைய நாட்களில் நடைபெறும் கிராமசபைத் தேர்தலில் எந்த அரசியல் கட்சிகளும் பெரிதாக ஈடுபடுவதில்லை. அந்தக் கிராமத்தில் வாழும் ஒரு சில படித்தவர்களும் செல்வாக்கு மிக்கவர்களுமே ஒவ்வொரு வட்டாரத்திலும் கிராமசபைத் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்பர்.

பெரும்பாலும் ஒரு வட்டாரத்தில் ஐந்து ஆறு வேட்பாளர்களுக்கு மேல் போட்டியிடுவதில்லை. தேர்தல் தினத்தன்று பெரிதாக எந்தவித அசம்பாவிதங்களும் இடம் பெறுவதில்லை

கனகரண்ணர் எங்களூர்க் கிராமசபைத் தேர்தலில் தன்னை ஒரு வட்டாரத்தில் வேட்பாளராக நின்று வாக்குக் கேட்ட அந்த நாட்கள் எனக்கு நல்ல ஞாபகத்தில் இருக்கிறது.

தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்கான எந்தத் தகுதியும் அவருக்கு இருந்ததில்லை. கனகரண்ணர் அதிகம் படித்தவரல்லர். அரசியலிலும் அவருக்கு ஆர்வமிருந்ததில்லை. சாதாரண ஒரு தொழிலாளியாக உலவித்திரிவார். மக்களோடு அந்நியோன்னியமாகப் பழகுவார். எப்போது சந்தித்தாலும் மதுபோதையிலேயே காணப்படுவார். அது அவரது வழக்கம்.

இந்தக் குடிப்பழக்கம் அவரது மதிப்பைக் குழப்பிக் கொண்டிருந்தது. மூக்குமுட்டக் குடித்தாலும் தானும் தன்பாடுமாகப் பிதற்றிக் கொண்டு திரிவார். ஊராரோடு சண்டைச்சரவின்றி வாழ்ந்தார். இதனால் பலவகையாலும் எல்லோருக்கும் நன்கு அறிமுகமானவர். அவர் வேட்பாளராக நிறுத்தப்பட்ட அந்த வட்டாரத்திலேயே மனைவியுடனும் வாக்குரிமைக்குரிய வயதையடையாத இரண்டு பிள்ளைகளுடனும் வசித்து வந்தார்.

அரசியல் தந்திரத்திற்குள் கனகரண்ணரைச் சிக்குற வைத்து வற்புறுத்தியே தேர்தலில் அவரை நிறுத்தி இருந்தனர். நிறுத்தியவர் வேறு யாருமல்லர். அடுத்த வட்டாரத்தில் ஒவ்வொரு முறையும் தேர்தலில் நின்று அங்கத்தவராகித் தலைவருக்கான போட்டியில் தோல்வி காணும் சங்கரர்தான். கனகரண்ணருடைய வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஒவ்வொரு முறையும் தலைவராகும் கணபதிப்பிள்ளைக்குக் கிடைக்கப்போகும் வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவே இப்பொழுது கனகரண்ணர் நிறுத்தப்பட்டிருந்தார்.

கணபதிப்பிள்ளை தோல்வி அடைந்தால் தனக்கே தலைவர் பதவி கிடைக்கும் வாய்ப்பேற்படும் என்பது சங்கரரின் தந்திரம். இந்தத் தந்திரத்துக்குள் சிக்குண்ட கனகரண்ணரால் அதிலிருந்து உடனேயே விலக இயலவில்லை. அத்துடன் கனகரண்ணருக்கோ கிராம சபையில் அங்கத்தவராகும் ஆசையும் ஊட்டப்பட்டிருந்தது.

ஆயினும் அவர் தேர்தலுக்காக மக்களிடம் வாக்குக் கேட்டுச் சென்றதில்லை. வெறியிலே தள்ளாடி வரும் போது, வழியிலே சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் 'உங்கடை வாக்கை எனக்குப் போடுங்கோ' என்ற கேட்பதோடு நிறுத்திக் கொள்வார்.

மக்களோடு தாம் அந்நியோன்னியமாகப் பழகுவதால் அவ்வட்டார மக்கள் தமக்கு வாக்களிக்கத் தவற மாட்டார்கள் என்பது அவரது எண்ணம்.

தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்றது. வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன. கனகரண்ணரின் வட்டாரத்தில் வழமை போல் கணபதிப்பிள்ளையே வெற்றி பெற்றார். கனகரண்ணருக்குக் கிடைத்ததோ ஒரேயொரு வாக்குத்தான். கனகரண்ணர் குழம்பிப் போனார். தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவேளை மது போதையிலேயே நின்ற கனகரண்ணருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. வாயிலே வந்த வார்த்தைகளால் தனது வட்டார வாக்காளர்களை அரச்சனை செய்தார். அவரை வேட்பாளராக நிற்க வைத்துப் பிரேரித்து அனுமதித்தவர்கள் கூடத் தனக்கு வாக்களிக்கவில்லையே என்ற ஆத்திரத்தோடு வீட்டுக்கு வந்தார் கனகரண்ணர்.

வீட்டில் மனைவியைக் கண்டதும் உள்ளத்தில் கிளர்ந்த கோபம் துள்ளிக் கூத்திட்டது. அவரது மனைவி கூடத் தமக்கு வாக்களிக்கவில்லை என்ற எண்ணமே மேலெழுந்தது. பிள்ளைகள் போட்ட கூச்சலையும் மதிக்காமல் தனது மனைவியை அடித்துப் புரட்டினார். அவளோ 'நான்தான் உனக்குப் போட்டனான் நீதான் வெறியில வேற யாருக்கோ போட்டிட்டாய்' என்று கத்தினாள்.

ஆனால் அவரது மனைவியால் போடப்பட்ட ஒரேயொரு வாக்குத்தான் அவருக்குக் கிடைத்த வாக்கு என்ற உண்மை அவருக்குத் தாமதமாகவே தெரிய வந்தது. தனக்கு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டில் புள்ளடியிடும்போது வழமைபோல் அவர் மது போதையிலிருந்தார். உரியவிதத்தில் வாக்களிக்காததால் அவரது வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதானதை பின்னர் ஒரு பொழுது தெரிந்துகொண்டார். அது அவரது மனத்தை உறுத்தியது. அந்தத் தேரதல் தோல்வியின் பின்னர் அவர் மது அருந்துவதை மாத்திரமல்ல தேர்தலில் போட்டியிடுவதையும் நிறுத்திக் கொண்டார்.

அன்றைய கிராமசபைத் தேர்தல்களைப் போலல்லாது இன்றைய உள்ளூராட்சித் தேர்தல்கள் என்னவோ களியாட்டங்களைப் போலத் தோன்றின. இலங்கையின் திசைகள் அனைத்திருந்தும் திரண்டு வந்தோர் கூட்டத்தாலும் குழப்பங்களாலும் ஒரு வகை அச்ச உணர்வு யாழ். மாவட்ட வாக்காளர் மத்தியில் நிலவியதாகத் தோன்றியது.


மாலை மரியாதையுடன் மக்களைச் சந்தித்த வேட்பாளர்களின் வாக்குறுதிகளால் சுயநன்மை கருதி மயங்கி நின்ற வாக்காளர்கள் சிலரையும் பார்த்தோம். இலவசங்களுக்குத் தமது சுதந்திரத்தை ஈடுவைத்த வாக்காளர்கள் தம்மை இழந்து நின்றதையும் பார்த்தோம்.

எமது மக்களை அடிமை வாழ் விலிருந்து விடுவித்து எமக்கான உரிமைகளை வென்றெடுக்க முயலும் தரப்புக்கு வாக்களித்த திருப்தி எனக்கிருந்தது. ★

**நெடுந்தீவுமகேஷ்**

---

# ஒரு முனையில் திரள்க என்கிறார் கவிஞர். முருகையன்



அன்று தொட்டு இன்றுவரை எமது உரிமைக்காய் உயிர் கொடுத்தோர் பட்டியல் நீண்டு செல்லுகிறது. இன்னமும் ஓயாமல் நமது இலட்சியத்தின் வெற்றிக்காகக் குரல் கொடுத்து வருகின்ற இன உணர்வு குன்றாத மக்களின் கூட்டமும் பெருகியே உயர்கிறது. இந்நிலையில் எம்மிடையே உட்பகையை வளர்த்துப் பூசல்களை உண்டுபண்ணி இன ஒற்றுமையைக் குலைத்தாளும் கூட்டத்தினரும் இல்லாமற் போய்விடவில்லை. அத்தகைய புல்லர்களை இல்லாமற் செய்துவிட வேண்டும் என்கிறார் இக்கவிஞர்

**செல்திசை எது? இனி நாம் செய்வது யாது?**
**எனத் தீட்டுக திட்டம் உடன் ஓட்டுக உட்பகையை**
**புல்லென எண்ணி வெறும் பூசல்கள் சூழ்கிறவர்**
**போயொழிவார் நமது உட்போர்கள் ஒழிந்துவிடின்**

இத்தகைய உட்பூசலை உண்டாக்குவோர் ஒழிந்தால் எமது உரிமைகளைப் பெறுதல் மிகவும் இலகு என்பதைக் கவிஞர் இங்கே வேகும் மனத்தோடு உரைக்கிறார். செல்லும் திசையையும் செய்யப் போகும் காரியத்தையும் உரிமையோடும் உணர்வுகளோடும் சிந்தித்தால் அந்தப் பூசல்கள் அகன்று போகும் என்கின்ற கவிஞரின் உறுதி வரிகள் அவை

**ஒருவர் உரைப்பதனை உளறல் எனப்பிற பேர்**
**ஒழிய மறுப்பதிலும் பகிடி நகைப்பதிலும்**
**அரிய பகற்பொழுதும் அகல் இரவுப் பொழுதும்**
**அழிவு தனிற்படநாம் அலைவது நற்செயலோ?**

**தலைமை பிடிப்பதிலும் தமை உய்ய வைப்பதிலும்**
**சமயம் இதிற் புகுதல் தமிழை அறுப்பதுவோ**
**தொலைக வெறுப்புரைகள் சுயநலம் அற்றொழிக**
**தொழில்கள் மிகப்பெருக விழிகள் திறப்படைக**

ஒருவர் கூறுவதைக் கேட்டு மற்றையோர் அவற்றில் குறைகண்டு கேலி செய்வதிலும், மறுத்துரைப்பதிலும் காலத்தைப் போக்காதீர். அதனால் எமக்கேற்படும் கால தாமதத்திலும் பார்க்க அழிவுகளே அதிகம். அத்துடன் தலைவராவதற்காகச் சூழ்ச்சி செய்வதையும் சுயநல நோக்கோடு தம்மையே உய்விக்கும் செயல்களுக்கான சந்தர்ப்பங்களைத் தேடி அலைவதையும் விட்டு விடுங்கள். வெறுப்புரைகளை விடுத்து எமது மக்களின் மீட்சிக்கான தொழில்களைப் பெருக்குங்கள். சிறந்த வழிகளைக் காண விழிகளைத் திறவுங்கள் என்கிறார்.

**அறம் ஒழிவித்தவரின் அந்தி செகுத்திடவும்**
**அழகு தமிழுக்கு அரியணை அளித்திடவும்**
**திறமை அனைத்தினையும் செயல்பட வைத்திடவும்**
**செருவில் அறப்படையின் ஒருமுனையில் திரள்க**

அநீதியை அழித்திடவும், அழகு தமிழணங்காள் அரியணையில் ஏறிடவும், எமது திறன் அனைத்தையும் ஒன்று கூட்டி ஒரே திசைநோக்கி எமது உரிமைதனை வெற்றி கொள்ள ஒன்றிணைவோம் என்கிறார் அவர். ஒற்றுமைக்கே வலிமை உண்டு எனக் கவிஞர் இங்கே உரத்து ஒலிக்கிறார்.

**முனை ஒருமித்து எதிரி முகம் அடிபட்டுவிழும்**
**முறைமையில் இக்கணமே அறநெறியிற் பெருக**
**இனிய தமிழுக்கு உரிய இடம்உற எத்தடையும்**
**இலை எனும் அப்பெரிய நிலைமை பிறப்படைய**

எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு திசை நின்று போராடினால் எதிரி பயப்படுவான். எமது நீதியின் குரலை உலகம் ஏற்றுக் கொள்ளும். தமிழுக்கு உரியஇடம் கிடைப்பதிலே தடைகள் எதுவும் ஏற்படாது. அத்தகைய ஒரு உயரநிலையை அடைய ஒரு முனையில் திரள்க! ஒன்று படுக! என்கிறார் கவிஞர் இ.முருகையன்.

சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நீர்வேலியில் வாழ்ந்து வந்த கலாநிதியான இ.முருகையன் அவர்கள் புகழ்பூத்த கவிஞராகத் திகழ்ந்தார். நாடகாசிரியராகவும் சிறந்த திறனாய்வாளராகவும் பிரகாசித்தவர். இலங்கை அரசினால் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் அதி உயர் விருதான சாகித்திய இரத்தினம் எனும் விருதை 2007ஆம் ஆண்டு பெற்றுக் கொண்டார்

1950 முதல் கவிதைகளுடன் மேடை நாடகங்களையும் காவியங்களையும் ஆக்கியுள்ளார் 1964 1965 காலப்பகுதியில் வெளிவந்த நோக்கு என்ற காலாண்டுச் சஞ்சிகையின் இணையாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

1935ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி பிறந்தவர். 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி அமரரானார். அவரது இலக்கிய ஆக்கங்கள் என்றும் அமரத்துவமானவை.

**மைதிலி தேவராஜா**

# 83க்கு முன்னரான சிவில் நிர்வாகம் எப்போ?

"வடக்கில் புலிகளின் நிர்வாகமும் இல்லை. இராணுவத்தினரின் நிர்வாகமும் இல்லை. சிவில் நிர்வாகமே நடக்கிறது" - இது அரசாங்கத்தின் அறிவிப்பு.

"வடக்கில் சிவில் நிர்வாகம் பெயருக்குத்தான். இராணுவம்தான் முழு நிர்வாகத்தை நடத்துகிறது. இராணுவ மயமாக்கல் எல்லாவிடயங்களிலும் தாராளமாக அரங்கேறுகிறது".

- இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்து.

போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் கூட சிவில் நிர்வாகம் முழுமையாக வடக்கில் ஏற்படவில்லை. இராணுவத்தின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே நிர்வாகம் நடக்கின்றது. எந்தவொரு வைபவமாக இருந்தாலும் அந்தப் பிரதேச தளபதியை அதற்கு அழைக்க வேண்டும் என்பதே படைத்தலைமையின் நிபந்தனை.



படையினருக்குத் தெரியாமல் அவர்களது அனுமதியின்றி, பிரசன்னம் இன்றி எந்த நிகழ்வுகளும் நடைபெறமுடியாது.

சிவில் நிர்வாகத்தில் சட்டம் ஒழுங்கைப் பேண வேண்டிய பொலிசாரின் பொறுப்பை இராணுவத்தினர் தமது கைகளில் எடுத்துள்ளனர். பொலிசாரின் அனுமதி பெற்றே நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டாலும், படைத் தரப்புக்குத் தெரியப்படுத்தப்படாவிட்டால் அந்த நிகழ்வில் சிக்கல் ஏற்படுவது வழமை யாகி வருகிறது.

புலிகளின் நிர்வாகம் இல்லை என அரசு கூறுகிறது. புலிகளின் நிர்வாகம் இல்லாவிட்டால் படைக் காவலரண் அமைப்பதும், ரோந்து செல்வதும் ஏன் என்று தமிழர் தரப்புக் கேட்கிறது.

நாட்டின் சகல பகுதிகளிலும் அரச அதிபர் தலைமையில் சிவில் நிர்வாகம் நடைபெறுகின்றது. அந்த நிர்வாகத்தில் படையினரோ, பொலிசாரோ, தலையிடுவதில்லை. அந்தப் பிரதேசத்தின் நிர்வாகம் முற்றுமுழுதாக அரச அதிபரின் தலைமையிலேயே இருக்கும். சட்டம், ஒழுங்குப் பிரச்சினை ஏதும் வந்தால் அரச அதிபர் பொலிசாரின் சேவையைப் பெறுவார். நிலைமை மோசமாக இருக்கும் பட்சத்தில் கலவரம் அடக்குதல் போன்றவற்றுக்குப் படையினரை அரச அதிபர் அழைப்பார்.

ஆனால் வடக்கு- கிழக்கில் கடந்த 30 வருடங்களாக இடம் பெற்ற போர் காரணமாக இராணுவத்தினரிடம் கைமாறிய சிவில் நிர்வாகம், போர் முடிந்த பின்னரும் அதே நிலையில் தொடர்கிறது.

இரு வருடங்களாகத் தொடரும் படையினரின் சிவில் நிர்வாகம் உள்ளூராட்சித் தேர்தலுடன் உச்சம் பெற்றுள்ளது. வடக்கு- கிழக்கில் குறிப்பாக தமிழ் மாவட்டங்களில் அரச அதிபர்கள் பொம்மைகளாகவே நிர்வாகம் செய்கிறார்கள். அவர்களுக்கு மேல் நிர்வாகத்துக்கு ஜனாதிபதியும் அமைச்சர்களும் இருந்த போதும், வடக்கு- கிழக்கு நிலைமை வேறு. அரச அதிபர்கள் எது செய்ய வேண்டுமானாலும், அந்தப் பிரதேச இராணுவத்தளபதியின் கட்டளைப் படியே சேவையாற்ற வேண்டியுள்ளது.

சிவில் நிர்வாகத்தில் எப்போது படையினரின் கை விலக்கப்படுகிறதோ அப்போது தான் உண்மையான சிவில் நிர்வாகம், அதாவது 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலை ஏற்படும்.

சிவில் நிர்வாகத்தில் பங்காளிகளாக மக்களும் இணைந்து கொள்ள முடியும். இராணுவ மயமாக்கப்பட்ட சிவில் நிர்வாகம் என்ற தமிழர் தரப்பு குற்றச்சாட்டுக்கும் முற்றுப் புள்ளி வைக்கமுடியும்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் பொதுமக்கள் எவ்வாறு அச்சமின்றி, பயம் பீதியின்றி சுதந்திரமாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி சிவில் நிர்வாகத்தில் பங்களித்தார்களோ அந்த நிலை மீண்டும் வரவேண்டும் என்பதே சகலரின் எதிர்பார்ப்பாகும்.

போர் முடிந்து 2 வருடங்கள் கழிந்த போதும், புலிகளின் நிர்வாகமோ, இராணுவத்தின் நிர்வாகமோ இல்லை. சிவில் நிர்வாகம் தான் நடக்கிறது என்று அரசு கூறவேண்டிய நிலை ஏற்பட் டிருக்க மாட்டாது.


இன்னமும் சிவில் நிர்வாகம் ஏற்படாத காரணத்தால்தான், சிவில் நிர்வாகம்தான் நடக்கிறது என்று அரசு அடித்துக் கூற வேண்டியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுடன் முற்றுமுழுதாகச் சிவில் நிர்வாகம் மக்கள் கைகளுக்கு வருமானால் அபிவிருத்திப் பணியாக இருந்தால் என்ன, எந்த செயற்பாடாக இருந்தால் என்ன மக்கள் அச்சமின்றி, பீதியின்றி அவற்றில் பங்கேற்க வாய்ப்புக் கிட்டும்.

இந்த நிலை எப்போது ஏற்படும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். ★

■ யாழவன்

# 10 ஆம் கட்டப் பேச்சு அரசு பதில் அளிக்குமா?





உள்ளூராட்சித் தேர்தல் காரணமாகத் தேங்கி நிற்கும் அரசு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான 10 ஆம் கட்டப் பேச்சு தேர்தல் முடிந்த கையோடு அடுத்தமாதம் 4 ஆம் திகதி நடக்கப்போகிறது.

தேர்தலில் ஏட்டிக்குப் போட்டியாகப் பிரசாரங்களில் ஈடுபட்ட அரசு தரப்புக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தரப்புக்கும் இடையிலான 10 ஆம் கட்டப்பேச்சு எந்தத் திசை நோக்கிச் செல்லப்போகிறது என்பதையே சகலரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இரு தரப்பினரும் எதிரும் புதிருமான கருத்துக்களை அள்ளி வீசி தமது தரப்பு நியாயங்களை வெளிப்படுத்தியதால் உருவாகியுள்ள ஒரு முரண்பாடான நிலையில் 10 ஆம் கட்டப் பேச்சு இடம்பெறப் போகிறது.

தமிழ் மக்களின் உண்மை நிலையை சர்வதேசத்துக்குக் காட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முனைந்துள்ளது. ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை, சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பு ஆகியவற்றினால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள கெட்ட பெயரைச் சீர்படுத்தி, தமிழர் தம் பக்கம் நிற்கிறார்கள் என்று காட்ட அரசு முனைந்துள்ளது.

இதற்காக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பெரும் பட்டாளம் ஒன்றைக் களம் இறக்கியுள்ளது அரசு. வேட்டிகள், சேலைகள், உள்பாவாடைகள், சாரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், கொடுப்பனவுகள் என மக்களுக்கு அள்ளிக்கொடுக் கிறது அரசுத் தரப்பு.

நிகழ்வுகளை ஏற்பாடு செய்து அவற்றில் வைத்து அன்பளிப்புப் பொதிகளை வழங்குவதற்குப் புறம்பாக, வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்றும் உதவிப் பொருள்களை வழங்கினார்கள்.

அரச வளங்கள் இந்த அன்பளிப்புப் பொதியாக மக்களைச் சென்றடையும் நிலையில், தேர்தலைத் தமக்குச் சாதகமாக்க அரசு செயற்பட்டது. இரு தரப்பினரும் தமது இலக்கை நோக்கி தேர்தல் பிரசாரங்களில் ஒருவருக்கு ஒருவர் எதிராக கோஷங்களை எழுப்பிய பின்னர் அடுத்த வாரம் ஓகஸ்ட் 8 ஆம் திகதி 10 ஆம் கட்டப் பேச்சில் ஈடுபடப்போகிறார்கள்.

ஜனவரி மாதம் முதல் இடம்பெற்று வரும் பேச்சுக்களில் கூட்டமைப் பினர் தமது யோசனைகளை முன்வைத்தனர். அந்த யோசனைகள் தொடர்பாக எழுத்து மூலப்பதிலை 7 ஆம் கட்டப் பேச்சின் போது சமர்பிக்க அரச தரப்பு இணங்கியது.

ஆனால் அதற்கு பின்னர் இடம் பெற்ற இரு கட்டப் பேச்சுக்களிலும் எழுத்து மூலப்பதிலை வழங்காது, கால அவகாசத்தை அரசு கோரியது. அடுத்த கட்ட 10 ஆம் கட்டப் பேச்சில் அரசு எழுத்து மூலமான பதிலைக் கூட்டமைப்புக்கு வழங்குமா? அல்லது தொடர்ந்து காலத்தை இழுத்தடிக்குமா? என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

தேர்தலில் கிடைக்கும் தீர்ப்பை மதித்து அரச தரப்பு கூட்டமைப்புடன் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தித் தீர்வு ஒன்றை நோக்கிச் செல்லுமாயின் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசத்திலும் அரசு தனது மதிப்பைப் பேணலாம்.

அதைவிடுத்து தான் வைத்ததுதான் சட்டம் எனச் செயற்பட முனைந்தால், நாட்டின் மதிப்பு குறையுமே தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை. இதுதான் யதார்த்த நிலை. ★

சுடர் ஒளி

24, ஜுலை - 30, ஜுலை, 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன் 0115738005
பக்ஸ் 0115517844 - 5
E-mail: editorial@sudaroli.com

## முடிவு தெரிந்ததுதான்

எத்தனை துயரத்திலும் ஒரு சிரிப்பு என்பது போல துன்பங்களுக்குள் மட்டுமே உழன்று வரும் வடக்கு மக்களின் முகங்களில் கடந்த சில வாரங்களாகப் புன்முறுவல் அவ்வப்போது வந்து போகிறது.

தங்கள் வீடு தேடிவரும் அரசியல்வாதிகளின் கூழைக் கும்பிடுகளையும் குளையல் பேச்சுக்களையும் பார்க்கும் போதும் கேட்கும் போது மட்டுமே அவர்கள் முகங்கள் புன்னகை பூக்கின்றன. குறிப்பாக அவர்கள் எட்ட நின்றும் தொட்டுப் பார்க்க முடியாத பளபளக்கும் பஜிரோக்களில் வரும் வெள்ளையும் சொள்ளையுமான தொந்தி பெருத்த மனிதர்கள் அவர்களைக் குனிந்து வணங்கும் போது அவர்களால் தங்கள் புன்சிரிப்புக்களைக் கட்டுப்படுத்த முடிவதில்லை.

அதனால்தான் "அடிக்கடி தேர்தல் வந்தால் நன்றாய் இருக்கும்" என்று அவர்கள் முணுமுணுக்கிறார்கள்.

வடக்கில் இம்முறை நடந்த உள்ளூராட்சித் தேர்தல் வழக்கத்துக்கு மாறானது. இதற்கு முன்னர் நடந்த பொதுத் தேர்தல்கூட இவ்வளவுக்கு களைகட்டி இருக்குமா என்று எண்ண வைக்கும் அளவுக்கு இந்தத் தேர்தலில் அரச தரப்பும் எதிர்த் தரப்பும் செயற்பட்டுக் கொண்டன.

தேர்தல் நடந்த வடக்கு மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு என்பன இத்தகைய ஒரு உள்ளூராட்சித் தேர்தலை வரலாற்றில் கண்டதில்லை. தேர்தல் தில்லுமுல்லுகள், அமைச்சர்கள் படையெடுப்பு, இலவசங்களின் அணிவகுப்பு, தேர்தல் சட்ட மீறல்களின் விகாரச் சிரிப்பு என்று முக்கிய தேர்தலாக வடக்கின் சாதாரண உள்ளூராட்சித் தேர்தல் மாறிவிட்டது.

தமிழகத்தில் வாக்காளர்களுக்குப் பணம் கொடுப்பதாக இருந்தால் கட்சியினர் இரகசியமாகத்தான் செய்வார்கள். சில இடங்களில் பணம் கொடுக்கும்போது பொதுமின்சாரத்தை நிறுத்தி விட்டுத்தான் கொடுத்தார்கள் என்று தமிழக ஊடகங்கள் கூறின.

ஆனால் இங்கோ, பட்டப்பகலிலேயே மக்களுக்கு கையூட்டுக்களையும் இலவசங்களையும் அரச உதவி, அரச மானியம் என்ற பெயரில் கொடுப்பதற்குக் அமைச்சர்களும் அரசியல்வாதிகளும் கூச்சப்படவேயில்லை. ஜனாதிபதியின் பிரசார மேடையில் வைத்து அடுத்த நாள் காசு கொடுக்கப்படும் என்று அறிவித்து முதல்நாளே 2,500 பேருக்கு 'டோக்கன்கள்' கொடுக்கப்பட்ட கொடுமையும் நிகழ்ந்தது.

எல்லாம் வாக்குகளுக்காகத்தான். தெற்கில் தமிழன் மீதான வெற்றி என்ற போதை, வடக்கில் தோற்ற மக்களுக்கு நிவாரணமும் பணமும் இதுதான் அரச தரப்பு வாக்குகளைக் கொள்ளையடிக்க கைக்கொள்ளும் தாரக மந்திரமாக மாறி இருக்கிறது.

இதைத் தடுக்கவோ தட்டிக் கேட்கவோ திராணியற்ற எதிர்க்கட்சிகளே தெற்கிலும் வடக்கிலும் இருக்கின்றன என்பதே இன்றைய சோகம். தெற்கில் முக்கிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் செய்வதற்கு ஒன்றும் இல்லை. வடக்கிலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்வதற்கு எதுவுமே இல்லை.

ஆனால், இந்தக் கட்சிகளும்கூட தேர்தலின் போது மக்களின் வீடு தேடி வந்துவிடுகின்றன என்பதுதான் மக்களின் ஒரே ஆறுதல்.

இந்தத் தேர்தலில் அரசுக்கு வெற்றி அவசியம். எத்தனை ஆயிரம் தமிழர்களைக் கொன்றாலும் அவர்கள் அரசுடன்தான் இருக்கிறார்கள் என்று உலகுக்குக் காட்ட வேண்டிய அவசியம் எழுந்திருப்பதுதான் அதற்குக் காரணம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ எஞ்சியிருக்கும் தமிழ்த் தேசியத்தையும் தமிழர்களின் விடுதலை வேட்கையையும் வெளிப்படுத்துவதற்கான கடைசிப் பிடிமானமாக இந்தத் தேர்தல் மாறிப் போய் இருக்கிறது.

ஆனால், இலங்கை சுதந்திரம் பெற்றது முதலே வடக்குத் தமிழர்கள் தேசிய அரசியல்வாதிகளைத்தான் ஆதரித்து வந்திருக்கிறார்கள் என்று தேர்தலைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பே தனது இடைக்கால அறிக்கையில் கூறி உள்ளது. அப்படி இருக்கையில் முடிவுக்காக காத்திருக்கத்தான் வேண்டுமா என்ன?

# குருதி தோய்ந்த பொழுதுகள்

■ தமிழ்ச்சித்தன்



**1983 ஜுலை. 23ஆம் திகதி.** திருநெல்வேலிச் சந்திக்கு சமீபமாக தபால்பெட்டிச் சந்தியடியில் உறுமியபடி வந்தது இலங்கை இராணுவத்தின் வாகனமொன்று. வரப்போகின்ற ஆபத்தை அறியாதவர்களாக உயிர்குடிக்கும் ஆயுதங்களோடு எக்காளச்சிரிப்புடன் வந்து கொண்டிருந்தனர் படையினர். தபால் பெட்டி சந்தியை வாகனம் நெருங்கிய சமயத்தில் டமார்!

பேரோசை காற்றில் கலந்தது.தொடர்ந்து துப்பாக்கிகளும் முழங்கின. அந்த இடத்திலேயே 13 இராணுவத்தினர் பலியாகியிருந்தனர். இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரும் உயிரிழப்பை இராணுவம் அப்போதுதான் சந்தித்திருந்தது. திடீரென விழுந்த பேரிடியால் நிலைகுலைந்து போன சிங்களப்பேரினவாதிகள் தம் ஆத்திரத்தை, இழப்பை மனித உயிர்களால் ஈடுசெய்ய முனைந்தனர் . 1983 ஜுலையில் இலங்கைத்தீவெங்கும் இனவாதத்தீ ஒரு நாளிலேயே மூண்டெரியத் தொடங்கியது.

இது இலங்கைத் தீவில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான முதலாவது இனக் கலவரமல்ல. இதற்கு முன்னரும் இத்தீவில் 1956, 1958, 1974, 1977,1979, 1981 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாகப் பல கலவரங்கள் தமிழர்களுக்கு எதிராகத் தாண்டவம் எடுத்து ஆடியிருந்தன. அவ்வப்போது, தமிழர்களுக்கு எதிராக வெடித்த இந்த இனக் கலவரங்களை தமிழர், சிங்களவர் ஆகிய இரு இனத்தவருக்கும் இடையே நிலவிய வெறும் இனப்பகை உணர்வின் வெளிப்பாடாகத் தானாகவே கிளர்ந்து வெடித்த வன்செயல்கள் என்று மட்டும் கருதிவிட முடியாது. தமிழ் மக்களுக்கு எதிரான மிகக் கொடூர வன்முறைகளும், வெறியாட்டங்களும் பெரும்பாலும் பௌத்த சிங்களப் பேரினவாதப் போக்குடைய ஆட்சியாளர்களால் இன அழிப்பு இலக்கின் அங்கமாகத் திட்டமிட்டு ஏவப்பட்டவையாகவே அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன.

**திருநெல்வேலி சம்பவம் ஒரு நொண்டிச்சாக்கே**

1983 ஜுலை கலவரம் வெடிக்க முன்னரே, அதற்கு முந்திய ஜுன் மாதத்திலேயே வவுனியா, திருகோணமலை போன்ற தமிழர் தாயகப் பகுதிகளிலும், மலையகத் தமிழர்களின் வாழிடங்களிலும் தமிழர்களுக்கு எதிரான வெறியாட்டங்கள் ஆரம்பித்துவிட்டன. டசின் கணக்கான தமிழர்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். நூற்றுக் கணக்கில் வீடுகள், வாசல்கள், கடைகள், ஆலயங்கள் எரித்துச் சாம்பராக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பல தமிழ் இளைஞர்கள் சீருடையினரால் கொன்றொழிக்கப்பட்டனர். .யாழ்., திருநெல்வேலியில் ஜுலை 23இல் புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து திருநெல்வேலியிலும், கந்தர்மடத்திலும் இனவெறிச் சன்னதம் ஆடியது சிங்கள இராணுவம். அறுபது பொதுமக்கள் அங்கு சீருடையினரால் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர். அதன் பின்னர், முன்னெப்போதும் இடம்பெற்றிராத கொடூர இன வன்முறையாக இலங்கைத் தீவு எங்கும் கலவரம் விஸ்வரூபம் எடுத்தது. இரத்தப் பிரளயமாக வெடித்தது. தட்டிக் கேட்பாரின்றி இனவெறியாட்டம் தலைநகர் கொழும்பிலும், ஏனைய தென்னிலங்கைப் பிரதேசங்களிலும் அலை அலையாகச் சீறிப் பரவியது. தமிழரின் குருதி ஆறாய்ப் பெருக்கெடுத்தோட அவர்களின் சொத்துகளும், உடைமைகளும், உடலங்களும் தீயில் கருகின.பல தமிழ்க் குடும்பங்கள் உயிரோடு எரிக்கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான பல்லாயிரக் கணக்கான வீடுகள், கட்டடங்கள், மண்டபங்கள், எரிபொருள் நிலையங்கள், வர்த்தக மையங்கள் என்பன சூறையாடப்பட்டு பின்னர் எரித்து கரிமேடுகள் ஆக்கப்பட்டன.இந்த இனக் கலவரத்தில் பேரினவாத ஆட்சியாளர்களினதும், அரசியல் பிரமுகர்களினதும், அரச அதிகாரிகளினதும் கறைபட்ட கரங்கள் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தமையைச் சரித்திரம் பகர்கின்றது. தமிழர்களின் இன அடையாளத்தைக் குறிவைத்து தமிழர்களின் உயிர்கள், உடைமைகள், பொருளாதார வாழ்வு ஆகியவற்றை அழிப்பதோடு சிங்களக் காடைத்தனம் அடங்கி விடவில்லை. தமிழரின் இருள் படிந்த வரலாற்றுக் காலத்தின் அருவருக்கத்தக்க மிகப்பெரும் கொடூரம் இதே காலத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் அரங்கேறியது. சிங்களக் கைதிகளும், சிங்களச் சிறைக்காவலர்களும் கூட்டுச் சேர்ந்து சிறைக் கூண்டுகளை உடைத்து, நிராயுதபாணிகளான 35 தமிழ் அரசியல் கைதிகளைக் கண்ட துண்டமாக வெட்டி, குரூரமாக அவர்களது உடல்களைக் குத்திக் கிழித்துச் சிதைத்துச் சரித்து அட்டூழியம் புரிந்து தமது மிருகத்தனத்தை வெளிப்படுத்திக் கொண்டனர்.

**கறுப்பு ஜுலை விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனை**

தமிழினத்துக்கு இவ்வளவு மோசமான கெடுதியை ஏற் படுத்திய கறுப்பு ஜுலை கலவரம் பேரழிவிலும் ஒரு நன்மை என்பது போல தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய திருப்புமுனையை ஏற்படுத்தி, கௌரவமான வாழ்வுரிமை குறித்து அவர்களுக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றையும் பெற்றுத் தரவும் தவறவில்லை.தமிழர்களுக்குப் பேரழிவைத் தருகிறோம் என்ற முனைப்போடு பௌத்த சிங்களம் கறுப்பு ஜுலையில் விதைத்த வினையின் விளைவை இன்றும் அது அறுத்துக் கொண்டிருக்கின்றது. இனக் கலவரம் என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிராக் சிங்களம் புரிந்த பல் பரிமாண ஒடுக்கு முறையின் ஒட்டுமொத்தப் பாதிப்பு பாரதூரமான பல விளைவுகளை ஏற்படுத்தியது. இலங்கைத் தீவில் இன முரண்பாட்டை அது மேலும் கூர்மையடைய வைத்தது. இரு தேசியங்களின் மையமான இலங்கைத் தீவில் தமிழர் தேசம், சிங்கள தேசம் ஆகிய இரு தேசங்கள் மத்தியில் நல்லிணக்கமும், சமரச சகவாழ்வும் ஏற்படுவதை இது அசாத்தியமாக்கியது. தமிழ் மக்களிடையே விடுதலை நோக்கிய தீவிரப் போக்கையும், போராட்ட உணர்வையும் அது வலுப்படுத்தியது. தமிழர்களின் உரிமைக்காகப் போராடும் ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம் முழு அளவில் தோற்றம் கொள்வதற்கான ஒரு புற நிலையை இது உருவாக்கியது.

(19 ஆம் பக்கம் பார்க்க....)

# ஒப்பரேஷன் நரோனிமா?

■ பிரமன்



**தே**வலோகத்தில் டென்ஷன் எல்லா இடங்களிலும் குடிகொண்டிருந்தது. நாதுவை மீட்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து எல்லாத் தரப்புகளுடனும் யமனும், தேவேந்திரனும் சட்டலைற் போனில் இடைவிடாது தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தார்கள். ஆனாலும் முன்னேற்றம் ஏற்பட்டதாகத்தெரியவில்லை. தேவலோகத்துத் தொலைக்காட்சிகள் எல்லாம் 24 மணிநேரமும் நாதுவின் நிலை பற்றி தமது ஊகங்களை வெளியிட்டபடியே இருந்தன. போதாக்குறைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் நடைபெறும் தேர்தல் கூத்துக்களை பொழுதுபோக்காகக் காட்டியபடியுமிருந்தன. பேட்டி எடுக்கப்போன இடத்தில் அடைபட்டிருந்தாலும் தன்னுடைய செல்போன் திருவிளையாடல்களைக் கைவிட நாது தயாராயில்லை. கண்ணில் தென்படுவோரிடம் கெஞ்சிக் கூத்தாடி, தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்கு தன்னுடைய செல்போனைக் கொடுத்து அனுப்பிஅங்கு நடைபெறும் நிகழ்வுகளை வீடியோக்களாக்கி உடனுக்குடன் தேவலோகத்துக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். இடைக்கிடையே தன்னுடைய மந்திர சக்தி வேலை செய்கிறதா? என்று நாது 'செக்' பண்ணிக் கொண்டார். எல்லா மந்திரங்களும் வேலை செய்தன. ஆனால் பூமியிலிருந்து தேவலோகத்துக்குப் பயணம் செய்யக்கூடிய மந்திரம் மட்டும் வேலை செய்யாமல் அடம்பிடித்துக் கொண்டிருந்தது. இன்னமும் நாய்கள் நாது இருந்த இடத்தைவிட்டு அசைவதாகத் தெரியவில்லை. அவை ஏதோ செய்வினை செய்துதான் நாதுவின் பயண மந்திரத்தை முடக்கி இருக்கவேண்டும்.

நாதுவைப் பற்றிக் கவலை கொண்டிருந்த தேவலோக வாசிகளுக்கு நாது இரகசியமாக அனுப்பிக் கொண்டிருந்த எலெக்ஷன் திருவிழாக் காட்சிகள் கொஞ்சம் மனப்பாரத்தைக் குறைக்க உதவி செய்தன. இதுவரையும் ஏறெடுத்தும் பார்க்காத பகுதிகளுக்கெல்லாம் பெரியவர்களின் பாதங்கள் படலாயின. அடிக்கடி ஹெலிகள் இந்தப்பகுதிகளை வட்டமிட்டுக் களைத்தன. வாட்டர்பம்ப், டிரக்ரர், வலைகள் என வாழ்வாதாரத்துக்குத் தேவையான பொருள்கள் நல்லூர் மணிக்கடைகள் போல பரப்பப்பட்டு, பார்ப்போரின் வாய்களில் எச்சில் ஊற வைக்கப்பட்டது. கூட்டத்துக்காக அழைக்கப்பட்டவர்கள் நாள்முழுக்க காத்திருக்க வைக்கப்பட்ட பின்னர் அந்தப்பொருள்களை சம்பிரதாயமாக வழங்கிப் பின்னர் மீளவும் கொடுத்தவர்களாலேயே எடுத்துக் கொள்ளப்பட்டது". எங்களுக்கு நீங்கள் வோட் பண்ணினால் மட்டும்தான் இதை உங்களிட்டை நிரந்தரமாகத் தருவம். இல்லாட்டி உங்களுக்கு இதுகள் ஒண்டும் கிடையாது" என்று சொல்லப்பட்ட பின்னர், கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள் பெட்டிகளில் வெகுபக்குவமாக அடுக்கப்பட்டு அடுத்த கூட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இப்படியே அந்தப்பொருள்கள் வடபகுதியெங்கும் பவனி வந்து கொண்டிருந்தன. உண்மையில் அந்தப்பொருள்கள் யாருக்குக் கிடைக்கப்போகின்றன என்பதை எல்லாம் வல்ல நாதுவால் கூட யூகிக்க முடியவில்லை சில வேளைகளில் சனங்கள் தண்ணீர்த் தாகத்தை தீர்க்க பௌஸர் கேட்க, இராணுவத்துக்கு அந்த பௌஸர்களைக் கொடுத்த கதையாக, இந்த வலை, வாட்டர் பம்ப் எல்லாவற்றையும் படையினருக்கே கொடுத்தாலும் ஆச்சரியப்பட முடியாது. ஏனென்றால் இலங்கை ஆசியாவின் ஆச்சரியமல்லவா?.

நாதுவின் நிலையைப் பார்த்து கே.பிக்கு ஒரே யோசனை. நாது மாட்டுப்பட்டது மாத்திரமல்லாது அநியாயமாகத் தன்னுடைய பேட்டியும் ஒளிபரப்பாகாமல் போய்விட்டதே என்ற கவலை அவருக்கு. பழக்கதோஷம் அவரது வாயில் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தது. சட்டென கேபி நாதுவின் பக்கம் திரும்பினார்.

"உந்த நாயள் இப்போதைக்கு அடங்கமாட்டுதுகள். வேணுமெண்டால் உங்களை இஞ்சையிருந்து மீட்க ஒரு ஹெலி ஏற்பாடு செய்யட்டோ? தலைவருக்கும் இப்பிடி ஒரு ஏற்பாட்டில இறங்கினனான்" கே.பியின் யோசனை சும்மாயிருந்த நாதுவுக்கு ஏக்சுக் காய்ச்சலைக் கொண்டுவந்தது. கே.பியின் ஹெலி யோசனை வன்னியில் ஏற்படுத்திய அழிவுகளை நாதுவுக்கு ஞாபகமூட்டியது.

ஒபாமாவோட யமன் கதைச்சிருக்கிறாராம். சில வேளைகளில சீல் படை வந்து உங்களை தேவலோகத்துக்கு அனுப்பவும் சான்ஸ் இருக்கு. அநேகமா அதுக்கு 'ஒப்பரேஷன் நரோனிமா' எண்டு பேர் வைப்பாங்கள். எதோ ஒரு அற்புதம் நடக்கும். கவலைப்படாதையுங்கோ". பழைய வார்த்தைகளை மீண்டும் சொல்லவேண்டிய நிலை கே.பிக்கு. அமெரிக்கன் நேவி வந்திறங்கிற கதைதானே கடைசியில எல்லாத்தையும் நாசமாக்கினது? இனியும் இந்தக் கதைகளை நம்பிக்கொண்டிருப்பதற்கு நாது ஒன்றும் தெரியாதவரல்லவே?.

இங்கிருந்து மீள்வதற்கான ஒரேயொரு வழி சாட்சிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் விழுவதுதான் என முடிவெடுத்துக் கொண்ட நாது, ஒரு வெள்ளைக்கொடியை ஏந்தியவாறு தானிருந்த அறையைவிட்டு வெளியே வந்தார்.

நாய்கள் நல்ல பிராணிகள். யுத்த தர்மத்தை அவை சீராகக் கடைப்பிடித்தன. இல்லாவிட்டால் வெள்ளைக் கொடியோடு வந்த நாது கட்டி வைக்கப்பட்டு உயிரோடு தீவைக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம். மனிதர்களை விடவும் நாய்களிடம் மனிதாபிமானம் நிறைய இருப்பதை நாது உணர்ந்து கொண்டார். பேச்சுவார்த்தை ஆரம்பமானது. "என்னை ஏன் இப்பிடி தேவலோகம் போகவிடாமல் மறிச்சு வைச்சிருக்கிறீங்கள்?" இது நாது.

"அதுதான் முதலே சொல்லிபோட்டமே. இவங்கள் மனிசர் தங்கட எலெக்ஷன் விளையாட்டுக்கு எங்களைப் ப்லியாக்குறாங்கள். தங்களுக்குப் பிடிக்காத ஆக்களை வெருட்டுறதுக்கு எங்கட இனத்தைச் சேர்ந்தவையை தலையை வெட்டி, முண்டத்தைக் கொழுவி செய்யக்கூடாத வேலையெல்லாம் செய்யிறாங்கள். இதை நிப்பாட்ட நீங்கள் நடவடிக்கை எடுக்க வேணும். ஆகக் குறைஞ்சது உந்த எலெக்ஷன் முடியிற வரைக்கும் நாய்களின் உயிரை பறிக்கமாட்டேன் எண்டு யமன் எழுத்து மூலமா எங்களுக்கு உத்தரவாதம் தரவேணும்" நாய்கள் ஒரே குரலில் கூறின. தன்னுடைய செல்போனுக்கு உயிர் கொடுத்த நாது யமனுடன் அவசரமாகத் தொடர்பினை ஏற்படுத்தினார். நாய்களின் கோரிக்கையை அவர் யமனின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். முதலில் நாய்களின் கோரிக்கைக்கு இணங்க மறுத்த யமன், பின்னர் நாதுவின் நிலையைக் கருத்திற் கொண்டு 23 ஆம் திகதி வரை நாய்களின் உயிரைப் பறிக்கமாட்டேன் எனக் கையெழுத்திட்டு, பக்ஸில் அனுப்பி வைத்தார். நாய்களுக்கு நல்ல சந்தோஷம். கொஞ்ச நாளைக்காவது நிம்மதியாக இருக்கலாம் என அவை எண்ணிக்கொண்டன. நாதுவின் பயண மந்திரம் பழையபடி வேலை செய்யத்தொடங்கியது. மறுகணமே நாது தேவலோகத்துக்குப் பறந்தார்.

"எலெக்ஷன் முடிஞ்சவுடன கட்டாயம் நீங்கள் இஞ்ச வந்து என்னைப் பேட்டியெடுக்கவேணும்" என கே.பி கெஞ்சலோடு விடைகொடுத்தார்.

அன்று மாலை தொலைக்காட்சியைப் பார்த்த நாதுவுக்கு தலை சுற்றியது.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் நாய்களின் சடலங்கள். அந்த நேரத்தில் யமனிடமிருந்து நாதுவுக்கு தொலைபேசி அழைப்பு.

"நாது! நியூஸ் பாத்தனியா?"

"பாத்திட்டு தான் இருக்கிறன். நீங்கள் கூட சொன்ன சொல்லை மீறிட்டிங்களே? ஏன் நாய்களின் உயிரைப் பறித்தீர்கள்?"

நாது ஆதங்கத்தோடு கேட்டார்.

"சத்தியமா நாது எனக்கொண்டும் தெரியாது. உவங்கள் என்னை மாதிரி போலி யமன் ஒண்டை உருவாக்கி நாய்களின்ர உயிரை எடுக்கிறாங்கள். உதைப்பற்றி எல்லாருக்கும் நாங்கள் விளங்கப்படுத்த வேணும்". யமன் சொல்லச்சொல்ல நாதுவுக்கு கிறுதியே வந்துவிட்டது. கட்டாயம் அடுத்தமுறை நாய்கள் தன்னைச் சும்மாவிடாது என்பது நாதுவுக்கு புரிந்துபோனது.

## விசேட பொழுதுபோக்குகள்


பொழுதுபோக்குகள் பலவிதம். அவை ஒவ்வொன்றும் ஒருவிதம். இது சற்றுக் கடினமான பொழுதுபோக்கு வகை. வெவ்வேறு இன நாய்களை சேர்ப்பதுதான் castle என்பவரின் விசித்திரமான பொழுதுபோக்கு. இவரிடம் சுமார் 200 க்கும் மேற்பட்ட நாய்கள் இனம் இருக்கின்றனவாம்.



இந்தச்சாதனை கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றிருக்கிறதாம். ஆனால் இவைக்கு தினமும் உணவு வைக்க வேண்டிய தேவையில்லை....

அப்படியானால் எப்படி அவை உயிர்வாழ்கின்றன என எண்ணுகின்றீர்களா?

இவையனைத்தும் உயிரற்ற பொம்மைகள்!





■ அ.சூரியன்

அறிவியல் தொடர்கதை...

# ஆகாய ஆபத்து!



## பாகம் - 04

அதிகாலை ஐந்தரை மணிக்கு அந்தப் பத்திரிகை நிறுவனத்தில் சுதா சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான். நான்கைந்து தடவைகளுக்கு மேல் ஒன்றன்மேல் ஒன்றாக வந்த தொலைபேசிஅழைப்பே அவனை அவ்விதம் சுறுசுறுப்பாக்கியிருந்தது. அதுவும் அவனாகச் சுறுசுறுப்படையவில்லை. அந்தப் புகழ் பூத்த பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர் அவனை இவ்வாறு உசுப்பி விட்டிருந்தார். என்ன தான் செய்தி அது? அந்தச் செய்தி சுதாவுக்குக் கிடைத்தது இப்படித்தான்.

முதல் நாள் ஏதாவதொரு பெறுமதியான செய்தியைத் திரட்டுவதற்காக அலையோ அலையென்று அலைந்து கடைசியில் திருநெல்வேலியில் பட்டப் பகலில் நடந்த தாலிக்கொடியறுப்புச் சம்பவத்தைக் கட்டம் கட்டிப்போடும் விதத்தில் அழகாக விபரித்து எழுதிக் கொடுத்துவிட்டு வந்தான். மாலை ஆறு மணிக்கு வீட்டிற்கு வந்தபோது அவனது ஆசைத் தங்கை, அழகிய பதினாறு வயதான சுபா நான்கு நாட்களுக்கு முன்னர் எழுதித் தருமாறு கேட்டிருந்த கவிதையை இதுவரை எழுதித் தரவில்லையென்று அவனிடம் சண்டைக்கு வந்தாள். "எடி நீ படிப்பது, நானா ஒப்படை எழுதுவது?" அவன் பேசியதனால் அவள் தனது அழகிய சிவப்பான கன்னத்தில் மேலும் சிவப்பை ஏற்றியபடி எங்கே,எப்படி சிணுங்கலை ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருக்கும் போதே தன்னுடைய ஹீரோ ஹொண்டாவை ஸ்ராண்ட் பண்ணிவிட்டு வந்து சுபாவின் கன்னத்தை வெடுக்கெனக்கிள்ளி மேலும் சிவப்பேற்றிவிட்டு வீட்டுக்குள் ஓடினான் சுதா. மான்போல் ஒரு கணம் அவன் பின்னால் துள்ளி ஓடிய சுபாவும் ''பாருங்கம்மா, அண்ணாவை'' என வீட்டுக்குள் ஏதோ வேலையாக இருந்த அம்மாவையும் உதவிக்கு அழைத்தாள். அம்மாவும் போதாததற்குமாய் 'எடேய் என்னடா சுதா; வந்ததும் வராததும் அவளோட சண்டைக்குப் போகிறாய்?' என்று ஒரு பாட்டம் சத்தம் வைக்க, அப்படியே கிணற்றடிக் குப்போய் கை, கால் முகம் கழுவிவிட்டு வந்த சுதா இரவு இந்திய ரீ.வி நியூஸில் தொடங்கி 9.45 பீ.பி.சி.ரேடியோ தமிழ் நியூஸ் வரை கேட்டுவிட்டு தங்கை சுபாவுக்காக 'பொய்யா மொழிப்புலவர்' கவிதையொன்றையும் எழுதி வைத்துவிட்டு படுக்கைக்குச் செல்லும்போது நேரம் இரவு பதினொன்றரை மணி. எப்போதுதான் நித்திரையானனோ அவனுக்கே தெரியாது.

இவனோடு வேலை செய்யும் இவனைப் போன்ற திறமை வாய்ந்த ரிப்போட்டரான நிகிதா என்ற அந்த அழகான நங்கையுடன் கனவில் ஓடிப்பிடித்து விளையாடி, அவளைப் பிடித்து அருகில் இருத்தி 'இது கண்.. இது மூக்கு.. இது உதடு.. இது கழுத்து.. இது..' என ஒவ்வொன்றாக அளந்தபோது அம்மா அவனை அவசரமாகத் தட்டி எழுப்பினாள்.

"டேய் சுதா எழும்படா.. உனக்கு அவசரமான ஹோல்" ஆழ்ந்த நித்திரை கலைந்து திடுக்கிட்டு எழும்பியவன் தூக்கக்கலக்கத்தில் 'என்னடி நிகிதா?' என்றவன், அவசரமாக அருகில் செல்போனுடன் நிற்கும் அம்மாவைக் கண்டு இப்போ எத்தனை மணி என்று கேட்டு மழுப்பினான்.

"டேய் அது யாரடா? ஏதோ பெயர் சொன்னாய்?"

அது வந்து... நிலவம்மா... நிலவோடு சண்டை.... அது கனவு, நீங்க போங்கம்மா.. யாரது? அவசரமான ஹோல் எண்டீங்க? ''எனச் சமாளித்தான் "இம், இந்தா பிடி நீயே கதைச்சுக்கொள்" கைத் தொலைபேசியை நீட்டினாள் அவனது தாய். உதட்டோரத்தில் சிரித்தபடி "நல்ல பிள்ளைதான் போ..." என்று முணுமுணுத்தபடி செல்லும் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்த சுதா, செல்போனில் அழைத்து நித்திரையைக் குழப்பிய பிரகிருதி மீது ஆத்திரப்பட்டவன், நேரம் பார்த்தான். விடியற்காலை ஐந்துமணி. கண்களைக் கசக்கியபடியே செல்போனை காதருகில் வைத்து 'ஹலோ, ஐ ஆம் சுதா ஹியர்' என்றான்.

"டேய் சுதா, நான் உன்னுடைய பத்திரிகை நிறுவன மனேஜிங் டிரெக்டர் சதாசிவம் கதைக்கிறேன்டா"

''எம்.டி.யா? ஆ.. சேர் சொல்லுங்கோ, சேர்'' என்று ஒரு கணம் தடுமாறியவன் உடனே பவ்வியமானான். எம்.டி.யின் குரலில் பரபரப்புத் தொற்றியிருந்தது. "நீ இப்ப என்ன செய்யிறாய், உடனடியாக வெளிக்கிட்டு இங்க பத்திரிகை அலுவலகத்திற்கு வாறாய், என்ன?"

"உடனேயே வந்தாக வேண்டுமோ சேர்' என்றான் சுதா.

''ய்யா... உடனடியாகக் கிளம்பி வா...''

''அப்படி என்னசேர் விசயம்? சஸ்பென்ஸ் வேண்டாம். விசயத்தைச் சொல்லுங்க சேர்?''

"அந்த சஸ்பென்சை உடைக்கத்தான் நீ தேவைப்படுகிறாய். உடனடியாக வா. மிகுதி நேரில்". அங்கு செல்போன் தொடர்பு துண்டிக்கப்பட இங்கு இவன் செல்போனை வெறித்துப் பார்த்தபடியே யோசித்தான்.

"அப்படி என்னதான் நியூஸ்? எம்.டிக்கு என்ன இத்தனை அவசரம்? இரவு முழுக்க நானும் செய்திகள் கேட்டனான் தானே? அப்படி விசேடமான ஹொட் நியூஸ் எதுவுமில்லையே?'' ஒருகணம் தனது தோளைக் குலுக்கிக் கொண்டான். 'சரி போய்த் தான் பார்ப்போமே' முணுமுணுத்தபடி புறப்படத் தயாரானான் சுதா.

சரியாகப் பத்தே நிமிடத்தில் சுதா பத்திரிகை அலுவலகத்தின் வாசலை அண்மித்தான். வாசல் கேற்றை நெருங்கி வழமையைப் போல தன் ஹீரோ ஹொண்டாவை ஒரு முறுக்கு முறுக்கிவிட்டு கோன் அடித்துத் தன் வருகையைத் தெரிவிக்கவும், வெளிவாசல் பாதுகாப்பு ஊழியர் அடையாளத்தை உறுதிப்படுத்திய பின், கேற்றை அகலத்திறந்தவிட, பைக்கைக் கொண்டு போய் பார்க்கில் செருகினான். பைக்கில் இருந்து துள்ளிக் குதித்து பூட்டிச் சாவியை உருவி எடுத்தபோது கவனித்தான். சற்றுத் தள்ளி எம்.டியின் கார் நின்று கொண்டிருந்தது.

"அட இந்த ஆள் எப்ப வாறார்...? எப்ப போறார்..? எப்ப நித்திரையால எழும்புறார்..? எப்ப நித்திரைக்குப் போறார்..? ஒரு இழவும் விளங்காமல் இருக்கு... என்ன மனிசண்டா இவர்.'' தனக்குள்ளேயே முணுமுணுத்தபடி எம்.டியின் ரூமை நெருங்கவும் இவனுக்குச் சற்றுத் தூரத்திற்கு முன்னால செய்திப் பொறுப்பாசிரியர் சுந்தரமூர்த்தியும் எம்.டியின் ரூம் கதவை நெருங்கவும் சரியாகயிருந்தது.

இவனைப் பார்த்ததும் அவர் அப்படியே நின்று திரும்பிச் சொன்னார்" சுதா உன்னைத்தான் எம்.டி பார்த்துக் கொண்டிருக்கிறார். தாமதிக்காமல் உள்ளே நட" ஏதோ முக்கியமானதொரு சம்பவம் எங்கோ நடந்திருக்கிறது என்பது மட்டும் சுதாவுக்கு விளங்கியது. "என்ன விடயம் என்று தெரியுமா சேர்?"

''நானும் இப்பதான் வாறன். ஏதோ அவசர நியூஸ் என்று மட்டும் தெரியுது. ஆனால் என்ன நியூஸ் என்று தெரியவில்லை. நான் நினைக்கிறேன். துப் பறியும் வேலையெதுவோ இருக்கு".

சுதாவும் அப்படித்தான் நினைத்திருந்தான். எனினும் உள்ளே நுழைந்தால்தான் எதுவும் தெரியும்.

உள்ளே நுழைந்த இருவரும் யோசனையுடன் இருக்கும் எம்.டியைப் பார்த்து குட் மோர்னிங் கூறி அதை மீண்டும் வாங்கிக் கொள்ள, எம்.டியின் வாயிலிருந்து மீண்டும் உதிர்ந்த "ப்ளீஸ் ரேக் யுவர் சீற்.." அமர்ந்து கொண்டார்கள். வார்த்தைக்குப் புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு சில வினாடிகள் வரை தனது முக்கால்வாசி மொட்டைத் தலையைத் தடவியபடியே யோசித்துக் கொண் டிருக்கும் எம்.டியின் முகத்தையே வைத்த கண் வாங் காமல் பார்த்துக் கொண்டிருந்த சுதா தனக்குள்ளேயே முணுமுணுத்தான். *(ஆபத்து தொடரும்)*

## கார்ப் பாகங்களினால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள்



# வாளேந்திய சங்கிலியன்

## முத்திரைச் சந்தியை முற்றுகையிடும் துரோகம்

■சந்திரசேகரஆசாத்



**ஒரு** இனத்தின் வரலாறு அதன் தொன்மையையும், பெருமையையும், வாழ்வியல் அம்சங்களையும் வெளிப்படுத்தும் ஆவணமாக விளங்கி வருகிறது. அதன் காரணமாகவே தொல்பொருட் காட்சிச்சாலைகளும், நினைவுச் சின்னங்களும் காலம் காலமாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்த இனமோ அல்லது அந்தத் தேசமோ சந்தித்த வெற்றிகள், தோல்விகள், சாதனைகள், கலை இலக்கியப் படைப்புகள் என்பனவற்றை மீண்டும் மீண்டும் நினைவூட்டுவது வரலாறேயாகும்.

இதன் காரணமாகவே எல்லாவித ஆக்கிரமிப்பாளர்களும், தாம் இன்னொரு தேசத்தைக் கைப்பற்றியதும் முதல் வேலையாக அந்தத் தேசத்தின் வரலாற்றுச் சின்னங்களை அழிந்து விடுவதைப் பிரதான இலக்காகக் கொள்கின்றனர்.

### தோற்கடித்த இனத்தின் தனித்துவத்தைச் சிதைக்கும் வழமை

மிகவும் தொன்மை வாய்ந்த நாகரீகங்களுள் ஒன்றாகக் கருதப்படும் மொசப்பத்தோமிய நாகரீகத்தை மூலமாகக் கொண்ட ஈராக்நாடு அமெரிக்கப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட போது, பல நூற்றாண்டுகள் தொன்மை வாய்ந்த பக்தாத்திலுள்ள அருங்காட்சியகம் அழிக்கப்பட்டது. இவ்வாறே தலிபான்கள் ஆட்சியிலிருந்த காலத்தில் பெரும் மலைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட அற்புதமான கலைப்படைப்பான புத்தர் சிலைகள் அழிக்கப்பட்டன.

சோவியத் யூனியன் பொதுவுடமைப் பாதையிலிருந்து விலகி, முதலாளித்துவப் பாதைக்கு நகர்த்தப்பட்டபோது குருச்சேவ் செய்த முதல் வேலை பல ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வந்த யோசேப் ஸ்டாலினது உடலை அகற்றியெடுத்துப் புதைத்ததுதான். ஸ்டாலின் உலகப் போரில் ஜேர்மனியின் ஆக்கிரமிப்புக்கு உட்படாமல் சோவியற் யூனியனைக் காத்தவர். இவ்வாறே சோவியத் யூனியன் புரட்சிக்குத் தலைமை தாங்கி வெற்றியீட்டிய மாமேதை லெனினின் பூதவுடல் கொப்பர்சேவ் ஆட்சிக்கு வந்ததும் அகற்றப்பட்டது. அவ்வாறே லெனின் சிலைகளும் அகற்றப்பட்டன.

அதாவது ஒரு இனமோ, நாடோ ஆக்கிரமிக்கப்படும்போது, அதன் வரலாற்று ஆவணங்களையும் நினைவுச் சின்னங்களையும் அழிப்பதன் மூலம் ஆக்கிரமிப்பாளர்கள் அந்த இனத்தின் தனித்துவத் தைச் சிதைத்து விட எத்தனிக்கின்றனர்.

இன்று தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட நிலையில், தமிழ் மக்களின் மீதும் பல முனைகளில் இத்தகைய அவலங்கள் திணிக்கப்படுகின்றன. ஒருபுறம் அரசும், அரச படைகளும் இத்தகைய அடாவடித்தனங்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொள்கின்றன. மறுபுறம் அரசின் அடிவருடிகளாக விளங்கும் தமிழ்க் குழுக்களும் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு சொந்த இனத்துக்குத் துரோகம் செய்து வருகின்றன.

### சங்கிலி மன்னனின் வீரத்தைக் கொச்சைப்படுத்தும் உத்தி

அவ்வகையில் அல்பிறட் துரையப்பா யாழ்ப்பாண மாநகர முதல்வராக இருந்த காலத்தில், யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியில் யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலி செகராசசேகரனுக்கு ஒரு சிலை நிறுவப்பட்டது. இதில் சங்கிலி மன்னன் பாயும் குதிரையில் அமர்ந்தவாறு உயர்த்திய கைகளில் ஓங்கிய வாளுடன் காட்சியளித்தான். இது தமிழர்களின் பாரம்பரிய வீரத்தையும்,வாட்போர் வல்லமையையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

இன்று, நாற்புறமும் அடைக்கப்பட்டு ஆண்டாண்டு காலமாக நின்றிருந்த இச்சிலை உடைக்கப்படுகிறது. இங்கு புதிதாக இன்னுமொரு சங்கிலி மன்னரின் சிலை அமைக்கப்படப் போகிறதாம் ஓங்கிய கரத்தில் வீசத் தயாராக ஏந்தப்பட்ட வாள் புதிய சிலையில் பக்கவாட்டாக இருக்கப்போகிறதாம். அதாவது எதிரியை நோக்கி சிரமறுக்கப் பாய்ந்துடித்தவாள் இனிச் சிரம் தாழ்த்தி நிலம் நோக்கப் போகிறதாம்.

இப்போது மாநகர முதல்வராயிருக்கும், ஈ.பி.டி.பி யின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருமதி.யோகேஸ்வரி பற்குணராசாவின் ஆட்சியில்தான் போத்துக்கேயரைக் கதிகலங்க வைத்த சங்கிலி மன்னன் சிலை சிதறுகிறது. தாள் பணிந்த வாளுடன் இன்னொரு சிலை உருவாகிறது.

சிங்கை ஆரியச் சங்கரவர்த்திகள் பரம்பரையின் கடைசி மன்னன்தான் சங்கிலி செகராசசேகரன். சங்கிலியனிடம் தமது வர்த்தகப் பொருட்களை வைக்க ஒரு இல்லம் அமைக்க அனுமதி பெற்ற பறங்கியர், பண்ணைக்காட்டுக்குள் ஒரு கோட்டை அமைப்பதைக் கேள்விப்பட்டபோது படை நடத்தி அவர்களை விரட்டியடித்தவன்; மன்னாரில் திருக்கேதீஸ்வரம் கோவில் போத்துக்கேயரால் இடிக்கப்பட்டபோது படையெடுத்துச் சென்று அவர்களை விரட்டியடித்துவிட்டு அவர்களுக்குத் துணைபோனவர்களைச் சிரச்சேதம் செய்து வந்தவன் அவன்.

போத்துக்கேயர் தரை, கடல் என இரு மார்க்கங்களாலும் வந்திறங்கி நல்லூரைத் தாக்கிய போது தனித்துப் போரிட்டவாறே புத்தூர் வரை பின்வாங்கி, பின் படைகளை ஒன்று திரட்டி பூநகரி வழியாகப் படையெடுத்து போத்துக்கேயரைத் திணறடித்தவன். இறுதியில் காவலூர் வன்னி, சகோதரன் பரநிருப் சிங்கன் ஆகியோரின் துரோகம் காரணமாக அம் மாவீரன் தோற்கடிக்கப்பட்டான்.

தியாகம், தேசப்பற்று என்பன எமது இனத்தின் வழிகாட்டிகளாக விளங்கி வருகின்றன. அப்படியான ஒரு ஆதர்சபுருஷனின் சிலை இடிக்கப்படுவது ஒவ்வொரு தமிழனின் நெஞ்சிலும் எய்யப்படும் பாணமாகும். அவனின் ஓங்கிய வாள் தாழ்ந்த போவது ஒவ்வொரு தமிழனுக்கும் பெரும் தலைக் குனிவாகும்.



### தமிழர் வரலாற்றைச் சிதைப்பதற்குத் தமிழர்களே துணை போகும் அவலம்

இதை யார் செய்கிறார்கள்?

ஈ.பி.டி.பியின் தலைமையில் இயங்கும் யாழ்.மாநகரசபையின் தீர்மானத்துக்கு அமைவாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர்களாகப் பிறந்து, தமிழ் மண்ணில் இருந்து கொண்டு இப்படியான ஒரு படுகேவலமான துரோகத்தைச் செய்வது என்பது தமிழ் மக்களால் ஜீரணிக்கப்பட முடியாத விஷயம். அதிலும் ஈ.பி.டி.பி யினர் கூட மாநகரசபைக்குத் தமிழ் மக்களாலேயே தெரிவு செய்யப்பட்டனர் என்பதும் முக்கியமானது.

எமது இனத்தின் விடுதலைக்காக முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகள் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தனர். அவர்களின் நினைவிடங்களான மாவீரர் துயிலும் இல்லங்கள் அரச படைகளால் அழிக்கப்பட்டன. பெற்றோர், போரில் உயிரிழந்த தங்கள் பிள்ளைகளுக்கு விளங்கேற்றி, மலர் சாத்தி அஞ்சலிக்கும் அந்த அடிப்படை உரிமை கூட மறுக்கப்பட்டது. அக்கொடுமையைக் கொண்டு நடத்திய அரசுடனும், அரசபடைகளுடனும் கைகோர்த்து வலம் வருபவர்கள் ஈ.பி.டி.பியினர்.

முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களை நினைவு கூர்ந்து அஞ்சலித் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்துக் குழப்பியடித்தவர்கள் மாநகர முதல்வரும், அவரது ஈ.பி.டி.பி. உறுப்பினர்களுமேயாகும்.

இன்று சங்கிலியன் சிலையை உடைந்து ஓங்கிய வாளைக் கீழே தாழ்த்திச் சிலை வடித்து அம் மன்னனின் மேன்மையைக் கேவலப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியவர்களும் இவர்கள் தான். இன்றைய அரசு தமிழர்களையும், தமிழ் அடையாளங்களையும் அழித்து எமது தனித்துவத்தைச் சிதைத்து எம்மை உதிரிகளாக்கி, கையேந்தும் ஒரு இனமாக மாற்றும் நடவடிக்கைகளில் திட்டமிட்டு ஈடுபட்டு வருகிறது. இங்கு ஈ.பி.டி.பி யினர் தாமாகவே முன் வந்து தமிழினத்தின் வரலாற்றையே மறைக்கும் இக் காரியங்களைத் தலைமேற்கொண்டு செய்து வருகின்றனர்.

அதாவது எவ்வித மனச்சாட்சியின் உறுத்தல்கூட இன்றி, எமது இனத்தின் சிதைவுக்கு இவர்கள் முன்னின்று செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஈ.பி.டி.பியையும், வெற்றிலைக்குள் வீணையையும் கரைத்து விட்டவர்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் பிறப்பால் தமிழர்கள் என்பதை மறந்து விடுவது எவ்வளவு கேவலமானது?

நாம் இருந்தாலும்,இறந்தாலும், எரிந்து சாம்பலாகப் போனாலும் தமிழர்கள்தான். எமது வரலாறும் தனித்துவமும் அழிக்கப்பட முடியாதவை. அப்படி அழிக்க முயலும் சக்திகளை இனம் கண்டு புற மொதுக்கி, நாம் சரியான திசையில் செல்வதே நாம் வீரமன்னன் சங்கிலியனுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும். ✸

GERMANY 2011 FIFA WOMEN'S WORLD CUP

# உலகக் கிண்ணத்தை வென்றது ஜப்பான்

மகளிர் உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் பைனலில், அமெரிக்காவை 3&1 என்ற கோல் கணக்கில் பெனால்டி ஷூட் அவுட்டில் வீழ்த்திய ஜப்பான் அணி சாம்பியன் பட்டம் வென்றது. ஜெர்மனியின் பிராங்க்பர்ட் பிரதான ஸ்டேடியத்தில் நடந்த இப் போட்டியில், அமெரிக்கா முதலில்




கோல் போட்டு 1&0 என முன்னிலை பெற்றது. இதையடுத்து துடிப்புடன் விளை யாடிய ஜப்பான் வீராங்கனைகள் பதில் கோல் அடிக்க ஒன்றுக்கு ஒன்று என சமநிலை ஏற்பட்டது. இரு அணிகளும் கடுமையாகப் போட்டியிட்டும் மேலதிகமாக கோல் அடிக்க முடியவில்லை. கூடுதல் நேரம் வழங்கப் பட்டதில் அமெரிக்கா அபாரமாக கோல் போட்டு 2&1 என முன்னிலை பெற்றாலும், அடுத்த சில நிமிடங்களிலேயே ஜப்பான் பதில் கோல் அடிக்க 2&2 என மீண்டும் சமநிலை ஏற்பட்டது. வெற்றி யாருக்கு என்பதை தீர்மானிக்க பெனால்டி ஷூட் அவுட் கடைப்பிடிக்கப்பட்டதில் ஜப்பான் அணி 3க்கு 1 என்ற கோல் கணக்கில் அபாரமாக வென்று கோப்பையை கைப்பற்றியது. ஜப்பான் கோல் கீப்பர் அயுமி கைஹோரி அற்புதமாக 2 ஷாட்களை தடுத்து அசத்தினார்.

# எத்தனை நாள் ஆனாலும் முடிவு தெரிந்தே ஆகவேண்டும்

International Cricket Council

கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக நடக்க உள்ள டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் பைனலை, காலவரையற்ற ஆட்டமாக நடத்துவது குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) ஆலோசித்து வருகிறது. டெஸ்ட் தரவரிசையில் முதல் 4 இடங்களில் உள்ள அணிகள் மோதும் டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டி 2013ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற உள்ளது. லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடக்க உள்ள இறுதிப் போட்டியை டைம்லெஸ் டெஸ்ட் ஆக நடத்துவது பற்றி ஆலோசித்து வருவதாக ஐசிசி தலைமை செயலதிகாரி ஹாரூன் லார்கட் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள விதிமுறைகளின் படி, டெஸ்ட் போட்டிகளில் மோதும் இரு அணிகளும் தலா 2 இன்னிங்ஸ்களில் விளையாட வேண்டும். எனினும், நிர்ணயிக்கப்பட்ட 5 நாட்களுக்குள் வெற்றி, தோல்வி தெரியாவிட்டால், அந்த போட்டி டிராவில் முடிந்ததாக அறிவிக்கப்படும். ஆனால், டெஸ்ட் சாம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டி டிராவில் முடிவதை தவிர்க்கும் வகையில், 5 நாள் கால வரையறையைத் தளர்த்த ஐசிசி முடிவு செய்துள்ளது.

இதன்படி, எவ்வளவு நாள் ஆனாலும் முடிவு தெரியும் வரை போட்டி நீடிக்கும். இதனால், ஒரு அணி முதல் இன்னிங்சில் டிக்ளேர் செய்யாமல் ஆல் அவுட் ஆகும் வரை தொடர்ந்து விளையாடி 1000 ரன்னுக்கு அதிகமாகக் குவிக்கவும் வாய்ப்பு உள்ளது. மற்றைய அணி 700 ரன் எடுக்க வேண்டும் என்றாலும், கடைசி நாள் கிடையாது என்பதால் பொறுமையாக 7வது நாள் வரை கூட விளையாடி வெற்றி இலக்கை எட்டலாம். மொத்தத்தில் முடிவு தெரியும் வரை ஆடிக்கொண்டே இருக்கலாம் என்பதுதான் விசேஷம்.





# நடுவரை மிரட்டிய டோணி

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு சாதகமாக தீர்ப்பளித்து, இந்திய அணியினரிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட ஆஸ்திரேலிய நடுவர் டெரைல் ஹார்ப்பர் தற்போது இந்திய அணியின் கேப்டன் டோணி தன்னை மிரட்டியதாகவும், அச்சுறுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தியதாகவும் பேசியுள்ளார். சமீபத்தில் இந்தியா, மேற்கு இந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையே நடந்த டெஸ்ட் தொடரின்போது முதல் டெஸ்ட் போட்டியில் நடுவராக இருந்தவர் ஹார்ப்பர். ஆஸ்திரேலியரான இவர் தப்புத் தப்பாக தீர்ப்பளித்தார். இந்திய அணிக்கு எதிராக இவர் தீர்ப்புகளை அளித்தார். இதனால் கோபமடைந்த கேப்டன் டோணியும், இந்திய அணியின் வீரர்கள் சிலரும் நடுவரின் தவறான தீர்ப்புகளை நாகரீகமான வார்த்தைகளில் விமர்சித்திருந்தனர்.

இதைப் பொறுக்க முடியாத ஹார்ப்பர், 3வது டெஸ்ட் போட்டியில் தான் பங்கேற்கப் போவதில்லை என்று கூறி சர்வதேச அளவில் போட்டிகளில் நடுவர் பணியாற்றுவதிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்து ஆஸ்திரேலியா போய் விட்டார். ஹார்ப்பருக்கு இப்படியாகி விட்டதே என்று புழுங்கிய ஆஸ்திரேலிய மீடியாக்களும், முன்னாள் ஆஸ்திரேலிய வீரர்களும் டோணியையும், இந்திய அணியினரையும், இந்திய கிரிக்கெட் வாரியத்தையும் வசை பாடி தங்களைக் குஷிப்படுத்திக் கொண்டனர். இதைப் பார்த்த ஐசிசியும், தன் பங்குக்கு இந்திய அணியினரின் செயலை கண்டித்தது. இது துரதிர்ஷ்டவசமானது என்றுகூறியது. ஆனால் ஹார்ப்பர் செய்தது தவறு என்று பட்டவர்த்தனமாக இவர்கள் யாரும் சொல்ல முன்வரவில்லை. ஏன் ஹார்ப்பரே கூட தான் செய்தது தவறு என்று ஒப்புக் கொள்ளவில்லை. இந்த நிலையில் டோணி தன்னை அச்சுறுத்தும் வார்த்தைகளில் மிரட்டியதாக பேசியுள்ளார் ஹார்ப்பர். இதுகுறித்து அவர் அளித்துள்ள ஒரு பேட்டியில், முதல் டெஸ்ட் போட்டியின் போது டோணி என்னைப் பார்த்து பொருத்தமில்லாத வார்த்தைகளைப் பயன்புத்தினார்.

பந்து வீச்சாளர் பிரவீன் குமார் தொடர்ந்து பிட்ச்சி லேயே ஓடி வந்து பந்து வீசியதால் அவரைப் பந்து வீசுவதிலிருந்து நிறுத்துமாறு நான் டோணியிடம் கூறினேன். இதையடுத்து என்னை நோக்கி வந்த டோணி, ஏற்கனவே உங்களால் எங்களுக்கு நிறையப் பிரச்சினைகள் வந்துள்ளன என்று கோபத்துடன் கூறினார். அவரது பேச்சு அச்சுறுத்துவதாக, மிரட்டுவ தாக இருந்தது. பின்னர் போட்டியின் முடிவில், சில சரியான முடிவுகள் எடுக்கப்பட்டிருந்தால் இந்தப் போட்டி எப்போதோ முடிந்திருக்கும். நாங்களும் இன்னேரம் ஹோட்டலுக்குத் திரும்பியிருப்போம் என்று கூறினார். இது மிகவும் கண்டனத்துக்குரிய வார்த்தை. இதை அவர் திரும்பப் பெற்றிருக்க வேண்டும். டிஆர்எஸ் அந்தப் போட்டியில் பயன்படுத்தப்பட்டிருந்தால் எனது முடிவுகளில் ஒன்று மட்டுமே திரும்பப் பெறப்பட்டிருக்கும். நான் அந்தப் போட்டியில் 9 தவறுகளைச் செய்ததாக ஒரு பத்திரிகையில் எழுதியுள்ளனர். ஆனால் அதுகுறித்துப் பேச வேண்டியது ஐசிசிதான். ஆனால் அது அமைதியாக உள்ளது. மற்றவர்கள் பேசுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது. பிரவீன் குமாருக்கு அது முதல் டெஸ்ட், எனவே அவரிடம் இத்தனை கடுமையாக நான் நடந்து கொண்டிருக்கக் கூடாது என்கிறார்கள். விளையா ட்டை அவர்கள் முதலில் மதிக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது. டெஸ்ட் போட்டி என்பது பயிற்சி ஆட்டம் அல்ல. அது மிகவும் சீரியஸாக விளையாடப்பட வேண்டியது. முதல் போட்டியில் விளையாடுகிறார் என்பதற்காக சலுகையெல்லாம் காட்டிக் கொண்டிருக்க முடியாது என்றார் ஹார்ப்பர்.


## மாணவப் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?

நீங்கள் துடிதுடிப்புள்ள சமூக நோக்குக் கொண்டவரா?

நீங்களும் சுடர் ஒளியின் மாணவப் பத்திரிகையாளர் குழுவில் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் பிரதேச பிரச்சினைகள் தொடர்பாக 200 சொற்களுக்கு உட்பட்ட ஆக்கம் ஒன்றை எழுதி உங்கள் சுயவிபரங்களுடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்பிவையுங்கள். வயதெல்லை 16 தொடக் கம் 26 வரை. அனுப்பும் கடித உறையில் இடது பக்க மூலை யில் சுடர் ஒளி மாணவப் பத்திரிகையாளர் எனத் தலைப்பிட்டு அனுப்பிவைக்கவேண்டும். (கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு).

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-
சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
561, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## சுடர் ஒளி வாசகர்களுக்கு...


சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்பும் வாசகர்கள் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கலாம்.

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர் ஒளி வாரமலர்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு -14.

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

# உடம்பில் இரும்புக்கம்பிகள் வளரும் விசித்திர பெண்



இந்தோனேசியாவின் Sangatta, East Kutai பிரதேசத்தில் வசிக்கும் 40 வயதுடைய பள்ளி ஆசிரியையான NOOR SYAID AH என்பவரின் உடம்பில் தான் அதிசயமான முறையில் 10, 20 Cm நீளமான இரும்புக் கம்பிகள் கடந்த 18 ஆண்டுகளாக வளர்ந்துள்ளது. நெஞ்சு மற்றும் வயிற்றுப் பகுதிகளில் வளர்ந்துள்ள இக்கம்பிகள் கடந்த 1991ல் தான் முதன் முதலில் இவரால் அவதானிக் கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு சமயம் இவர் உடம்பிலிருந்து கம்பி வீழ்வதை கண்டுள்ளார். அதிலிருந்து ஒரு மாதம் கழித்து மீண்டும் அக்கம்பிகள் வளர்ந்துள்ளது. வளர்ந்த கம்பிகள் விழா மல் தொடர்ந்து வளர்வதை அவதானித் துள்ளார்.



இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையின் போது உடம்புக்கு வெளியே வளரும் அதே போன்ற கம்பிகள் உடம்பினுள்ளும் வளர்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வரிய நிகழ்வு பற்றி இந்தோனேசிய சுகாதார அமைச்சும், வைத்திய நிபுணர்களும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இது பற்றி இவரது சகோதரி கூறுகையில், அவரது உடம்பில் வளர்ந்த கம்பிகளை வெட்டி அகற்றுவதற்கு அவர் முயற்சித்த போது, அது உடம்பின் வேறொரு பாகத்தில் மீண்டும் வளர்வதை அவதானிக்க முடிந்ததாக குறிப்பிட்டுள்ளார். நான்கு பேர் அடங்கிய வைத்திய நிபுணர் குழுவொன்று இவரது உடம்பைப் படம் பிடித்துப் பார்த்த போது அவரது அடி வயிற்றுப்பகுதியில் 40 க்கும் அதிகமான கம்பிகள் காணப்பட்டுள்ளதுஇவை பறவைகள் மற்றும் பூச்சிகள் வடிவிலும் காணப்படுகின்றன.


**Sudar Oli**

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August,Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch


## தயாரிக்கத் தடையே இல்லை

ஒவ்வொரு காலநிலைக்கும் ஏற்ற பொருள்கள் சந்தைக்கு வந்து வணிகத்தையும் நுகர்வோரையும் குஷிப்படுத்திவிடும். ஐரோப்பியச் சந்தைகளுக்கு ஜூலை மாத வெப்பத்தைத் தனிப்பதற்காக புதிதாய் அறிமுகமாகியிருக்கிறது புதியவகை கிரைண்டர். வழமையாக நமது வீடுகளில் இருக்கும் கிரைண்டர்களைக் கொண்டு சராசரியாக குடும்ப அங்கத்தவர்களுக்கு மாத்திரமே பழக் கரைசல்களைத் தயாரித்துக் கொள்ள முடியும். அதுவும் மின்சாரம் இல்லாத வேளைகளில் எனில் அதற்குச் சாத்தியமில்லை.



ஆனால் இந்தப் புதிய வகைக் கிரைண்டர் நாம் தொலைதூரம் சென்றாலும் எடுத்துச் செல்லக் கூடியது. பழக்கரைசலுக்குரிய பொருள்களை மட்டும் அதனுள் இட்டு பட்டனைத் தட்டி னால் போதும். மின்கலச் சக்தியால் சுயமாக இயங்கி உடனடி யாகத் தாகம் தீர்க்கிறது இந்த இயந்திரம்.


Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுனத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள், படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

Hotel & Gastro formation | Eichistrasse 20 | 6353 Weggis
Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவிடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.
மொழி படிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.
தொடர்புகளுக்கு மூர்த்தி மாஸ்ரர்,


இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில்

für Handy



10 மொழி அகராதி

Sprache wörterbuch

ஏஜென்டுகளுக்கு நல்ல கமிசன்




# இறைவனின் படைப்பில் இப்படியும் விசித்திரங்களா?

நேபாளத்தில் பிறந்த குந்தை ஒன்று மிகவும் விசித்திரமான முறையில் நான்கு கால்களுடன் நான்கு கைகளுடன் ஒட்டிய நிலையில் பிறந்துள்ளது. இப்போது இந்த குழந்தைக்கு ஒரு வயதாகிறது. இந்தக் குழந்தைக்கு தனது உடலின் முன் பகுதியில் மேலதிகமாக ஒரு உடம்பு, கால்கள் மற்றும் கைகளுடன் தொங்கிய நிலையில் காணப்படுகிறது. பலரும் இதனைக் கடவுளின் ஒரு வரமாகவே கருதுகின்றனர். எது எப்படியோ குழந்தை சுகமாக இருந்தால் சரி.

# நிலவில் இருந்து மின்சாரம்



ஜப்பானிய விஞ்ஞானிகள் பூமிக்கு நிலவிலிருந்து மின்சாரத்தை கொண்டுவர முடியுமா? என்ற ஆய்வுகள் நடத்தி வருகின்றனர். ஜப்பானின் புகழ்பெற்ற கட்டுமான நிறுவனம் ஒன்று இது தொடர்பான திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளது. சூரியனிலிருந்து நிலவுக்கு கிடைக்கும் வெளிச்சத்திலிருந்து 13 ஆயிரம் டெரா வோர்ட் மின்சாரத்தை தயாரித்து பூமிக்கு அனுப்ப முடியும் என்பது தான் அந்த திட்டம். இதன் மூலம் பூமியின் மின்சாரத் தேவையை பூர்த்தி செய்ய முடியுமாம். இதற்காக ரோபோக்களை பயண்படுத்தவும் முடியுமாம்.




# வேற்றுக் கிரகவாசி உருவில் கன்று போட்ட பசு

அண்மையில் தாய்லாந்து நாட்டில் ஒரு சிறிய கிராமத்தில் பசுவொன்று ஒன்று வேற்றுகிரக வாசிகளான எலிகன் போன்ற தோற்றமுடைய கன்று ஒன்றை ஈன்றுள்ளது. இதன் சரீரம் எலிகன் போலவும் தலை மாட்டைப் போலவும் மிக விசித்திரமான முறையில் அமைந்துள்ளது. இதைப் பார்ப்பதற்கு அக்கிராமத்தின் மக்கள் பெருமளவில் திரண்டு வருகிறார்கள்.

# புதுமையான தலையணை



லண்டனில் உள்ள ஹோட்டல் ஒன்றில் விசித்திரமான தலையணை ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளார்கள். இது அறையில் கேட்கும் குறட்டை ஒலியை அப்படியே உள்வாங்கிக் கொள்ளுமாம். எனவே இங்கு படுத்து உறங்கினால் குறட்டை ஒலி பலமாக இருந்தாலும் அதனால் பாதிப்பு அதிகம் இருக்காதாம்.



# சாப்பாட்டு ராமன்

இந்த ஆண்டில் அமெரிக்காவில் உள்ள யூயோர் நகரில் நடைபெற்ற அகில உலக சாப்பாட்டு ராமன்' போட்டியில் 16 பேர் கலந்து கொண்டனர். இதில் ஜோய் என்பவர் அந்தப் பட்டத்தை வென்றார். அவர் 10 நிமிடங்களில் இறைச்சி கலந்த 62 ரொட்டிகளைச் சாப்பிட்டுச் சாதனை படைத்தார். இப்பட்டத்தை இவர் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகப் பெற்று வருகிறார்.

# கவிதைப்புனல்

## கோடீஸ்வரி




கூரையோ ஓட்டை
கரைந்த சிவர்
தகரத்தால் ஓர் கதவு
தாழ்ப்பாளில்லை.

படுக்கப் பாயில்லை.
பாவிக்கப் பொருளில்லை
மாறி உடுக்க
மாற்றுடுப்பில்லை
ஆக்கிப் போட அரிசியுமில்லை.
அடுப்பில் படுக்குது பூனை.

வறுமையின் பிடியில்
வாடும் எனக்கு
பொருத்தமற்று இட்டனர் பெயர்
பெருமைக்குரிய என் பெற்றோர்
கோடீஸ்வரியென்று.

- சாந்தா குகதாசன்.

## நியாயமா?



சுதந்திர வானில் எம்மை
சிறகடிக்கச் சொல்கிறீர்கள்
எம் சிறகுகளை உடைத்து
சிறையில் அடைத்துவிட்டு

சந்தோஷக் கடலில் எம்மை
நீந்தச் சொல்கிறீர்கள்
ரத்த ஆற்றுக்குள் எம்மை
மூழ்கச் செய்துவிட்டு

சுதந்திரக் காற்றை எம்மை
சுவாசிக்கச் சொல்கிறீர்கள்
கந்தகப் புகைக்குள் எம்மை
மூச்சுத் திணற விட்டுவிட்டு

வளமான நாடு ஒன்று
மலர்கிறது என்கிறீர்கள்
அழகான எம் மண்ணை
சுடுகாடாய் மாற்றிவிட்டு

- எஸ்.எம்.புயல்,
வட்டக்கச்சி.


## விரக்தியின் விளிம்பினில்



தன்மானம்,
தமிழ்,
தமிழன்,
சுய உரிமை,
சுய ஆட்சி,
சுதந்திரம்,
கவிதை எழுதவெனத் தரப்பட்ட
தலைப்புகள் இவை
எந்தத் தலைப்பிலும்
எழுத எதுவுமில்லை
இவை பற்றி எழுதி
எந்தப் பயனுமில்லை.

- க.யோகேஸ்வரன்,
நெடுந்தீவு.

## உனக்கு வேண்டாம்



புகையெனும் கொடிய நஞ்சைப்
புரிந்தும் நீ, காலை மாலை
வகைதொகை தெரியா வண்ணம்
வாழ்விலே சுகமாய்க் கொண்டாய்!
தொகைப்பெரு நாட்கள் வாழும்
சூட்சுமம் தெரியா நின்று
பகையெனும் புகையைத் தொட்டே
பாரிலே கேடு கெட்டாய்!

உனைவிடு! உன்றன் அன்பின்
உயிர்க்குயிரான சேய்கள்,
மனைவியை விடவா இந்த
மாகொடும் புகையை நீயும்
துணையெனக் கொண்டாய்? சீச்சீ
தொல்லுல கத்தில் உன்னை
அனைவரும் வெறுக்கும் வண்ணம்
அந்தவோர் புகையைத் தொட்டாய்?

கற்றவன்! இந்த மண்ணே
கௌரவம் வழங்கும் பேறு
பெற்றவன் இருந்தும் சும்மா
பித்தனாய் தலைகீழ் ஆகிப்
பற்றினாய் உனையே கொல்லும்
பாவியாம் புகையை! என்றும்
குற்றமே புரியும் அந்தக்
கூற்றுவன் உனக்கு வேண்டாம்!

- து.திலக்,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் விருட்சங்கள்




சமூகத்தால்.....
முத்திரை குத்தப்பட்ட
முதிர் கன்னிகள் பட்டியலில்
நித்தம் இணைகின்றன -
பலபுது முகங்கள்.....
பெண்ணியல்வாதிகளின்
பேனாக்கள் மட்டும்
கண்ணீர்சிந்த
நடைமுறை வாழ்வு
நகல்களாய் நகர்கிறது.
வீட்டு யன்னல்கள்
சிறைக் கூடக் கம்பிகளாய்
அறைக்குள் அடைக்கப்பட்டுக் கிடக்கிறது
பெண்ணியம்
மா..! பிள்ளைகளின் மனங்கள்
பணத்தை நாட
யாழ்ப்பாணத்துக் கட்டட
வளர்ச்சியோடிணைந்து
வளர்கிறது....
முதிர்கன்னிகளின் பட்டியலும்...

— பி.ஏ.றெனோல்ட்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## நினைக்கவில்லை

- பா.பொன்நிலவன்
மீசாலை.




நீ
மறந்துவிடு எனும் போது
நான்
நினைக்கவில்லை
உன் நினைவே
நீண்டு கொள்ளும்
சுவாசம் என்று.









ரஹ்மான்

## ரஜினிக்காக உருகும் ரஹ்மா

சிறுநீரக பிரச்சினைக்காக சிகிச்சை பெற்று வந்த நடிகர் ரஜினிகாந்த், சிங்கப்பூரில் இருந்து பூரண குணமடைந்து சென்னை திரும்பிவிட்டார். இந்நிலையில் சினிமாவிலுள்ள நட்சத்திரங்களும் சூப்பர் ஸ்டாரை நலம் விசாரித்து வருகின்றனர். இதனையடுத்து இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் தனது டுவிற்றரில் ரஜினியை புகழ்ந்து தள்ளியுள்ளார். என் வாழ்வில் முக்கிய தூண்டுகோலாக ரஜினிகாந்த் இருக்கிறார் என குறிப்பிட்டிருக்கிறார் இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான். மேலும் சூப்பர் ஸ்டார் விரைவில் முழு உடல்தகுதி பெற்று 'ராணா' படப்பிடிப்பில் கலந்து கொள்ள இறைவனிடம் பிரார்த்தனை செய்வதாக ரகுமான் குறிப்பிட்டுள்ளார். ரஜினியின் வருகைக்காக காத்திருக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

வேட்டை ஆடத் துடிக்கும் எதிரியை, சவால் விட்டுச் சாய்க்கும் வேங்கை! ஊர்ப் பெரியவர் ராஜ்கிரணின் ஒரே மகன் தனுஷ். ராஜ்கிரணின் உதவியால் எம்.எல்.ஏ. ஆகும் பிரகாஷ்ராஜ், பிறகு அவருக்கு எதிராகவே செயல்படத் தொடங்குகிறார். ஒரு கட்டத்தில் ராஜ்கிரணால் அவமானப்படுத்தப்பட, அவரைப் பழி வாங்குவதற்காக, தனுஷைக் கொல்லத் திட்டமிடுகிறார். காரைக்குடி லொகேஷன், அரிவாள், டாடா சுமோ, வெள்ளை வேட்டி மனிதர்க்ள், சவால், சவடால், சத்தம், ரத்தம் என எக்கச்சக்க மாகக் கசக்கிப் பிழிந்த கரும்புச் சக்கை மீது தண்ணீர் தெளித்து, மீண்டும் பிழிந்து இருக்கிறார் இயக்குநர் ஹரி. மந்திரியை முந்திரி ஆக்கும் கதாநாயகன் பாத்திரத்தில் தனுஷ். அரிவாளும் கையுமாகவே அலைகிறார். படத்தில் நடிக்கப் பெரிய வாய்ப்பு இல்லை. ஆனால், அதற்காக அவர் அலட்டிக் கொள்ளவும் இல்லை. படத்தில் சுவை வேண்டும் என்பதற்காகவே, உப்புச்சப்புக் காரணம் சொல்லி தமன்னாவைத் திடீர் வில்லி ஆக்குவதும், 'உன் அப்பாவை நான் கொல்லலைனு ஊருக்கே தெரியும். நீ நம்ப மாட்டியா?' என்று ராஜ்கிரண் அவரிடம் சொன்னதும், தமன்னா உடனே திருந்திவிடுவதுமாக படம் ஓடுகிறது. படத்தில் கொஞ்சம் ஆறுதல் அளிக்கும் காட்சிகள் தனுஷ் - தமன்னாவின் காதல் அத்தியாயங்கள். சிறு வயது ஞாபகங்களை வைத்துக்கொண்டு, 'நீங்க ராதிகாதானே?' என்று தனுஷ் விசாரிப்பதும், தமன்னா மலையாளத்தில் பேசித் தப்பிப்பதுமாக, ரசிக்கவைக்கிறார்கள். எப்போதும் ஹரி படங்களில் அரிவாளோடு சேர்ந்து ஒரு ஊர்ப் பெரியவரும் இருப்பார். வில்லன் பிரகாஷ்ராஜ் கொஞ்சம் ஆறுதல்... கொஞ்சம் எரிச்சல். மந்திரியாக திமிர் தெனாவட்டு காட்டும் போதும், 'அந்த டிரைவருக்கு ஏன்டா முகம் வேர்த்திருக்கு' என்று ராஜ்கிரணின் ஆளைக் கண்களை உருட்டிக் கண்டு பிடிக்கும் போதும் ரசிக்கவைக்கிறார். புலியைக் காட்டிலும் மிக பலவீனமானதாக வேங்கை காட்டப்பட்டிருக்கிறது.

## அஜீத் படம் வேணாம்!



அஜீத்தின் 'பில்லா 2" படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது. இதில் ...யகியாக மொடல் அழகி ...மா குரேஷி நடிக்கிறார். ...ன்னொரு கத... ...யின் ...டத்துக்கு விமலா ...னிடம் ...னர். ஆனால் அவர் நடிக் ...றுத்து விட்டார். இது குறித்து ...லா தரப்பில் கூறும்போது, ...ல்ஷீட் பிரச்சினை காரணமாக ...வர் நடிக்கவில்லை என்றனர். ...த்தில் ஹுமா குரேஷிக்கே முக்கியத்துவம் என்பதால்தான் இதில் விமலா நடிக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

## மீண்டும் அஜீத் விஜய் படம் ?!



தற்போது அஜீத் நடித்து வரும் படம் 'பில்லா - 2'. இப்படத்தின் படப்பிடிப்பு ஜூலை 14ம் திகதி ஹைதராபாத்தில் உள்ள ராமோஜிராவ் ஸ்டுடியோ வில் தொடங்கியது. இப்படத்தினை ஏப்ரல் 2012 வெளியிட திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன. அஜீத் நடித்த 'கிரீடம்' படத்தை இயக்கியதில் இருந்து இயக்குநர் விஜய் - அஜீத் நட்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறதாம். முன்னதாக அஜீத்தின் 50 வது படத்தை இயக்குவது யார் என்ற கேள்வி எழுந்த போது இயக்குனர் விஜய் தான் என்ற செய்தியும் வெளியானது. ஆனால் அஜீத்தின் 50 வது படமான 'மங்காத்தா' வை வெங்கட் பிரபு இயக்கினார். இப்போது அஜித நடித்து வரும் படத்தை இயக்குநர் விஜய் இயக்குவதாக செய்திகள் வந்திருக்கின்றன.

## உன்னைச் சரணடைந்தேன்



அண்மையில் கொலை செய்யப்ப இளம் பெண் ருச்சியின் டயரி குறிப்புக் கிடைத்தி ருக்கிறது. அதில், அவர் தனக்கும் கணவரு க்கும் அடிக்கடி சண்டை நடப்பது பற்றி எழுதி இருப்பதுடன், நிலாவுடன் கணவரு க்கு தொடர்பு இருப்பதாகவும், நிலாவின் அழகுடன் தன்னை ஒப்பிட்டு இழிவு படுத்துவார் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதனால் பொலிஸ் நிலாவை தேடும் பணியை தீவிர படுத்தி இருக்கையில் அவர் தானாகவே மும்பை பொலிஸில் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறார். ஆனாலும் கொலைச் சம்பவம் குறித்த உண்மை விபரங்களை அவர் வெளியிட்டாரா என்பு வெளிவரவில்லை.

## முத்தக் காட்சியை தப்பாக பார்க்காதீர்கள்!

நடிகை ரம்யா நம்பீசன் 'வசப்பா குரிசு' மலையாள படத்தில் முத்தக் காட்சியில் நடித்திருக்கிறார். இது குறித்து 'ஒரு கதையை முதலில் கேட்டு ஒப்புக் கொண்ட பிறகு, அந்த கதைக்கு தேவையான காட்சியில் நடித்துக் கொடுப்பதுதான் ஒரு நடிகையின் கடமை. அதைத்தான் நான் 'வசப்பா குரிசு' படத்தில் காதல் உணர்வினை வெளிப்படுத்த ஓர் இடத்தில் முத்தக் நடித்திருக்கிறேன். கதைக்கு தேவையான எந்த காட்சியிலும் நடிப்பேன் என்பதுதான் எனது கொள்கை. ஆனால் ஆபாச படங்களில் நடிக்க மாட்டேன் என்று கூறினார்.



## ம் ரஹ்மான்!

பெற்று வந்த
ந்து பூரண
டார். இந்நிலை
ம் சூப்பர்
னர். இதனைய
தனது டுவிற்றரில்
ன் வாழ்வில்
த் இருக்கிறார் என
ஆர்.ரகுமான்.
ழ உடல்தகுதி
கொள்ள
ாக ரகுமான்
க்காக
ளார்.




# பிராய்ச்சிக்கு பதில் மம்தா

தடையற தாக்க. திரைப்படத்தை மகிழ் திருமேனி இயக்குகிறார். இந்த படத்துக்கு ஹிந்தி நடிகை பிராச்சி தேசாய் கதாநாயகியாக ஒப்பந்தமானார். பின்னர் தந்தைக்கு உடல் நிலை சரியில்லை என்று கூறி, மும்பை திரும்பினார். பின்னர் படக்குழுவினருடன் தொடர்பு கொள்ளவில்லை. இப்போது அவரை நீக்கி விட்டு மம்தாவை ஒப்பந்தம் செய்துள்ளனர். இதனால் ஹிந்தி நடிகையை தேர்ந்தெடுத்தோம். விரைவில் படப்பிடிப்பு தொடங்கும் என்றார்.






## படுக்கை அறையில்

நடிகை ரீமாசென் படுக்கையறை காட்சியில் நடித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். இட் ஸ்ரீகாந்தா என்ற பெயரில் உருவாகியிருக்கும் வங்காள மொழி படத்தில் நடிகை ரீமாசென் நாயகி யாக நடித்துள்ளார். படத்தில் இடம்பெறும் படுக்கையறை காட்சிகளில் ரீமாசென் ஆடையில் லாமல் துணிச்சலுடன் நடித்திருக்கிறார். இந்த பரபரப்பான படுக்கையறை காட்சியை பார்த்த தணிக்கை அதிகாரி கள், சில காட்சிகளை நீக்கும்படி படக்குழுவி னரிடம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் கதைக்கு மிகவும் தேவையான காட்சிகள் என்பதால் படக்குழுவினர் நீக்க மறுத்துவிட்டனர். இதையடுத்து இட் ஸ்ரீகாந்தாவுக்கு ஏ தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.




## சண்டையா?

புதுச்சேரியை சேர்ந்த கல்கி, 'ஜிந்தகி நா மிலேகி துபாரா" படத்தில் ஹிருத்திக் ரோஷன், கேத்ரினா கைப் ஆகியோருடன் நடித்துள்ளார். மும்பையில் நடிப்பு பயிற்சி பெற்றபோது, ஹிந்தி பட வாய்ப்பு கிடைத்தது. அந்த படத்தில் நடிக்கும் போது கேத்ரினா கைபுக்கும் எனக்கும் சண்டை என மும்பை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன அதில் துளியும் உண்மை யில்லை. அடுத்த வாரம் படம் வெளியாகிறது. இப்பட வெளியீட்டை எதிர்பார்த்து காத்திருப்பதாக கல்கி கூறினார்.

காலை செய்யப்ப
ச்சியின் டயரி
தி ருக்கிறது.
னக்கும்
அடிக்கடி
பற்றி எழுதி
லாவுடன்
தாடர்பு
நிலாவின்
ன ஒப்பிட்டு
ார் என்றும்
றார். இதனால்
வ தேடும்
படுத்தி
அவர் தானாகவே
ில் தனது
த்
றார். ஆனாலும்
வம் குறித்த
ங்களை அவர்
ன்பு
ல.

## புதுப் பிரவேசம்



நகைச்சுவை நடிகர் மயில்சாமியின் மகன் அன்பு பார்த்தோம் பழகினோம் என்ற புதிய படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகிறார். இயக்குனர் ராசு மதுரவன் இயக்கும் இப்படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்ததை பெருமை பொங்க நண்பர்களிடம் கூறி வருகிறார் மயில்சாமி.

இந்த படத்தில் கதாநாயகனாக நடிக்க தன் மகனுக்கு வாய்ப்பு கிடைத்தது பற்றி மயில்சாமி கூறுகையில், அஜீத் சார் ஒருமுறை அன்புவை பார்த்துவிட்டு தம்பி அழகாயிருக்கார் நல்ல படமா தேர்ந்தெடுத்து நடிக்க வைங்க என்று சொன்னார். ஏ.ஆர்.முருகதாஸ், வெற்றிமாறன் போன்ற முன்னணி இயக்குனர்களும் வாய்ப்பு கொடுப்பதாக சொல்லியிருக்காங்க.

அந்த நேரத்தில்தான் ராசு மதுரவன் என் மகனை பார்த்து என் படத்தில் நடிக்க வைக்கலாமே என்று கேட்டார்.





விக்ரம் பிரபு - கும்கி!

மைனா படத்தை அடுத்து கும்கி கதையும் மலைகிராம காட்டுப் பகுதியையொட்டியதாக அமைந் தது. பயிற்சி பெற்ற யானைகளை கும்கி என்று சொல்வார்கள். இதில் கதாநாயகனாக நடிக்க பல்வேறு புது முகங்களை பார்த்தேன். சிவாஜி யின் பேரனும், பிரபுவின் மகனு மான விக்ரம் பிரபு பொருத்த மாக இருந் தார். அவர் கதாநாயக னாக அறிமுகமாகிறார் என்று திரைப்பட இயக்குநர் பிரபு சாலமன் கூறுகிறார்.



## ஆடிப்போனார் டாப்ஸி

நடிகை டாப்ஸி நடிக்கும் படம் 'வந்தான் வென்றான்' இவர் தமிழில் வேறு படங்கள் எதையும் ஒப்புக் கொள்ளாமல் இப்படத்திற்காக காத்திருக்கிறாராம். டாப்ஸிடம் கேட்டால் அச்ச்ச் என்று தும்மலோடு பேச ஆரம்பிக்கிறார். அவ்வளவு குளித்துவிட்டாராம். வந்தான் வென்றானுக்காக. ஏகப்பட்ட குளியல் காட்சிகள் இருப்பதே ரசிகர்களை உஷ்ணத்தோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகதானாம். படம் த்ரில்லர் என்கிறார் டாப்ஸி. கோவாவில் 250 அடி உயர சுவற்றில் ஏற சொல்லி ஆடச் சொன்னாராம் இயக்குநர். அப்படியே ஆடிப் போயிட்டேன் தெரியுமா என்கிறார் டாப்ஸி.

## எப்போது காஞ்சனா?

பார்ப்பவர்களை பயமுறுத்த வேண்டும் என்று லோரன்ஸ் எடுத்திருக்கும் படம் காஞ்சனா. முனி படத்தின் இரண்டாம் பாகம். இந்தப் படம் ஜூலை முதல் வாரத்தில் வெளியாகும் என்கிறார்கள். இப்போது திடீரென மீண்டும் வெளியீட்டுத் திகதியில் மாற்றம். 22 ஆம் திகதிதான் படம் வெளிவருகிறதாம். 15 ஆம் தேதி விக்ரமின் தெய்வத்திருமகள், ஹாரி போட்டர் ஏழாம் பாகம் என படங்கள் வெளியாகியிருப்பதால் நெருக்கடியை சமாளிக் காஞ்சனாவின் வெளியீட்டுத் திகதியை மாற்றியிருக்கிறார்கள்.



சிறுகதை

# இதம்

மு.ரவீந்திரன்

இருபத்தாறு வருடங்களின் பின் அந்தச் சந்திப்பு இடம்பெற்றது. விபுல் என அழைக்கப்பட்ட விபுலானந்தன் வீட்டிலேயே அவர்கள் சந்தித்தார்கள்.

அவர்கள் அவனோடு பாடசாலையில் ஒன்றாகப் படித்தவர்கள். காலச்சக்கரம் சுழன்றதில் இப்போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில். அருகில் இருந்தவர்கள் சிலரைக் கூட இனம் காணமுடியவில்லை. காலம் அவர்களில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இருப்பதாறு வருடங்கள் என்பது ஒரு மனிதனின் ஆயுட்காலத்தில் மிகக் கணிசமான காலம். கதிரேசனுக்கு அந்தச் சந்திப்பு பிடித்திருந்தது.

எத்தனை மகிழ்வான நாட்களவை. அவற்றை வாழ்வின் அந்திம காலம் வரை மறக்க முடியாது. கல்லூரி முடிந்து அரசடி வீதி வழியாக கதிரேசன், டேவிட், மல்லிகா, ஸ்ரெலா, விபுல் என நண்பர்கள் நடந்து வருவார்கள்.



கந்தர்மடம் சந்தியில் வந்து தான் பஸ் ஏற வேண்டும். இப்போது போன்று கல்லூரி வாசல்களுக்கு பஸ்கள் வராது. கந்தர்மடம் சந்தியில் பஸ் கிடைக்காத போது கதிரேசன் திருநெல்வேலியில் உள்ள தனது வீடு வரை நடந்து போயிருக்கிறான். கந்தர்மடம் சந்தியில் கிளி மாமாவின் வாடகைக் கார் தரிப்பிடம் இருந்தது. சைக்கிளில் பலாலி வீதி வழியாகச் செல்பவர்கள் இலவசமாக சைக்கிள் சக்கரங்களுக்கு காற்று அடிக்க முடியும். அதற்கான வசதியும் அந்தக் கார் தரிப்பிடத்தில் இருந்தது. கந்தர்மடம் சந்தியில் அரசடி வீதியின் மறுபக்கம் ஒரு தேநீர்கடை. எப்போதும் அங்கே வாளிகளில் சுத்தமான குடிநீர் இருக்கும். வாளிகள் மூடப்பட்டு அதன் மேல் மூக்குப் பேணிகள் கவிழ்க்கப்பட்டுக் காணப்படும்.

இவர்கள் கந்தர்மடம் சந்தியை அடைந்ததும் நடந்த களைப்புத் தீர வாளியில் உள்ள தண்ணீரைப் பேணிகளில் அள்ளிக் குடிப்பார்கள்.

பஸ் கிடைக்காவிட்டால் சில வேளைகளில் உழவு இயந்திரங்கள், மாட்டு வண்டிகளிலும் அவர்கள் ஏறி வீடுகளுக்குப் போயிருக்கின்றனர். விபுலுக்கு உழவு இயந்திரத்தில் ஏறுவதென்றால் பயம். ஸ்ரெலா மிகவும் துணிச்சல்காரி. உழவு இயந்திரத்தில் எல்லோருக்கும் முன்னதாகஅவள் பாய்ந்து ஏறிவிடுவாள். அவள் விபுலைக் கேலி பண்ணுவாள்.

அரசடி வீதியின் ஓரத்தில் இருந்த பெரிய மரம் ஒன்றிலே இராச குளவிகள் கூடு கட்டியிருந்தன. பாடசாலை விட்டு வரும் போது ஒருநாள் கதிரேசன் அந்தக் கூட்டுக்கு கல்லெறிந்து விட்டான். குளவிகள் பெருமளவில் பறந்து வந்தன. இவர்கள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். வீதியால் வருவோரும் போவோரும் குளவிகளுக்கு அஞ்சி விலகி ஓடினார்கள். ஆனால் ஒருவர் மட்டும் அந்த வீதியால் எந்தவித பிரக்ஞையும் அற்று வருவதை இவர்கள் கண்டார்கள். அவர் மிகவும் ஆறுதலாக சைக்கிளை மிதித்தபடி வந்தார்.

"நல்லா மாட்டுப் படப் போறார்" என ஸ்ரெலா கூறினாள்.

"குளவி குத்தினால் எப்படியிருக்கும் என கதிரேசன் கேட்டான். ஸ்ரலா சிரித்துக் கொண்டே இப்படி இருக்கும் என்று சொல்லி அவனின் கையில் இறுக்கி கிள்ளினாள். கதிரேசனுக்கு கண்ணீர் வந்து விடும் போல் இருந்தது. அந்தளவுக்கு வலித்தது. ஆனால் மௌனமாக அந்த வலியைத் தாங்கிக் கொண்டான். டேவிட் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

எல்லோரும் நடக்கவிருக்கும் அவலத்தை வேடிக்கை பார்த்தனர். குளவிகள் சைக்கிளில் வந்தவரை விரட்டத் தொடங்கின. அவரும் அவற்றிடம் இருந்து தப்புவதற்காக சைக்கிளை வேகமாக மிதித்தார். அப்படியும் இரண்டு குளவிகள் அவரைக் கொட்டிவிட்டன.

"ஐயோ பாவம்" என விபுல் கூறினான். இவர்கள் அவனைப் பயந்தாங்கொள்ளி எனக் கேலி பண்ணினர். அதற்கு மேல் அவர்கள் அங்கே நிற்கவில்லை. கல்லெறிந்தது கதிரேசன் தான் என தெரிந்தால் அன்று என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்து அதற்குப் பின் வந்த நாட்களிலும் அவன் நடுங்கியிருக்கிறான்.

நண்பர்களுக்கு முன்னால் தன் வீரத்தைக் காட்டவே அவன் குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்தான். வேறு விதத்தில் வீரத்தைக் காட்ட கதிரேசனுக்குத் தெரியவில்லை. மல்லிகாவும் ஸ்ரெலாவும் தன்னை ஒரு ஆண் மகனாக அங்கீகரிக்க வேண்டும் என அவன் விரும்பினான். விபுலையும் டேவிட்டையும் விட தான் வீரன் என வெளிக்காட்ட கதிரேசனுக்கு இருந்த ஒரேவழி குளவிக் கூட்டுக்கு கல்லெறிவது தான். அதனாற்றான் அவன் அப்படி நடந்து கொண்டான்.

எங்கே தன்னையும் பயந்தாங்கொள்ளி என மல்லிகாவும் ஸ்ரெலாவும் சொல்லி விடுவார்களோ என எண்ணியதால் தான் கதிரேசன் தன் வீரத்தை வெளிப்படுத்தினான்.

ஆனால் அவன் எதிர்பார்த்த அளவுக்கு நண்பர்களிடம் இருந்து வரவேற்புக் கிடைக்கவில்லை. குளவிக் கூட்டுக்கு கல்லெறிந்ததை அவர்கள் பெரிய விடயமாக எடுக்கவில்லை. அவனை விட ஸ்ரெலா அந்தப் பணியைச் சிறப்பாக செய்திருப்பாள் என்பது கதிரேசனுக்கும் தெரியும்.

இருபத்தாறு வருடங்களுக்கு பின்னரும் ஸ்ரெலா அந்தச் சம்பவத்தை நன்கு நினைவில் வைத்திருந்தாள். அவள் அதைக் கூறியபோது இவர்கள் வாய் விட்டுச் சிரித்தனர்.

ஸ்ரெலா இப்போது கண்ணாடி அணிந்திருந்தாள். முன்னர் கறுப்பாக இருந்தவள் இப்போது சற்று நிறந்திருந்தாள். வெள்ளவத்தையில் உள்ள அடுக்கு மாடி வீட்டின் சொந்தக்காரி. குளோரின் தண்ணி அவளின் மேனியின் நிறத்தை மாற்றிவிட்டது. கண்ணாடியின் கீழே முகத்தில் கருவளையங்கள்.

தோலிலே சுருக்கங்கள். முதுமை ஸ்ரெலாவை அணுகிவிட்டதன் அடையாளங்கள். தலைமயிர் மட்டும் கருநாகம் போல் காணப்பட்டது.பூச்சுமையின் மகிமையாக இருக்கலாம் எனக் கதிரேசன் எண்ணிக் கொண்டான்.

டேவிட் அவன் எண்ணத்தைக் கலைத்தான். "நீ செல்வனைக் கண்டனியோ"?

கதிரேசன் இல்லை என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினான்.

செல்வன் பிராமணப் பொடியன். ஒருநாள் டேவிட்டும் நண்பர்களும் சேர்ந்து செல்வனின் சாப்பாட்டுப் பாசலுக்குள் மீன் துண்டுகளை கலந்து விட்டனர். இதை அறியாத செல்வன் அந்தச் சாப்பாட்டை சாப்பிட்ட போது மீன் துண்டு கடிபட அவன் சின்னத்தம்பி மாஸ்டரிடம் சொல்லிப் போட்டான். பிறகென்ன மாஸ்டரின் பிரம்பு டேவிட்டின் முதுகைப் பதம் பார்த்தது. சின்னத்தம்பி மாஸ்டரிடம் அடிவாங்கியதையிட்டு நான் கவலைப்படவில்லை என டேவிட் கூறினான்.

"கதிரேசன், அண்டைக்கு அது எனக்கு விளையாட்டா தெரிஞ்சது. ஆனால் அதை எண்ணிப் பிறகு நான் கவலைப்பட்டிருக்கிறன்'' என்றான்.

"அது ஒரு காலம்" இவன் கூறினான்.

'உண்மைதான். இப்போ நான் அப்போதைய டேவிட் இல்லை. காலம் எல்லாத்தையும் மாத்திப் போட்டுது.' என்று கூறிய டேவிட் "நான் செல்வனைக் கண்டால் அண்டைக்கு அவன்ர சாப்பாட்டுக்குள் மீனைப் போட்டதற்காக மன்னிப்பு கேட்பன்" எனச் சொன்னான்.

நண்பர்கள் அவனை பெருமிதத்துடன் பார்த்தனர்.

"இருபத்தாறு வருடங்களுக்குப் பிறகு இப்படிச் சந்திப்போம் என எங்களில் யாரும் எதிர்பார்க்கவில்லையல்லவா" மல்லிகா சொன்னாள்.

"பேஸ்புக் எங்களை இணைச்சிருக்கு" ஸ்ரெலா கூறினாள். "என்னடா விபுல் பேசாமல் இருக்கிறாய் என மல்லிகா இயல்பாய் கேட்டாள்.

"இல்லையே நீங்கள் கதைக்கிறதைக் கேட்டுக் கொண்டிருக்கிறன்" என விபுல் கூறினான்.


விபுலின் வீடு கோண்டாவிலில் இருந்தது. அங்கேதான் அவர்கள் சந்தித்தார்கள். விபுலின் மனைவி பலகாரமும் தேநீரும் கொடுத்து உபசரித்தாள். இரண்டு பிள்ளைகள். நாற்பத்தைந்து வயதாகியும் விபுலுக்கு இன்னும் பொருத்தமான வேலையொன்றும் கிடைக்கவில்லை. பயந்தாங்கொள்ளி என விபுலை அன்று பகிடி பண்ணிய மல்லிகா அவனுக்கு உடனடியாக நல்லதொரு வேலை எடுத்துத்தரத் தன்னால் முடியும் என்றாள். அது எல்லோருக்கும் மகிழ்வைத் தந்தது. மல்லிகாவின் கணவன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர். அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. அவளும் கொழும்பில் தான் வசிக்கிறாள். ஆனால் ஸ்ரெலாவுக்கு இது தெரியாது.

"இவளைக் கண்டாலும் எனக்கு அடையாளம் பிடிச்சிருக்க முடியாது" என அவன் எண்ணினான்.

நாகநாதன் மாஸ்டர் விலங்கியல் படிப்பிக்கும் போது கூறியது அவனுக்கு நினைவுக்கு வந்தது. இஞ்ச படிக்கிற பொடியளை பத்து வருசத்துக்குப் பிறகும் என்னால அடையாளம் காணமுடியும். ஆனால் பொம்பிளைப் பிள்ளையளை அடையாளம் காண முடியாது.நாகநாதன் மாஸ்டர் இப்படிக் கூறிய போது கதிரேசன் மறுவரிசையில் அமர்ந்திருந்த ஸ்ரெலாவைப் ஓரக்கண்ணால் பார்த்தான். அவள் இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகை அவனுக்கு மிகக் குளிச்சியாக இருந்தது.

காலம் விரைவாக உருண்டோடி விட்டது. ஆனால் மனது மட்டும் காலத்தோடு ஓடத் திராணியற்று அங்கேயே நின்று விட்டது. அன்று குளவிக் கூட்டுக்கு கல்லெறிந்தபோது ஸ்ரெலா இவனின் கையில் கிள்ளினாள். அந்த இடத்தை இப்போது கதிரேசன் தடவிப் பார்த்தான். இருபத்தாறு வருடங்களுக்குப் பின்பும் அது அவனுக்கு இதமாக இருந்தது. ✱

# பெற்றோர்களுக்காக....



**பொ**துவாக 13-19 வயது வரையிலான பருவத்தை டீன்-ஏஜ் என்கிறோம். இந்த டீன்-ஏஜ் பருவம் என்பது வாழ்வில் முக்கியமான காலகட்டம்.

இந்தக் காலகட்டத்தில், பெண்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு மாறுதல்களைச் சந்திக்கின்றனர். அதனால், பெற்றோராகிய நீங்கள் உங்கள் பெண் பிள்ளைகளை குழந்தைப் பருவத்தில் எவ்வளவு அக்கறையோடு கவனித்தீர்களோ அதேபோல், இந்தப் பருவத்திலும் கவனிக்க வேண்டியது அவசியம்.

டீன்-ஏஜ் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் என்ன?

பூப்பெய்துவதில் சில குழந்தைகளுக்கு கால தாமதம் ஏற்படலாம். உடல் உறுப்பு வளர்ச்சி சரியாக இருந்தால் 16 வயது வரை பொறுத்திருந்து பார்க்கலாம். அப்படி இல்லையெனில், உடன் மருத்துவரை அணுகுவது நல்லது.

சிலருக்கு முகத்தில் பருக்கள் ஏற்படும். இது எண்ணெய் பசையுள்ள தோல், ஹோர்மோன் மாறுபாடுகளால் ஏற்படக்கூடிய சாதாரண ஒரு நிகழ்வே. ஆனால், இந்த வயதுப் பெண்கள் இதை ஒரு நோய் போல கருதுவர் எனவே, இதுகுறித்து, பெற்றோர்கள் தெளிவாகத் தங்கள் குழந்தைகளுக்கு விளக்க வேண்டும். எக்காரணம் கொண்டும், பருக்களை கிள்ளாமல் இருக்க அறிவுறுத்துவது அவசியம்.

அடுத்து, இளம் பெண்களுக்கு, தன் சுத்தம் பற்றித் தாய்மார்கள் எடுத்துக் கூற வேண்டியது மிக மிக அவசியம். நோய் தொற்று வராமல் இருப்பதற்குச் சுகாதாரம் மிக முக்கியம். அவர்கள் பயன்படுத்தும் உள்ளாடைகள் குறித்தும் கவனமுடன் இருக்க அறிவுறுத்த வேண்டும்.

தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்கு, அவர்களது உடல் வளர்ச்சி பற்றி நிச்சயமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். உடல் உறுப்பு வளர்ச்சி மாற்றத்தால், அவர்கள் உணர்வுப் பூர்வமாக பலவிதமான மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். எனவே, இந்தப் பருவத்தில் எல்லோருக்கும் இப்படித் தான் உடல் வளர்ச்சி இருக்கும். இதுகுறித்து கவலைப்பட வேண்டாம் என்பதைப் பெற்றோர்கள் எடுத்துக் கூறுவது மிகவும் அவசியம். அத்தோடு, வெளியிடங்களில் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றியும் கூற வேண்டும். வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்களின் டீன்-ஏஜ் பெண்களுடன் தினமும் சிறிது நேரமாவது செலவழிக்க வேண்டும். அவர்களது உடல்நலம், சந்தேகங்கள், படிப்பு பற்றி மனம் விட்டுப் பேச வேண்டும். இது அவர்களிடம் தன்னம்பிக்கையை வளர்ப்பதுடன் தாயுடனான நெருக்கத்தையும் பாசத்தையும் மேம்படுத்தும்.

இந்த வயதுக்கே உரிய பல்வேறு பிரச்சினைகளால், டீன் -ஏஜ் குழந்தைகள், பொதுவாக அதிகம் சாப்பிட மாட்டார்கள். இதனால், இரத்த சோகை ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றைச் சரிப்படுத்துவதுடன் ஹீமோகுளோபின் அளவை 10க்கு மேல் வைத்துக் கொண்டால், படிப்பில் முன்னேற்றம், வேலையில் சுறுசுறுப்பு, ஆரோக்கியம் ஆகியவை மேம்படும்.

# இளமை அவஸ்தை



**இ**ளமையில் பெரும்பாலான ஆண்கள், பெண்களுக்குப் பெரும் பிரச்சினையாக இருப்பது இளநரை.

உணவுக் குறைபாடு, மரபுத் தன்மை, குளிக்கும் தண்ணீரை அடிக்கடி மாற்றுவது, மாசுபட்ட சுற்றுப் புறச் சூழல், அடிக்கடி ஷாம்பு போடுவது ஆகியவையே இளநரை ஏற்பட அடிப்படைக் காரணம். இந்த காரணிகளைத் தவிர்த்து, கட்டுப்பாட்டுடன் இருந்தால் இளநரையை தவிர்க்கலாம்.

இளமையில் முக்கியப் பிரச்சினையாக அமைவது முகப்பருக்கள். முகத்தில் உள்ள எண்ணைச் சுரப்பிகள் அதிகம் செயற்படுவதாலும் ஆன்ட்ரோஜன் எனப்படும் ஹோர்மோன் தூண்டுதலே இதற்குக் காரணம் ஆகும். இளமைக்காலத்தில் இது அதிகம் சுரக்கும்.

தக்காளிக்கு குளிர்ச்சித் தன்மை இருப்பதால் முகப்பரு வராமல் தடுக்கும் தன்மை தக்காளிக்கு உண்டு. உணவில் தக்காளியை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இளமைக்காலத்தில் உலர்ந்த சருமத்தை உடையவர்கள் எண்ணைத்தன்மை உடைய சோப்பைப் பயன்படுத்த வேண்டும். எண்ணைத் தன்மையுள்ள சருமத்தை உடையவர்கள், சாதாரண சோப்புகளை ஒருநாளைக்கு 4 அல்லது 5 முறை பயன்படுத்தி முகத்தைக் கழுவி எண்ணெய்ப்பசை இல்லாமல் வைத்துக்கொள்ளவேண்டும்.

இளமையில் மற்றொரு பிரச்சினை – தேமல்.

உடம்பில் ஏற்படும் எல்லா வெண் புள்ளிகளுக்கும் பல காரணங்கள் உள்ளன. அதேபோல் தேமல் வந்தால் உடனே மருத்துவரைச் சந்தித்துச் சோதனை செய்து சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

உடலில் எடை கூடினாலோ அல்லது காலுக்குத் தகுந்த செருப்பு அணியாவிட்டாலோ அல்லது உயரமான செருப்பு அணிந்தாலோ பித்த வெடிப்பு ஏற்படும். மேலும் உடலில் இரும்புச் சத்து குறைந்தாலும் பித்த வெடிப்பு ஏற்படும்.

பெண்களுக்கு மாதவிலக்கு காலத்தில் மன அழுத்தம் காரணமாக வாய்ப்புண் ஏற்படும். உணவில் கீரைகள், பழங்கள், காய்கறிகளை அதிகமாக சேர்த்துக் கொண்டால் வாய்ப்புண் ஏற்படுவதை தவிர்க்கலாம். தொடர்ந்து வாய்ப்புண் இருந்தால் மருத்துவரிடம் செல்லவும்.

# வாழ்க்கை வாழ்வதற்கே



**பி**ரச்சினைகள் இல்லாத மனிதனே கிடையாது. வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் பிரச்சினைகள் கூட ஒரு அனுபவம் தான். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான பிரச்சினைகள் இருக்கும். அதுபோலவே, ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒவ்வொரு விதமான தீர்வு இருக்கும். எனவே, பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடாமல் அவற்றைத் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். அதற்கான சில வழிமுறைகள் இதோ உங்களுக்காக.

நமக்கு ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைக்கு வேறு யாரும் காரணமில்லை. அதை நாம் தான் வரவழைத்துக் கொண்டோம். எனவே, இந்த பிரச்சினையைத் தீர்க்க நம்மால் மட்டும் தான் முடியும் என்று நம்பிக்கையுடனும் மன வலிமையுடனும் அவற்றை எதிர்கொள்ளுங்கள்.

எந்தப் பிரச்சினையையும் பெரிதுபடுத்திப் பார்க்கும் பூதக்கண்ணாடி மனநிலையைக் கைவிடுங்கள். எதையும் எளிமைப்படுத்திப் பார்க்கப் பழகுங்கள்.

உங்களுக்கு நேர்ந்த பிரச்சினையை விட, இந்த உலகில் எவ்வளவோ பிரச்சினைகள் எப்படியெல்லாமோ தீர்க்கப்படுகின்றன. எனவே, அவற்றையெல்லாம் விட நமது பிரச்சினை ஒன்றும் பெரிதில்லை என்று எண்ணுங்கள்: அப்போது தான் பிரச்சினைக்கு உரிய தீர்வைத் தெளிவாகப் யோசிக்க முடியும்.

எல்லா பிரச்சினைக்கும் என்னால் தீர்வு காணமுடியும் என்று அசட்டுத் தைரியத்துடன் செயற்படாதீர்கள். அதேபோல், தேவையில்லாமல் பிறரது பிரச்சினைகளையும் உங்கள் சுமையாக ஏற்றுக் கொள்ளாதீர்கள். தேவைப்படும் போது, அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையைப் பெறுங்கள்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடுகிறது. எனவே, முடிந்தவரை அன்றைய பிரச்சினையை அன்றே தீர்க்க முயலுங்கள். இல்லாவிடில், நேற்றைய பிரச்சினை, நாளைய பிரச்சினை என அனைத்தும் சேர்ந்து உங்களை வலுவிழக்கச் செய்யும்.

ஒரு நாளில் குறிப்பிட்ட பிரச்சினைக்குக் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கித் திட்டமிட்டு நிறைவேற்றுங்கள். அதை அந்தந்த நேரத்தில் முடித்துவிட முயற்சியுங்கள்.

ஒரு நேரத்தில் ஒரு பிரச்சினையை மட்டும் சமாளியுங்கள். எல்லாப் பிரச்சினைக்கும் ஒரே தீர்வு காண முடியாது என்பதில் கவனமாகவும், உறுதியாகவும் இருங்கள்.

ஒவ்வொரு பிரச்சினைக்கும், ஒவ்வொரு விதமான அணுகுமுறை மாற்றங்களைக் கண்டுபிடியுங்கள். அதற்கேற்ப தீர்வுகளைக் காணுங்கள். எதை எளிதாக முடிக்க முடியுமோ அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவு செய்யுங்கள்.

இந்த அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்த ஆயத்தமாகிவிட்டீர்களா? தைரியமாக, மனரீதியாகப் பிரச்சினைகளைக் கையாள தயாராகிவிட்டீர்களா?

இப்படிப் பிரச்சினைகளைக் கண்டு நீங்க பயப்படவில்லை என்றால், இனிமேல் எந்தப் பிரச்சினையும் உங்களைத் தடுமாற வைக்காது. அவை உங்களைக் கண்டு ஓடிவிடும். முயன்று பாருங்கள்; வெற்றி பெறுவீர்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!

# எண்ணெய்ச் சருமம் உடையவர்களா?

**எ**ண்ணெய் பசை சருமம் கொண்டவரா நீங்கள்? அக்னி வெயில் உங்கள் எண்ணெய்ப் பசையை மேலும் அதிகரிக்கச் செய்து உங்கள் முக அழகைக் கெடுக்கிறதா? எண்ணெய்ப் பசை நீங்கி அழகாக காட்சியளிக்க இதோ சில யோசனைகள்.

**எண்ணெய்ப் பசை நீங்க:**

வெள்ளரிக்காயைத் தினமும் காலையில் முகத்தில் தேய்த்து வர முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிவதை தவிர்க்கலாம். வெள்ளரிச்சாற்றுடன், பால் பவுடர் கலந்து தடவினாலும், எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாக காணப்படும்.

தக்காளிப் பழச்சாற்றை முகத்தில் தடவி காய்ந்த பின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும். பால் மற்றும் முட்டையின் வெள்ளைக்கருவுடன், காரட் துருவலைக் கலந்து முகத்தில் தடவினால், அதிகமாக எண்ணெய் வழிவது குறையும்.

எண்ணெய்ப் பசைச் சருமத்தினர், அடிக்கடி முகம் கழுவ வேண்டும். முகத்தை அலம்ப சோப்பிற்குப் பதில் கடலை மாவைப் பயன்படுத்தலாம். இதனால், எண்ணெய் வழிவது குறைவதோடு, முகமும் பளபளப்பாகக் காட்சியளிக்கும்.

எண்ணெய்ப் பசை சருமம் உள்ளவர்கள் மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவினால், எண்ணெய் வழிவது குறையும்.

எலுமிச்சைச் சாறு, முட்டையின் வெள்ளைக்கரு, திராட்சைச் சாறு ஆகியவற்றைச் சம அளவு எடுத்துக் கொண்டு அவற்றை நன்றாகக்கலக்கி, முகத்தில் பூச வேண்டும். சிறிது நேரம் கழித்து முகத்தைத் தண்ணீரால் கழுவ வேண்டும்.

பப்பாளிக் கூழ், வேப்பிலைப் பொடி ஆகியவற்றை நன்றாகப் பசை போல் குழைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்தால், முகத்தில் வழியும் அதிகப்படியான எண்ணெய்த் தன்மை குறையும்.




**முகத்தில் காணப்படும் ரோமங்கள் நீங்க:**

குப்பைமேனி இலை, வேப்பிலை, மஞ்சள் ஆகியவற்றைச் சம அளவு எடுத்து அரைத்து தேவையற்ற ரோமங்கள் உள்ள இடங்களில் தேய்க்க வேண்டும். அதே போல், வேப்பங்கொழுந்தை அரைத்தும் பூசலாம். இவ்வாறு செய்து வந்தால் நாளடைவில் தேவையற்ற ரோமங்கள் அகன்று விடும். பச்சைப் பயற்றை நன்றாக அரைத்து முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், சிலருக்கு முகத்தில் காணப்படும் தேவையற்ற ரோமங்கள் உதிர்ந்து விடும். தினசரி மஞ்சள் தேய்த்துக் குளித்து வருவதாலும், முகத்தில் ரோமங்கள் வளராது



# இளஞ்சுடர்



## கைபடக்கத் தொலைபேசிக் கதிர்வீச்சியிலிருந்து பாதுகாத்துக்கொள்ள எட்டு வழிகள்




செல்லிடத் தொலைபேசிகளின் கதிர்வீச்சின் அளவினால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது என உலக சுகாதார அமைப்பினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை யொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இக்கதிர்வீச்சின் தாக்கத்தை குறைத்துக்கொள்வதற்குப் பல வழிகள் உண்டு. அவற்றைக் கடைப்பிடித்தால் இவ் ஆபத்திலிருந்து தப்பிவிடலாம்.

அமெரிக்காவில் பிரபல அரசசார்பற்ற நிறுவனமான சூழல் பணிக் குழு, அல்லது ஈ.டபிள்யூ.எஸ். எனும் அமைப்பு தொலைபேசிப் பாவனையாளர்கள் செல்லிடத் தொலைபேசிகளிலிருந்து வெளிவெளியிடப்படும் கதிர்வீச்சு மற்றும் மின்காந்தக் கதிர்களின் தாக்கங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு பின்வரும் ஆலோசனைகளை முன்வைத்துள்ளது. அவற்றைப் பின்பற்ற முயற்சி செய்யுங்கள்.


1) கதிர்வீச்சுக் குறைவாக காணப்படும் தொலைபேசிகளைப் பயன்படுத்துங்கள்.
2) ஹெட் செட் அல்லது ஸ்பீக்கரை உபயோகியுங்கள்.
3) சமிக்ஞை குறைந்த இடங்களில் தொலைபேசி உரையாடலைத் தவிர்க்கவும்.
4) கதிர்வீச்சுக் கவசங்களைத் தவிர்க்கவும்.
5) சிறுவர்கள் தொலைபேசி பாவிப்பதை மட்டுப்படுத்தவும்.
6) அதிகமாகக் கேளுங்கள், குறைவாகக் கதையுங்கள்.
7) தொலைபேசியை உடலுக்கு அப்பால் வைத்திருங்கள்.
8) வாய் மூல உரையாடலைவிட குறுஞ்செய்திகளை தெரிவு செய்யுங்கள்.










## கணினிக் கண்ணீர்

அதிக நேரம் கணினி உபயோகிக்கிறவர்களுக்கு கண்கள் வரண்டு, கண்ணீரே இல்லாமற் போகலாம். அடிக்கடி தலைவலி, கண்கள் இழுக்கின்ற மாதிரி உணர்வு, கண்கள் துடித்தல், எரிச்சல், பார்வை மங்கின மாதிரி உணர்வு என்பன கணினி விஷன் சின்ட்ரோமின் அறிகுறிகளாக இருக்கலாம். சதா சர்வ காலமும் கணினியே கதியாக இருப்பவர்கள், 20 & 20 & 20 விதியைப் பின்பற்றியே ஆக வேண்டும். அதாவது 20 நிமிடங்களுக்கு ஒரு முறை, 20 நொடிகளுக்கு, 20 அடி தூரத்தில் உள்ள காட்சியைப் பார்க்க வேண்டும்.

உள்ளங்கைகளைச் சூடு பறக்கத் தேய்த்து, மூடிய கண்கள் மேல் வைத்து எடுக்கலாம். கண்கள் அதிகம் வரண்டு போனால், கண் மருத்துவரிடம் செல்லல் வேண்டும். வரட்சியின் அளவைப் பொறுத்து, தேவைப்பட்டால், கண்களுக்கான செயற்கைக் கண்ணீர் மருந்துகளைப் பரிந்துரைப்பார்கள் டாக்டர்கள். கணினி வேலையில் சேர்வதற்கு முன்பே, கண் பரிசோதனையை மேற்கொண்டு, ஆலோசனை பெறுவது பாதுகாப்பானது என்றும் அறிவுறுத்தப்படுகிறது. கிட்டப் பார்வையும் இல்லாமல், தூரப் பார்வையும் இல்லாமல், கணினிக்கு நடுத்தரப் பார்வை தேவை. கண்ணாடி தேவைப்படும் போது, தூரப் பார்வைக்கும், கிட்டப் பார்வைக்குமான கண்ணாடி கணினிக்குச் சரிவராது. கணினி வேலைக்கான பிரத்தியேக கண்ணாடிகள் இருக்கின்றன. விசேட கோட்டிங்குடன், நடுத்தரப் பார்வைக்கான அதைக் கேட்டு வாங்க வேண்டியது அவசியம்.

கணினிக்கும், உங்களுக்குமான இடைவெளி சரியாக இருக்க வேண்டும். பாதங்கள் தரையைத் தொடுகின்ற மாதிரி உட்கார வேண்டும். 90 டிகிரி கோணத்தில் உட்கார்வது சரியாக இருக்கும். கணினிக்கு ஆன்டி ரெஃப்ளெக்ஷன் மொனிட்டர் போடுறதும், கண்களைப் பாதுகாக்கும். பொதுவா 40 வயதில் இருக்கிறவர்களுக்கு, வெள்ளெழுத்தோடு சேர்ந்து, இந்த கணினி விஷன் சின்ட்ரோம் பிரச்னையும் வரும். அந்த வயசுல வரக்கூடிய பிரச்னையா ஒதுக்காமல், கணினி விஷன் சின்ட்ரோமுக்கும் சோதனை செய்து, தேவையான சிகிச்சைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

# அன்பின் மூன்று வகைகள்

அன்பு என்ற பண்பு எல்லோருக்கும் பிடித்த, யாவரையும் கவரக்கூடிய ஒன்று ஆகும். அன்பாக பேசி பழகும் ஒருவருடன் யாருமே வெகு விரைவில் ஐக்கியம் ஆகிவிட முடியும். அன்பு என்ற இந்த வார்த்தைக்கு பாசம், நேசம், காதல், கருணை என்று பல்வேறு பரிணாமங்கள் உள்ளன.

உலகில் காணப்படும் அன்பை பொதுவாக மூன்று வகைகளாக பிரிக்கலாம்.

**மிருக அன்பு**

மிருகம் என்பது பகுத்தறிவு இல்லாத உயிரினமாக இருக்கின்ற போதிலும், அவைகளிடத்திலும் அன்பு உண்டு. அதிலும் சில மிருகங்கள் மனிதனைவிட ஒருபடி அதிகமான அன்பும் நன்றியும் உள்ளதாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

என்னதான் மிருகங்களிடம் அன்பு காணப்பட்டாலும், அந்த அன்பு பொதுவாக சுயநலம் சார்ந்த அன்பாகவே இருக்கும். தனக்கும் தன் குட்டிகளுக்கும் போகத்தான் மற்ற எதுவுமே என்ற நிலையில் வாழும். தன்னை வாழ வைப்பது யார், யாரிடம் தஞ்சமாக உள்ளோம், தனக்கு உணவு கொடுப்பது யார் என்ற எந்த ஒரு உணர்வும் இல்லாமல் அது சுகமாய் தங்கி இருக்கும் இடத்தில் அந்நியர் யாரும் வந்துவிட்டால் உடனே ஒரு சத்தமிட்டு தன் எதிர்ப்பை வெளிப்படுத்துவதோடு கடும் கோபத்துடன் எதிராளி மீது மோதும் தன்மையுடையது

இது போன்ற அன்பு இன்று அனேக மக்களிடமும் காணப்படுவதுதான் மிகவும் வேதனையான விடயம். தலைவிரித்தாடும் சுயநலம், எல்லாவற்றிலுமே ஏதாவது ஆதாயத்தை எதிர்பார்த்து செய்யும் நிலைமை. யார் நஷ்டம் அடைகிறார், அதனால் என்ன பாதிப்பு என்றெல்லாம் கொஞ்சமும் யோசனை செய்யாமல் தானும் தன் குடும்பமும் நன்றாக இருந்தால் போதும். யார் எப்படிப் போனால் நமக்கென்ன என்ற நோக்கோடு இன்று மனிதர்கள் செயற்படுகின்றனர். இவை எல்லாம் மிருக அன்பை விட கேவலமான அன்பு மனிதனிடம் புகுந்து விட்டதால் வந்த அலங்கோலங்கள்.

**மனித அன்பு:**

மனித அன்பு என்பது மாறும் அன்பாகும். இன்று நீ இல்லாமல் வாழவே முடியாது என்று சொல்லும் அதே வாய், நாளை நீ இருந்தால் என்னால் வாழவே முடியாது என்று மாறிப் பேசும். இன்று உன்னை போல் நல்லவன் இல்லை என்று சொல்லும் வாய், நாளை உன்னைப் போல ஒரு கெட்டவனை நான் பார்த்ததே இல்லை என்று சொல்லும். மனித அன்பு நம்பகத்தன்மை அற்றது ஆகும்.

மேலும் இந்த அன்பு பச்சோந்தி போல அவ்வப்பொழுது நிறம் மாறும் தன்மை கொண்டது. ஏழை, பணக்காரன், பெண், ஆண், தொழிலாளி, முதலாளி, என்பதின் அடிப்படையிலும் வயது மட்டும் இருக்கும் சூழ்நிலை பதவிக்கு தகுந்தாற்போலவும் நிறம் மாறும் தன்மையுள்ளது.


ஆளைப் பார்த்தால் ஒரு அன்பு ஆளை பார்க்காவிட்டால் ஒரு அன்பு, தனியாக இருக்கும் போது ஒரு அன்பு, கூட்டமாக இருக்கும் போது ஒரு அன்பு, பணம் இருந்தால் ஒரு அன்பு, பணம் இல்லாவிட்டால் ஒரு அன்பு, அப்பப்பா எத்தனை விதமான மனித அன்புகள். உலக மனிதர்களின் பச்சோந்தி தனமான அன்பு எப்பொழுது எப்படி மாறும் என்பதை விளக்கி சொல்ல முடியவே முடியாது! .

**தெய்வீக அன்பு**

தெய்வீக அன்பு என்பது தன்னைப் பற்றி என்றுமே கவலைப்படாது, பிறர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னையே கொடுக்க கூடத் தயங்காது. ஒருவன் எவ்வளவுதான் துரோகம் செய்திருந்தாலும் அவன் மீதிலும் அன்பு வைக்கும் நிலையான அன்பே தெய்வீக அன்பு.

# மறுக்கப் பட்டு வரும் தோட்டத்தொழிலாளர்களின் சுகாதார சேவைகள்

■ இரா.புத்திரசிகாமணி



சுகாதார அமைச்சும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சும் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட மலையகம் குறித்த கணிப்பீடுகளின் அடிப்படையில் சில திடுக்கிடும் தகவல்கள் வெளிப்பட்டுள்ளன.

* குறைப்பிரசவம்
* வலது குறைந்த குழந்தைகள் பிறப்பு
* போசாக்கின்மை
* தாய்சேய் இறப்பு விகித அதிகரிப்பு
* டெங்கு மலேரியா போன்ற தொற்று நோய்ப் பரவல்
* தொற்று நோய்களின் தாக்கம்

என்பனவற்றில் மலையகம் முதல் இடத்தைப் பிடித்துள்ளதாம் இதனால் அரசாங்கம் இம்முறை தேசிய போசாக்கு வாரத்தை நுவரெலியா மாவட்டத்திலேயே கொண்டாடியது. இது தொடர்பான தடபுடலான விழாக்களையும் எடுத்தது. ஆடம்பரமான விழாக்களாலும் கொண்டாட்டங்களினாலும் குறிப்பிட்ட பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் பரிகாரம் காணப்பட்டு விட்டதா? இல்லவே இல்லை.

இதற்கெல்லாம் அடிப்படைக்காரணமே மலையகத்தில் அடிப்படைச் சுகாதார வசதிகள் இல்லாமையே. நலிவடைந்த நிலையில் உள்ளமையே.

மலையகத்தில் உள்ள தேயிலை, இறப்பர் தோட்டங்கள் முன்னர் வெள்ளைக்கார கம்பெனிகள், பின்னர் அரச பெருந்தோட்டயாக்கம், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், காணி அபிவிருத்தி சபை என்பனவற்றால் நிர்வகிக்கப்பட்டபோது தோட்டத்தொழிலாளர் சகலருக்கும் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டு வந்தன.

குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு வட்டங்களைத் துப்பரவு செய்வதற்கு நிரந்தரமாக துப்பரவுத் தொழிலாளர்கள் (வாசல் கூட்டிகள்) நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் தினசரி தோட்டங்களிலுள்ள வீட்டு முற்றங்கள், லயக் கான்கள் என்பனவற்றைக் கூட்டித் துப்பரவு செய்து வந்தனர். இவர்களைக் கண்காணிக்க ஒரு கங்காணியும் நியமிக்கப்பட்டிருந்தார். லயம் லயமாகச் சென்று எல்லா இடங்களும் துப்பரவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அவதானிப்பதே இவரது கடமை.

இதோடு நின்று விடவில்லை. ஒவ்வொரு தோட்டத்திலும் தோட்ட வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்தத் தோட்ட அதிகாரியும் தொழிலாளர்களின் குடியிருப்புக்களுக்குச் சென்று நோயாளர்கள், வயோதிபர்கள், குழந்தைகள் எனப் பலரையும் சோதித்து அவர் களுக்குத் தேவையான மருந்துகளைக் கொடுப்பார்.

ஆனால் இந்த நிர்வாக முறை மாற்றப்பட்டு எல்லாத் தோட்டங்களும் 22 தோட்டக் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், இந்த சலுகைகள் எல்லாம் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டன. இதனால் தோட்ட லயன்களும் சீர் கெட ஆரம்பித்து விட்டன.

பல குடியிருப்புகளின் முன்புறமுள்ள கான்கள் உடைந்து சிதைந்து போய்க் காணப்படுகின்றன. அந்த கான்களில் குப்பை கூளங்கள் நிறைந்து சாக்கடைகள் போல் காணப்படுகின்றன. ஒரு சில தொழிலாளர்கள் தமது வீட்டு முற்றங்களையும் கான்களையும் துப்பரவாக வைத்துள்ள போதிலும் பெரும்பாலானவர்கள் அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை.

இதனால் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளைச் சுற்றிப் பெரிய சாக்கடைகள் உருவாகியுள்ளன. அங்கே டெங்கு, மலேரியா மற்றும் கொடிய தொற்று நோய்களைப் பரப்பும் நுளம்புகளும் விஷக்கிருமிகளும் உற்பத்தியாகின்றன.

இதனால் தான் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்கள் மத்தியில் இந்த ஆய்வாளர்கள் கண்டு பிடித்த அத்தனை குறைபாடுகளும் காணப்படுகின்றன. எனவே இதற்கு ஒரே ஒரு மாற்று வழி, தோட்ட நிர்வாகங்கள் தோட்டத் தொழிலாளர்களின் பொதுச் சுகாதாரத்தில் அக்கறை கொள்ள வேண்டும்.

முன்னர் போன்று தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளையும் சுற்றுவட்டாரங்களையும் துப்பரவு செய்வதற்கான துப்பரவு தொழிலாளர்களை நியமிக்க வேண்டும். லயன் அறைகளைச் சுற்றி உள்ள கான்களைத் திருத்தி அமைத்துக் கொடுக்க வேண்டும். அவை முறையாகப் பரா மரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

இதை மட்டுமன்றி தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான குடிநீர் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

மயிலே மயிலே இறகு போடு என்றால் கிடைக்காது. அதனைப் பெற வேண்டிய வழியில் பெற தொழில் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறுக்கப்பட்ட சுகாதார சேவைகளும் சலுகைகளும் மீண்டும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறான அடிப்படை அத்தியாவசிய சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொடுத்தால் மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் சுகாதாரக் குறைபாடுகள் அனைத்தும் நீங்கி விடும். இதற்கு ஆவன செய்ய வேண்டியது தொழிற் சங்கங்களின் கடமை அல்லவா? ★

# எங்களைக் கவனிப்பார் இல்லையே!

■ புசல்லாவை சனத்

நுவரெலியா மாவட்டத்தில் அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நகரம்தான் புசல்லாவை நகரம். கம்பளைக்கும் நுவரெலியாவுக்கும் இடையில் இருக்கும் புசல்லாவை நகரை மையமாகக் கொண்டு 41 தோட்டங்கள் இருக்கின்றன. இடைக்கிடை சிங்களக் கிராமங்களும் இருக்கின்றன. இந்தச் சிங்களக் கிராமங்கள் காலம் காலமாக இருந்தவை அல்ல. தோட்டக்காணிகள் சுவீகரிக்கப்பட்டு தோட்டங்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டவை.

இவற்றுள் (புரட்டொப்) தமிழில் புரட்டாசி தோட்டம் என அழைக்கப்படுவது புகல்லாவை நகரில் இருந்து 22 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது. ஆனால் இத்தோட்டத்திற்கும் புசல்லாவை நகருக்கும் இடையில் முறையான போக்குவரத்து வசதிகள் இல்லை. காரணம் இத்தோட்டத்திற்குச் செல்லும் பாதை எந்தவிதமான புனரமைப்புகளுமின்றி மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. குன்றும் குழியுமாக இருக்கும் இப்பாதையில் வாகனங்கள் செல்ல முடியாது.

முன்பு சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை போக்குவரத்துச் சபை ஒரு பஸ்ஸை இப்பாதையில் சேவையில் ஈடுபடுத்தியது. ஆனால் அதுவும் இப்போது இல்லை.

குறிப்பிட்ட சில நேரங்களில் சில தனியார் மினி பஸ் வண்டிகள் இப்பாதையில் சேவையில் ஈடுபடுகின்றன. தமது போக்குவரத்துக்கு இதை நம்பித்தான் இப்பிரதேச மக்கள் இருக்கின்றனர்.

நகருக்குத்தொழிலுக்காக வருபவர்களும் பாடசாலை மாணவர்களும் போக்குவரத்தில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இந்த தனியார் பஸ்காரர்கள் 22 கிலோ மீற்றர் தூரம் பயணத்திற்கு 120 ரூபாவை அறவிடுகின்றனர்.

இதனால் உயர் கல்வியைத் தொடரக்கூடிய பல தொழிலாளர்களின் பிள்ளைகள் படிப்பை இடை நிறுத்தி உள்ளனர்.

அதே வேளை இப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு புசல்லாவை, கம்பளை, நுவரேலியா என தூர இடங்களில் இருந்தே ஆசிரியர்கள் வருகின்றனர். இந்த ஆசிரியர்களும் புசல்லாவை நகருக்கும் புரட்டாசி தோட்டத்திற்கும் இடையில் ஒழுக்கான பஸ் போக்குவரத்து இல்லாததால் குறிப்பிட்ட நேரத்திற்குப் பாடசாலைக்கு வரமுடிவதில்லை. பெரும்பாலும் காலை ஒன்பது மணிக்குப் பின்னரே ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு வந்து சேர்கின்றனர். இதனால் இங்குள்ள மாணவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புரட்டாசித் தோட்டத் தொழிலாளர்களின் சிரமங்கள் இதோடு நின்று விட்டனவா? இல்லையே நோயார்களும், கர்ப்பிணித்தாய்மார்களும் வைத்திய கிகிச்சைபெற புசல்லாவை நகருக்கு வந்து அங்கிருந்து வவுகப்பிட்டிய என்ற இடத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கே செல்ல வேண்டியுள்ளது.

இரவு நேரங்களில் இந்த கர்ப்பிணித்தாய்மாரை அல்லது திடீர் விபத்துகளினால் பாதிக்கப்படுபவர்களை ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்வதானால் ஒரு முச்சக்கரவண்டியைக் கூட வாடகைக்கு அமர்த்த இயலாது.


அப்படியே அபூர்வமாக ஒரு முச்சக்கரவண்டியைப் பாதையில் செல்லும்போது குலுக்கல் காரணமாக இடை நடுவிலேயே பிரசவம் ஏற்பட்டு உயிர் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன.

புரட்டாசி தோட்டத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் வாக்காளர்கள் இருக்கின்றனர். தேர்தல் காலங்களில் மட்டும் இங்கு வரும் வேட்பாளர்கள் எல்லோரிடமும் இப்பாதையை அபிவிருத்தி செய்து தரும்படி விண்ணப்பங்களைக் கொடுத்துள்ளோம்.

எல்லோருமே உடனே செய்து கொடுக்கிறோம் என்று உத்தரவாதம் அளித்துவிட்டுச் செல்வார்கள். அவ்வளவு தான். மேற்கொண்டு எதுவுமே நடைபெறுவதில்லை. திரும்பவும் அவர்களை அடுத்த தேர்தல் வரும்வரை அப்பகுதியில் காணமுடியாது. இவற்றை எல்லாம் விட நாங்கள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் அமைச்சர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்களும் தமது வரவு செலவுத்திட்டப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து பணம் ஒதுக்கி உள்ளோம் உடனே பாதை புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்கின்றனர். எல்லாமே பேச்சளவில் மட்டும்தான். எப்பொழுது இப்பாதை திருத்தப்படும் என்று ஏங்குகின்றார்கள் இந்தத் தோட்ட தொழிலாளர்கள்.

இவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பார்களா இந்த அரசியல்வாதிகள்? ★






# மர்மமற்ற மரணம்

இங்கிலாந்தின் மிகப் பிரபலமான ஆங்கில நாளிதழான 'த நியூஸ் ஒப் த வேல்ட்' பத்திரிகை தொலைபேசி ஒட்டுக் கேட்டதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த ஷான் ஹோரே என்பவர் திடீர் என்று இறந்துள்ளார். இப்பத்திரிகை தொலைபேசி ஒட்டுக் கேட்பு விவகாரத்தில் சிக்கியது. பல ரகசியங்களை மின்னஞ்சல்களை ஹேக் செய்து பெற்றனர். இதற்காக காவல் துறையினருக்கு லட்சக் கணக்கில் லஞ்சமும் கொடுத்தனர். இந்த விவகாரத்தை ஷான் ஹோரே என்பவர் தான் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். இதையடுத்து பெரும் பிரச்சனையில் சிக்கியது அந்த பத்திரிகை. இதனால் பத்திரிகை மூடப்பட்டது. இந்நிலையில் முர்டாக் பத்திரிகையின் ரகசியங்களை வெளியிட்ட ஷான் இங்கிலாந்தில் உள்ள அவரது வீட்டில் திடீர் என்று இறந்து கிடந்துள்ளார். இந்த மரணத்தில் எந்தவித மர்மும் இல்லை என்று பொலீசார் தெரிவித்துள்ளனர்.

# சர்ச்சைப் புயலின் புதுப் புரட்சி

டோனி மதுபான விளம்பரத்தில் நடித்தமை குறித்து சர்ச்சைக்குள் சிக்கியுள்ளார். இதுதொடர்பாக விஜய் மல்லையாவின் நிறுவனத்துக்கு ஹர்பஜன் சார்பில் சட்டத்தரணி அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.



டோனி, ஹர்பஜன் இருவரும் தனித் தனியாக வெவ்வேறு மதுபான விளம்பரங்களில் நடித்துள்ளனர். இதில் பிரபல தொழிலதிபர், பெங்களூர் ரோயல் சாலஞ்சர்ஸ் ஐ.பி.எல்., அணியின் உரிமையாளர் விஜய் மல்லையாவின், மதுபான விளம்பரத்தில் டோனி நடித்துள்ளார். இந்த விளம்பரம் ஹர்பஜன், அவரது குடும்பம் மற்றும் சீக்கிய சமூகத்தை கிண்டல் செய்வது போல அமைந்துள்ளது. இதையடுத்து ஹர்பஜன் சிங் சார்பில் அவரது தாயார் அவ்தார் சிங், விஜய் மல்லையாவின் நிறுவனத்துக்கு சட்டத்தரணி அறிவித்தல் அனுப்பியுள்ளார். இதில், மதுபான விளம்பரத்தினால், கருத்து வேறுபாடு ஏற்பட்டு இந்திய கிரிக்கெட் அணியின் ஒற்றுமை குலையும். தவிர, எங்களது சமூகத்தையும் கிண்டல் செய்கிறது. இதனால் இந்த விளம்பரம் குறித்து ஹர்பஜன் சிங் குடும்பத்தினரிடம், அனைத்து பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள், உடனடியாக மன்னிப்பு கேட்கவேண்டும். இந்த விளம்பரத்தை மூன்று நாட்களில் திரும்பபெற வேண்டும். தவிர, அறிவித்தல் அனுப்புவதற்கு செலவான ஒரு லட்ச ரூபாயையும், இழப்பீடாக தரவேண்டும்," எனக் கூறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க வாக்கு



திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், திபெத் சுதந்திரத்தை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்கவில்லை என்றும் அந்நாடு தெரிவித்துள்ளது. சீனாவின் கடும் எதிர்ப்பையும் மீறி, திபெத் மதத்தலைவர் தலாய் லாமாவை, அமெரிக்க அதிபர் ஒபாமா சந்தித்து பேசினார். இதனால் அமெரிக்கா சீனா இடையே உரசல் ஏற்பட்டது. இந்நிலையில், சீனாவை சமாதானப்படுத்தும்விதமாக அமெரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கையில், திபெத் சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், திபெத் சுதந்திரத்தை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது. தலாய் லாமா ஒரு நோபல் பரிசு பெற்ற அறிஞர். திபெத் மதத்தலைவர். இந்தக் கண்ணோட்டத்திலேயே அவருடனான அமெரிக்க அதிபரின் சந்திப்பு இருந்ததாக அமெரிக்கா கூறியுள்ளது.

# கதவு திறக்காது

தமிழகம் உட்பட சாட்சிகள் வசிக்கும் பகுதிகளுக்கு செல்லக் கூடாது என்று நித்யானந்தாவுக்கு கர்நாடக ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. சாமியார் நித்யானந்தா படுக்கை அறையில் நடிகை ரஞ்சிதாவுடன் நெருக்கமாக இருக்கும் வீடியோ காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின. இதையடுத்து, அவர் பலாத்கார வழக்கில் கைதானார். சில மாதங்களாக வெளியில் தலைகாட்டாத நித்தி, சமீபத்தில் திடீரென சென்னையில் ரஞ்சிதாவுடன் இணைந்து, பேட்டி அளித்தார். தானும், ரஞ்சிதாவும் உள்ள வீடியோ காட்சிகள் பொய்யானவை என்று மீண்டும் சொன்னார். இதை கர்நாடக சிஐடி போலீசாரும், அரசு சட்டத்தரணி மறுத்து, இது ஏற்கனவே உறுதி செய்யப்பட்டு விட்டது; நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றனர்.மேலும், தமிழகம் உட்பட சில இடங்களுக்கு செல்வதன் மூலம் சாட்சிகளை கலைக்க முயற்சிக்கிறார். எனவே அவர் தமிழ் நாட்டுக்குச் செல்லத் தடை விதிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.




# விடுதலை நாயகனின் பிறந்த நாள்




தென் ஆபிரிக்க விடுதலைக்காக போராடி வெற்றி பெற்ற, அந்நாட்டின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, தன் 93வது பிறந்த நாளைக் கொண்டாடினார். தென் ஆபிரிக்க விடுதலைக்காக 67 ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்தவர் நெல்சன் மண்டேலா. இவரது 93வது பிறந்த நாள், அந்நாடு முழுவதும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில், குழந்தைகள் காலையில் வகுப்புகளுக்குச் செல்லுமுன், மண்டேலாவை வாழ்த்திப் பாட்டுப் பாடினர். நாட்டிற்காக இவர் 67 ஆண்டுகள் அர்ப்பணித்ததை முன்னிட்டு, 67 நிமிடங்கள் நாட்டுக்காக ஒவ்வொருவரும் சேவை செய்ய வேண்டும் என்று, நெல்சன் மண்டேலா அறக்கொடை நிலையம் கேட்டுக் கொண்டது. ஆனால், மண்டேலா தன் சொந்தக் கிராமமான கிழக்கு ஈஸ்டர்ன் கேப்பில் பிறந்த நாள் கொண்டாடினார். இவருக்கு ஐ.நா., பொதுச் செயலர் பான் கீ மூன், அமெரிக்க அதிபர் ஒபாமா உட்பட உலகத் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

24.07.2011 – 30.07.2011

# ராசி பலன்


### அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்


சிறுவயதிலேயே பலவித அனுபவங்களால் பக்குவப்பட்ட நீங்கள், பகைவரையும் நேசிப்பவர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். நட்பு வட்டம் விரியும். வீட்டை விரிவுப்படுத்திக் கட்டுவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். புது வேலைக் கிடைக்கும். உத்தியோகத்தில் செல்வாக்குக் கூடும். மூளைப் பலத்தால் முன்னேறும் வாரமிது.


### கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

தன் கையே தனக்கு உதவி என்று வாழும் நீங்கள், நெஞ்சுறுதியுடன் பிரச்சனைகளைச் சந்திப்பவர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். ஓரளவு பணம் வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். மனைவிவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். உடன்பிறந்தவர்களால் சங்கடங்கள் வரும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறும் வாரமிது.


### மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

நகைச்சுவையாகவும், நாசூக்காகவும் பேசும் நீங்கள், நாலும் தெரிந்தவர்கள். மனஇறுக்கம் நீங்கும். குடும்பத்தில் அமைதி பிறக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. வீட்டில் கூடுதலாக ஒரு தளம் கட்டுவீர்கள். வருங்காலம் குறித்து முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். பழைய பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். கடந்த கால அனுபவங்களால் தெளிவுப் பெறும் வாரமிது.


### புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்


லாபமோ, நஷ்டமோ தோழமைக்காக கடைசி வரை தோள் கொடுப்பவர்கள் நீங்கள் தான். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பழைய கடனைத் தீர்க்க உதவிகள் கிடைக்கும். நண்பர்கள் உதவுவார்கள். கைமாற்றாக கேட்டிருந்த பணமும் கிடைக்கும். சொத்துப் பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் தீமை ஏற்படும். இங்கிதமான பேச்சால் வெற்றி பெறும் வாரமிது.


### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

இடம், பொருள், ஏவல் அறிந்து எதையும் செய்யும் நீங்கள், யாருக்காகவும் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். தன்னம்பிக்கையால் சாதிப்பீர்கள். வேலை கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் செல்வாக்குக் கூடும். எதையும் சாதித்துக் காட்டும் வாரமிது.


### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்


கலைகளில் ஆர்வம் உள்ள நீங்கள், எதிலும் புதுமையையே விரும்புவீர்கள். வர வேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பிள்ளைகளிடம் குவிந்துக் கிடக்கும் திறமைகளை இனம் கண்டறிந்து வளர்ப்பீர்கள். நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் உதவுவார்கள். தடைப்பட்ட உயர்கல்வியைத் தொடர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். புது முதலீடுகள் செய்வது பற்றி யோசிப்பீர்கள். பழைய பிரச்சனைகளிலிருந்து விடுபடும் வாரமிது.


### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

சமூக நலனில் அதிக அக்கறை கொண்ட நீங்கள் அவ்வப்போது அநியாயத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயற்படுவார்கள். உறவினர்கள் உதவுவார்கள். நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்களுடன் இருந்த பனிப்போர் நீங்கும். தன்னம்பிக்கையால் சாதிக்கும் வாரமிது.


### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

மனிதநேயம் அதிகமுடைய நீங்கள் மன்னிக்கும் குணமுள்ளவர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். நண்பர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். சகோதரரின் மனசு மாறும். அரசு காரியங்கள் இழுபறியாகும். பெற்றோரின் ஆதரவுக் கிட்டும். பிரபலங்களின் உதவியால் வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். வேலையாட்களிடம் கொஞ்சம் கண்டிப்பாக இருங்கள். வெளிச்சத்திற்கு வரும் வாரமிது.


### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

எல்லாம் தெரிந்திருந்தாலும் அடக்கமாக இருக்கும் நீங்கள், சண்டை சச்சரவு என வந்துவிட்டால் பதுங்கமாட்டீர்கள். உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். இளைய சகோதரருடன் இருந்த மனவருத்தம் நீங்கும். எதிரிகளால் ஆதாயம் உண்டு. தாய்வழிச் சொத்துகள் கைக்கு வரும். திருமணத் தடை நீங்கும். வியாபாரத்தில் கூடுதலாக முதலீடு செய்வீர்கள். வெற்றிகள் தொடரும் வாரமிது.


### உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

தாராளமாகத் தர்மம் செய்யும் நீங்கள், பழைய கலைப் பொருட்களைப் பாதுகாப்பவர்கள். உறவினர்களின் ஆதரவுக் கிட்டும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் உற்சாகமடைவீர்கள். பெற்றோரின் ஆலோசனைக்குச் செவி சாயுங்கள். வியாபாரத்தில் ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள். உத்தியோகத்தில் முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய வாரமிது.


### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

யதார்த்தமாகப் பேசும் நீங்கள், அவ்வப்போது கற்பனையில் மூழ்குவதுண்டு. மறைமுக எதிரிகளை கண்டறிந்து ஒதுக்குவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். பரபரப்புடன் காணப்படுவீர்கள். வியாபாரம் சுமாராக இருக்கும். வேலையாட்களின் தொந்தரவுகளை விட்டுப் பிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் சின்னச் சின்ன இடர்ப்பாடுகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். சிக்கனம் தேவைப்படும் வாரமிது.


### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

முடிவுகளைப் பற்றிக் கவலைப்படாத நீங்கள், நியாயத்திற்காக மோதிப் பார்ப்பவர்கள். கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். சகோதர வகையில் நன்மை உண்டு. உங்கள் ரசனைக்கேற்ப புது வீடு வாங்குவீர்கள். மனைவி வழியில் செலவுகள், அலைச்சல் வந்து நீங்கும். புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். வேலையாட்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் தொடர்ந்து உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். தடுமாற்றம், தயக்கம் நீங்கி தைரியம் கூடும் வாரமிது.

## எப்போதும் சந்தேகப்படாதீர்கள்

சந்தேகம் என்பது எப்படி ஒரு குடும்பத்தையே அழித்து விடுகிறதோ, அது போலவே ஆண்டவரை வணங்குவதிலும் சந்தேகம் ஏற்படுமாயின் அதுவும் வாழ்க்கையையே கெடுத்து விடும். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பானவன்.



அப்படிப்பட்ட மனுஷன், தான் கர்த்தரிடம் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக என்று கூறுகிறது பைபிள்.

நம்பிக்கையுடன் எதைச் சொன்னாலும், செய்தாலும் அது நிஜமாகும் என்று இயேசு கூறுகிறார்.

அதற்கு உதாரணமாக, ஒருவன் மிகுந்த நம்பிக்கையுடன் மலையைப் பார்த்து நீ பெயர்ந்து போய் சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று கூறுவானாயின், அவன் சொன்னபடியே ஆகும் என்றும் சொல்கிறார்.

எனவே சந்தேகத்தைப் போக்குங்கள். அழிவைத் தடுத்து நிறுத்தங்கள்.

## திருமணமான பெண்களை திருமதி என்பது ஏன்?



திருமணத்திற்கு முன் ஆண்கள் பொறுப்பில்லாமல் வீணாகச் செலவு செய்து திரிவார்கள். திருமணத்துக்குப் பின், தறிகெட்டு அலையும் கணவனை மனைவி திருத்தி விடுகிறாள்.

அவள் கணவனின் வரவுக்கேற்ற வகையில் செலவுகளைக் குறைத்து வீட்டில் செல்வம் சேர்க்க முயற்சி செய்கிறாள். இதற் காகத் தனது மதிநுட்பத்தைப் (புத்திசாலித்தனம்) பயன்படுத்துகிறாள். அந்த வீட்டில் லட்சுமி கடாட்சம் ஏற்படுகிறது. திருவையும், மதியையும் இணைத்தே திருமணமான பெண்களுக்கு திருமதி என்ற பட்டம் தரப்பட்டது. திரு என்றால் லட்சுமி, மதி என்றால் அறிவு.

"என்னைப் புகழ்ந்து பாடிய புலவர் தற்போது சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்கிறாராமே...?"

"உண்மைதான், பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்கா என்று சும்மாவா சொன்னார்கள் மன்னா...!"



## பேராசை பெருநஷ்டம்!

ஏழை ஒருவன் தன் வறுமையைப் போக்கும்படி தினமும் இறைவனிடம் மன்றாடி வேண்டினான்.

ஒருநாள் இறைவன் கோயிலுக்கு அருகே உள்ள அரசமரத்தின் கீழ் பெரும்புதையல் இருப்பதாகவும், அதில் பாதியை எடுத்துக் கொள்ளும் படியும் அசரீரியாக அவனிடம் சொன்னார்.

மகிழ்ந்த அவன் அப்படியே அரசமரத்தினடியில் தோண்டினான். அங்கிருந்த பெரும்புதையலைக் கண்டதும் கடவுளின் கட்டளையை மறந்து முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடினான்.

வழியில் திருடர்கள் சிலர் அவனை மிரட்டிப் புதையலைப் பறித்துக் கொண்டு போயினர்.

அவன் மீண்டும் கடவுளிடம் வந்து அழுதான்.

"இப்படி நடக்கும் என்பது தெரிந்து தான் பாதியை எடுத்துப் போகும்படி சொன்னேன்... அப்படிச் செய்திருந்தால் மீதிப்பாதி புதையலாவது இப்போது உனக்குக் கிடைத்திருக்கும். உன் பேராசையால் நீயே தேடிக் கொண்ட இந்தக் கஷ்டத்திற்கு நான் எதுவும் செய்ய முடியாது!" அசரீரியாய் சொல்லி மறைந்தார் ஆண்டவன்.




# மன்மோகன் அமைச்சரவை மாற்றம் தி.மு.கவுக்கு புதிய பதவி ஏதுமில்லை

எஸ்.சுரேந்திரஜித்

இந்திய மத்திய அமைச்சரவை சென்ற வாரம் விரிவாக்கப்பட்டது. இதில் காங்கிரசில் தமிழகத்தை சேர்ந்த ஒருவருக்கு புதிதாக மத்திய அமைச்சர் பதவி தரப்பட்டுள்ளது. காங்கிரசின் செய்தித் தொடர்பாளராக இருந்த திருமதி ஜெயந்தி நடராஜன் புதிய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சராக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தில் 1950 களில் ராஜாஜியை அடுத்து முதலமைச்சராக இருந்த காங்கிரஸ் தலைவர் பக் தவத்சலத்தின் பேர்த்தியான ஜெயந்தி நடராஜன் சிறந்த பேச்சாளர். தி.மு.க. வுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்.


இதேவேளை தி.மு.க.வுக்கு இழந்த 2 அமைச் சர் பதவிகளில் ஒன்று கூட ஒதுக்கப்படவில்லை. ராசாவும் தயாநிதி மாறனும் ராஜினாமா செய்த இடத்துக்கு தி.மு.க விரும்பும் இதுவரை பிரேரிக் கும்படி பிரதமர் கோரி இருந்தும் தி.மு.க அதை விரும்பவில்லை. ஊழல் குற்றம் மேல் குற்றமாகச் சாட்டப்பட்டு தி.மு.க திணறி வரும் வேளையில் அமைச்சர் பதவி ஒரு கேடா என மக்கள் திட்டித் தீர்ப்பர் என்பதை தி.மு.க உணர்ந்துள்ளது. இல்லாவிட்டால் தி.மு.க சார்பில் மத்திய இணை அமைச்சர்களாக இருக்கும் நெப்போலியன், ஜெகத்ரட் சகன், எஸ்.எஸ். பழனிமாணிக்கம் ஆகிய வர்களில் இருவருக்கு மத்திய அமைச்சரவையில் இடந்தர பிரதமர் தயாராகவே இருந்துள்ளார்.



கருணாநிதி



கலாநிதிமாறன்



ஸ்டாலின்

## கலாநிதி மாறன் தப்பியோட்டம்! சண்.டிவி சாம்ராஜ்யம் சரியுமா?

இது இவ்வாறிருக்க, பல்வேறு ஊழல் மோசடி வழக்குகளில் சிக்கி இருக்கும் தயாநிதி மாறனின் அண்ணனும், சண்.டிவி குழுமத்தின் உரிமையாளருமான கலாநிதி மாறன் கடந்த வாரம் சூரிச் நகருக்கு தப்பியோடி விட்டதாகக் கூறப்படுகிறது. சி.பி.ஐ விசாரணையில் இருக்கும் தயாநிதி மாறன் போலவே சகோதர் கலாநிதி மாறன் மீதும் பல ஊழல் மோசடிக் குற்றங்கள் சுமத்தப்பட்டு பொலிசாரால் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். இருந்தபோதிலும் அவர் விசாரணைக்கு சமூகமளியாமல் தப்பியோடி உள்ளதாக கூறப்படுகிறது. ஜெயலலிதா அரசு பலவிதத்திலும் கலைஞர் குடும்பத்தை மேலும் சிக்கல்களில் சிக்க வைக்க, அவர்களது மோசடியான கொடுக்கல் வாங்கல்களை துருவி துருவி ஆராய்ந்து வருகிறது. கலாநிதி மாறன், அழகிரிக்கும் விரோதி என்பதால் அழகிரி தரப்பு படு குஷியில் உள்ளது.

ஸ்டாலினுக்கு தி.மு.க தலைமையைத் தர வேண்டும்; தோல்விகளால் துவண்டுள்ள தி.மு.க வுக்கு புத்துயிரூட்ட இளைய தலைவர் வரவேண்டும் என ஸ்டாலின் ஆதரவாளர்கள் குரலெழுப்பத் தொடங்கி உள்ளனர். இவ் வேளை கலாநிதிமாறன் இல்லாதது அழகிரிக்குச் சிறந்த வாய்ப்பே. இல்லாவிடில் ஸ்டாலின் தலைமைக்கு ஆதரவாக சண் டி.வி முழு மூச்சாக இறங்கி இருக்கும். இப்போதோ சண் டி.வி முதலில் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளவேண்டிய சிக்கல் நிலையிலுள்ளது.

இதுதவிர ஸ்டாலின் தரப்புக்கு ஆதரவாக இருந்திருக்கக்கூடிய ராசா, தயாநிதி மாறன் ஆகிய இருவரும் மத்திய அமைச்சர் பதவிகளை இராஜினமா செய்ய வேண்டி ஏற்பட்டுவிட்டது. மத்தியில் உள்ள ஒரே ஒரு தி.மு.க அமைச்சர் அழகிரி மட்டுமே. அவர் மீது இதுவரை ஊழல் குற்றச்சாட்டு எதுவும் மேற்கொள்ளப்பட வில்லையாயினும் ஆங்கிலம் தெரியாததால் அவர் அமைச்சராக திறம்படச் செயற்பட முடியவில்லை. மொத்தத்தில் இவரையும் தொலைத் துக் கட்டிவிட்டுத் திறமையான அதே நேரம் ஊழலற்ற அமைச்சர்களை நியமிக்குமாறு பிரதமர் தி.மு.கவிடம் கேட்டுக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

ஸ்டாலின் தரப்பில் மத்திய அமைச்சர்களும் இல்லை. மாநில அமைச்சர்களும் இல்லை என்றாகி விட்டது. ஆனாலும் அத்தரப்பினரின் அட்டகாசம் கொஞ்சமும் குறைந்த பாடாயில்லை. தேர்தல் தோல்விக்கு கலைஞர் குடும்ப ஆதிக்கமே காரணமெனக் கூறப்பட்டாலும், மறைந்திருக்கும் முக்கிய காரணி மாவட்டச் செயலர்களான தி.மு.க தலைவர்களின் ரவுடித்தனமே ஆகும். சேலம் மாவட்டச் செயலரான வீரபாண்டி ஆறுமுகமும், திருச்சி மாவட்டச் செயலரான நேருவும் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு.

## கலைஞரின் புதிய வியூகம்

தோல்வியால் உஷாரடைந்த கலைஞர் இத்தகைய மாவட்டச் செயலர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிவெடுத்து விட்டார். இவர்கள் கட்சியின் மீது கொண்டுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்த மாவட்டச் செயலரின் அதிகாரங்களைப் பிரித்து லோக் சபா தொகுதி, சட்டசபைத் தொகுதிப் பொறுப்பாளர்களை நியமித்து அவர்களிடம் பொறுப்புக்களைப் பிரித்து வழங்க கலைஞரின் ஆலோசகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு செய்யமுயன்றால் பலவந்தமாக ஸ்டாலி னைக் கொண்டு கட்சித்தலைமையைக் கைப்பற்றுவது என மாவட்டச் செயலர்கள் முடிவெடுத்துள்ளனராம். கனிமொழியும் தயாநிதி மாறனும் சிறையில் இருப்பதால் அவர்களால் எந்த இடையூறும் செய்ய முடியாது.

அழகிரியை எப்படியாவது ஏதாவது ஊழலில் உள்ளே தள்ளிவிட்டு விட்டால், கலைஞர் அந்தக் கவலைகளில் ஸ்டாலினிடம் தலைமைப்பதவியைத் தரு வது பற்றி எதிர்ப்புக் காட்ட மாட்டார் என ஸ்டாலின் முகாம் கருதுகிறது. இதில் முன்னணி வகிப்பவர் முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் துரை முருகன். ஸ்டாலின் பச்சைக் கொடி காட்டினால் போதும் கலைஞரைத் தூக்கி வீச இவர்கள் தயார். ஆந்திராவில் தெலுங்குதேசம் கட்சித்தலைவர் ராம ராவை வயதானவேளை இவ்வாறு நெட்டித்தள்ளிவிட்டு ஒட்டுமொத்தக் கட்சி யையும் தன்வசப்படுத்திய சந்திரபாபு நாயுடு பாணியில் ஸ்டாலின் செயற்படும் வேளை நெருங்குகிறது என்று கருதப்படுகிறது.

நாவலரையும் நாஞ்சில் மனோகரனையும் உச்சிக் கொண்டு அண்ணாவின் கட்சியைக் கைப்பற்றிய கலைஞர், எந்த வாரிசுகளுக்காக பெரும் மோசடியெல்லாம் செய்தாரோ அதே வாரிசுகள் இன்று அவரைக் கலங்கடித்து வருகின் றனர்.

"செய்த பாவம் தீருதடா சிவகுருநாதா!" என்பது இதைத்தான் போலும். அவ்வாறு ஸ்டாலின், பலவந்தமாகக் கட்சியின் தலைமையைக் கைப்பற்றினால் அந்த அதிர்ச்சியில் கலைஞர் உயிர் நீர்ப்பார் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. மருமகன் சந்திரபாபு நாயுடுவினால் முதுகில் குத்தப்பட்ட முதியவர் ராமராவ் இவ்வாறு அதிர்ச்சியில் மாரடைப்பு வந்து உயிர் நீத்தது நினைவு கூரத்தக்கது. ✱

## றெக்கோட rocord றெக்கோட

ஆங்கிலத்தில் 'றெக்கோட்' என்றால் பல அர்த்தங்கள் உள்ளன.

நாங்கள் அந்தக் காலத்தில் 'றெக்கோட்டைப்' பாட்டுப் பெட்டியில் போட்டுத்தான் - அதனைக் கிறாமபோன் என்றும் சொல்வார்கள்- பாட்டுக் கேட்பது வழக்கம். புதுப்புது றைக்கோட் வந்தவுடன் விழுந்தடித்து ஒவ்வொரு சவுண்ட் சேவிஸ்காரரும் வாங்குவார்கள். திரும்பத் திரும்பப் போட்டால் அந்தத் தட்டின்- றெக்கோட்டின்- பள்ளங்கள் காரணமாக ஒரே வரையிலேயே groove கிராமபோன் ஊசி, சுற்றிச் சுற்றி வர ஒரே வரியைத் திரும்பத் திரும்பப்பாடும். ஒரே கதையைத் திரும்பத் திரும்பச் சொல்லுபவர்களைக் 'கீறுப்பட்ட றெக்கோட்' என்று நாங்கள் சொல்லுவது உண்டு. கீறல் றெக் கோட்டைப் பலரும் தூக்கி எறிந்து விடுவது வழமை.

றெக்கோட் என்றால் பதிவு என்றும் அர்த்தப்படும். இனப்பிரச்சினைத் தீர்விற்கு பேச்சு வார்த்தைகள் நடைபெற்று அவை குழம்பிய பதிவுகள் நிறையவே உள்ளன.

றெக்கோட் என்றால் சாதனை என்று ஒரு அர்த்தமும் உண்டு.


கடந்த அறுபது வருடங்களாக ஒரு பிரச்சினையை இழுத்தடிப்பதென்றால் அது சாதாரண விடயமல்ல. அது ஒரு சாதனை. அந்தவகையில் இது போன்ற பிரச்சி னைகள் உள்ள நாடுகள், பிரச்சினைத் தீர்ந்து ஓங்கி எழுகையில், எமது நாட்டில் அப்பிரச்சினை தீர்க்கப்படாது இழுத்தடிக்கப் படுவதில் ஒரு சாதனை 'றெக்கோட்' என்றே சொல்ல வேண்டும்.

அண்மைய தேர்தலுடன் மீண்டும் ஒரு கீறுப்பட்ட றெக்கோட் தூசி தட்டிப் போடப்படுகிறது. அதுதான், பேச்சு வார்த்தை மூலம் அதிகாரப் பகிர்வு, பகிர்வு...... பகிர்வு.........

ஏற்கனவே பல றெக்கோட் பதிவுகளிலிருக்க, கீறுப்பட்ட றெக்கோட்டை- தட்டினை போட்டுப் பாட்டுக் கேட்பதில் நாம் ஒரு- 'றெக்கோட்'டை சாதனையை எட்டி நிற்கிறோம்.



# தேமல் ஒரு தொற்று நோய் சுத்தம் பேணல் அவசியமாகும்




**கேள்வி:** எனக்கு வயது 25. கடந்த ஒரு வருடகாலமாக உடம்பில் தேமல் எற்பட்டுள்ளது. குறிப்பாக ஓரிரு பகுதிகளில் இருந்த தேமல் இப்போது உடம்பின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி வருகிறது. இதனை எவ்வாறு போக்க இயலும்?


**பதில்:** தேமல் என்று நீங்கள் குறிப்பிடுவதிலிருந்த உங்களுக்கு Fungus தொற்று ஏற்பட்டிருப்பதாகக் கருதுகிறேன். இது வெளிறிய நிறத்தில் இருப்பதால் சிலர் இதனை அழகு தேமல் என அழைப்பர். ஆனாலும் இதுவும் ஒரு நோய்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

Fungus தொற்றாக இருப்பதால், தோலின் மேற்பகுதியில் இருந்தாலும் நீண்ட நாட்களாக மருந்து எடுக்க வேண்டி வரும். மேலும் நோய் குணமானது போல் தெரிந்தாலும் வைத்தியர் சொல்லும் வரை பொறுமையாக சிகிச்சை பெறுவது மிக முக்கியம். சிகிச்சை முடிந்த பின்பும் தேமல் தோன்றும் அறிகுறி மீண்டும் தெரிந்தால் உடனேயே மீண்டும் வைத்தியரின் ஆலோசனையுடன் சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும். இதுபோய் மீண்டும் வருவதாக (Relapse) அல்லது முதலில் எங்கிருந்து தொற்றியதோ அவ்வாறே மீண்டும் தொற்றுவதாக (Reinfection) இருக்கலாம். ஏனெனில் இது மிக இலகுவாகத் தொற்றக்கூடும்.

பொதுவாக தனிநபர் சுகாதாரத்தைச் சரியாகப் பேண வேண்டும். உங்கள் ஆடைகளை, குறிப்பாக உள்ளாடைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாதீர்கள். மேலும் உங்கள் துவாய் போன்றவற்றையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளாமலிருப்பது நல்லது. இது மற்றவர்களிடமிருந்து உங்களுக்கும், உங்களிடமிருந்து ஏனையவர்களுக்கும் நோய் பரவுவதைத் தடுக்கும். எனவே தேமல் அறிகுறி காணப்பட்டால் உடனடியாகவே தோல் வைத்திய நிபுணரை அணுகி தகுந்த ஆலோசனை பெறுங்கள்.

**கேள்வி:** எனக்க வயது 40. எனது இரு கால்களிலும் முழங்காலுக்குக் கீழ் நரம்புகள் ஒன்றிணைந்து பிணைந்து புடைத்துக் காணப்படுகின்றன. சில சமயங்களில் கொதிப்பது போன்ற உணர்வும் ஏற்படுகிறது. இது வெரிக்கோஸ் வியாதி என ஒரு சிலர் பயமுறுத்துகின்றனர். நான் எத்தகைய வைத்திய சிகிச்சையை நாடவேண்டும்?

**பதில்:** ஆம் இதனை Varicos Vein என அழைப்போம். எமது உடலில் நாடி (Artery) நாளம் (Vein) என இருவகை குருதிக்குழாய்கள் இருப்பதை அறிவீர்கள். இவற்றில் நாடி குழாய்கள் மூலமாக இதயத்திலிருந்து இழையங்களுக்கு அதாவது உடலில் பகுதிகளுக்கு குருதி விநியோகிக்கப்படுகிறது. இதயம் சுருங்கும் போது இது நிகழ்கிறது. எனவே இக்குழாய்களுக்குள் அமுக்கம் அதிகமாக இருக்குமென்பதால் நாடியின் சுவர்களும் தடிப்பானவை. மீள் தன்மை(Elasticity) மிக்கவை. ஆனால் நாளங்களோ உடலின் பாகங்களிலிருந்து இதயத்திற்குக் குருதியை எடுத்து வருகின்றன. இதயம் தளர்வடையும் போது இது நடை பெறுகிறது. நாளத்தில் சுவர்கள் ஒப்பீட்டளவில் மெல்லியவை. மேலும் குருதி திரும்பப் பாய்ந்து விடாமலிருக்க தடைகள் அல்லது வால்புகள் அமைந்துள்ளன.




சில வேளைகளில் இந்த தடைகள் அல்லது வால்புகள் வலுவிழந்து விடுகின்றன. குறிப்பாக கால்களில் உள்ள நாளங்களில் இவ்வாறு ஏற்படுகிறது. எனவே குருதி சீராக முன்னோக்கிச் செல்லாமல் (Back flow) நாளங்களில் தேங்க (Pooling)ஆரம்பிக்கிறது. இதனால் நாளங்கள் புடைக்க (Uaricosity) ஆரம்பிக்கின்றன. இந்த நிலையை Varicos Vein என அழைக்கிறோம்.

நீண்ட நேரம் நிற்பது கடினமாக இருக்கும். மேலும் கால் உளைவு அல்லது நோவு மிக அதிகமாக இருக்கும். ஆரம்பத்திலேயே கவனித்து Grape Bandage பாவிப்பதால் அல்லது Stockings அணிவதனால் நோயின் வேகத்தை ஓரளவு தணிக்க முடியும். இந்த நாளங்களில் காயம் ஏதும் ஏற்பட்டால் குருதி மிக அதிகளவில் வெளியேறும். அது மட்டுமில்லாமல் நாளங்களினுள்ளே குருதி தேங்குவதால் சிலவேளைகளில் குருதி உறையக்கூடிய அபாயமும் உண்டு. இதனை Deep Vein Thrombosis என அழைப்போம். இது மிக ஆபத்தான நிலையாகும்.

Varicos Vein ற்கு இப்போது பல விதமான சிகிச்சை முறைகள் நடைமுறையில் உள்ளன. எனவே ஒரு சத்திர சிகிச்சை நிபுணரை அணுகி உரிய ஆலோசனை பெறுங்கள்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை "சுடர் ஒளி" மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85,ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.

# குருதி தோய்ந்த பொழுதுகள்

( 6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுருங்கக் கூறுவதானால் அரச ஒடுக்குமுறையின் உச்சக் கட்ட வடிவமாக உருப்பெற்ற ஆடிக் கலவரம், பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் தமிழரின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை பிறப்பெடுக்க வைத்து உருக்கொடுக்கக் காலாயிற்று. இந்த இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம், சிங்கள இனவாத சக்திகள் தமிழ்த் தேசிய மறுமலர்ச்சியை உருப்பெற வைத்ததுடன் தனியரசுப் போராட்டம் வீறு கொண்டு எழுவதற்கான அக, புறச் சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்தன.

**திட்டமிட்ட இன அழிப்புக்கு அரசுத் தலைமையின் பூரண ஆதரவு**

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் நெறிப்படுத்தலில், அமைச்சராகவிருந்த காமினி திசாநாயக்கவின் வழிநடத்தலிலுமே படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன. கொழும்பிலுள்ள தமிழர்களின் பொருளாதாரத்தை அடியோடு அழிக்க வேண்டுமென்ற வெறியில் நடத்தப்பட்ட இந்த இனக்கலவரம் என்கின்ற இன அழிப்பில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (அப்போதைய பெறுமதி) பெறுமதியான தமிழர் சொத்துகள் அழிக்கப்பட்டதுடன், 2,500 இற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் படுகாயப்படுத்தப்பட்டனர். உயிர் தப்பியோர் கப்பல்களில் ஏற்றப்பட்டு தமிழர் பகுதிகளான, வடக்கு கிழக்கிற்கு அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டனர். 1983 ஜூலை 23 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த இனப்படுகொலை 4 நாட்கள் தொடர்ந்து நீடித்தது. தமிழர்கள் வீதி, வீதியாக விரப்பட்டு வெட்டியும், சுட்டும், உயிருடன் எரித்தும் படுகொலை செய்யப்பட்டனர். பெண்கள் நூற்றுக்கணக்கில் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர். பலர் குடும்பம் குடும்பமாக வீடுகளுடன் சேர்த்து கொளுத்தப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழரின் வர்த்தக நிலையங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு நீர்மூலமாக்கப்பட்டன.

4 நாட்களாக கொழும்பு வீதிகளில் தமிழர்களின் இரத்த ஆறு ஓடியது. அவலக்குரல்கள் உலக நாடுகள் வரை கேட்டபோதும் அப்போது ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்தன மட்டும் மிகவும் அமைதியாக சிங்கள காடையர் கூட்டத்தின் கொலை வேட்டையை ரசித்துக் கொண்டிருந்தார். பாதுகாப்பு படைகளோ தமக்கிடப்பட்ட கட்டளையின் படி கொலைத்தாண்டவம் புரிந்த காடையர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தன.

இனப்படுகொலைகள் நடந்து கோரமான ஐந்து நாட்களுக்கு பின்னரே ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன இனக்கலவரம் தொடர்பாக நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் விளக்கமளித்தார்.

தொலைக்காட்சி உரையில் கூட தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் தொடர்பில் ஜே.ஆர். வருத்தமோ, கவலையோ, அனுதாபமோ தெரிவிக்கவில்லை. மாறாக இனப்படுகொலையை நியாயப்படுத்தியே அவரது கருத்துகள் அமைந்திருந்தன.

1956 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் கொண்ட நம்பிக்கையின்மை காரணமாகவே இனக்கலவரம் வெடித்ததாகவும் இவ்வாறான மனக்கசப்புகள் இருக்கும் போது சிங்களவர்கள் வன்முறையில் ஈடுபடுவது எளிதான செயல் என்றும் ஜே.ஆர். இனப்படுகொலையை நியாயப்படுத் தினார்.

அத்துடன் சிங்கள மக்களை அமைதிப்படுத்துவதற்காக தான் புதிய சட்டமொன்றை அமுலாக்குவதாக ஜே.ஆர். கூறினார். சிங்கள மக்களை அமைதிப்படுத்துவதற்காகவும் அவர்களுடைய இயல்பான வேட்கையை பூர்த்தி செய்வதற்காகவும் நான் ஒரு புதிய சட்டத்தை அமுலாக்குகிறேன். இப்புதிய சட்டத்தின் படி நாட்டுப் பிரிவினை கோரும் எவரும் இந்தப் பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக முடியாது. அது மட்டுமன்றி நாட்டுப் பிரிவினை கோரும் எந்தவொரு கட்சியும் தடை செய்யப்படும். இனிமேல் நாட்டைப் பிரிப்பது தொடர்பாக எவரும் சட்ட ரீதியாக செயற்பட முடியாது. என்றார் ஜே.ஆர்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பழி தீர்க்கவே கொழும்பில் 2,500 இற்கும் மேற்பட்ட தமிழர்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்த ஜே.ஆர். தனது புதிய சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கும் சாவுமணி அடித்தார்.

ஜே.ஆரின் அப்போதைய செல்லப்பிள்ளையான காமினி திசாநாயக்க தனது இனவெறியை பின்வருமாறு வெளிப்படுத்தினார்.

உங்களை தாக்கியது யார்? சிங்களவர்கள். உங்களை காப்பாற்றியது யார்? சிங்களவர்கள்'. ஆமாம், எங்களால் தான் உங்களை தாக்கவும் முடியும், காப்பாற்றவும் முடியும். உங்களை காப்பாற்ற இந்திய இராணுவம் இங்கே வருமாக இருந்தால் அதற்கு 14 மணித்தியாலங்கள் தேவை. ஆனால், 14 நிமிடங்களுக்குள் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தையும் இந்த நாட்டிற்காக அர்ப்பணிப்போம், என்று முழங்கியிருந்தார்.


இந்த கறுப்பு ஜூலையே தமிழர்களுக்கு சர்வதேச ரீதியில் ஒரு அங்கீகாரத்தை கொடுக்கப் போகின்றதென்பதை ஜே.ஆரோ, காமினி திசாநாயக்கவோ அறிந்திருக்கவில்லை. 1983 ஆகஸ்ட் 4 ஆம் திகதியன்று 'நியூயோர்க் வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியது. 'தமிழர்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்வது கடினமென்றால் ஏன் பிரிந்து வாழமுடியாது? தமிழ் மக்களுக்கு தனி ஆட்சி கொடுத்தால் என்ன? ஐ.நா.வில் உள்ள பல நாடுகள் போல் தமிழ் மக்களும் தாங்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதற்குரிய சரியான சான்று களை வைத்துள்ளார்கள்.

இந்த ஒருங்கிணைந்த இலங்கைத் தீவில் சிங்களவர் மட்டுமே அதிகாரங்களை வைத்திருக்கின்றார்கள். இந்த அதிகாரங்களை கொண்டுள்ள சிங்களவர்களுக்கு தமிழர்கள் இந்த ஒருங்கிணைந்த இலங்கைத் தீவில் வாழ முடியாத அளவில் நடத்தப் பட்டிருக்கிறார்கள் என்ற அறிவாவது உள்ளதா? என கேள்வியெழுப்பியிருந்தது. ஆனால், அந்த அறிவு இன்று வரை சிங்கள வர்களுக்கு வரவில்லை என்பதையே நடந்து வரும் நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.★




# சிறுவர் சுடர்

## கண்டுபிடியுங்கள்



இரண்டு படத்திலும் ஐந்து வித்தியாசங்கள் உள்ளன.

## மடங்கும் பொம்மை நாற்காலி




**தேவையான பொருட்கள்:**


மெல்லிய நீண்ட கம்பி ஒன்று.(பழைய மின் வயரிலிருந்து எடுக்கலாம்) கெட்டியான கார்ட் போர்டு, கலர்பேப்பர், கறுப்பு கிராப்ட் பேப்பர் வட்டமாக கட் செய்தது. கத்திரிகோல் மற்றும் பசை.

**செய்முறை:**

1) கார்ட் போர்டு துண்டை படம் 1ன் படி இரண்டு வடிவங்களில் வெட்டி எடுத்துக் கொள்ளவும். இதன் இரண்டு பக்கமும் கலர் பேப்பரை ஒட்டவும். வட்ட வடில கறுப்பு கிராப்ட் பேப்பரை நடுவில் ஒட்டவும்.

2) மெல்லிய கம்பியை படம் 2ன்படி வெவ்வேறாக வளைத்துக் கொள்ளவும். நாம் செய்து வைத்திருக்கும் கார்ட் போர்டு துண்டுகள் சரியாக பொருந்தும்படி 'ப்ரேம்' செய்யவும்.





3) நாற்காலியை வடிவமைத்து மெல்லிய கம்பியைக் கொண்டு கட்டவும்.

4) சதுர வடிவ கார்ட் போர்டு துண்டை நாற்காலியின் இருக்கையாக வைக்கவும். மற்றொரு துண்டு கார்ட் போர்டை நாற்காலியின் சாய்வுப் பகுதியில் பொருத்தவும்.

**இப்போது மடங்கும் பொம்மை நாற்காலி தயார்**




# பிறந்தநாள் பரிசு!

**கா**ட்டிலே சிங்க ராஜாவுக்குப் பிறந்த நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. 'யார் பெரிய முட்டை கொண்டுவருகின்றனரோ அவர்களுக்கு வெகுமானம்!' என்று பறை அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனால் குருவி, காக்காய், கழுகு என்று முட்டையிடும் பறவைகளெல்லாம் ஏகமாய் தின்று கொழுத்திருந்தன. கோழிக்கு, தானே பரிசைத் தட்டிச் செல்ல வேண்டுமென்று ஆசை. என்ன செய்வது என்று யோசித்தபடி நடந்தது.



அந்தப் பகுதிக்கு விளையாட வந்த ஒரு கோஷ்டியினர், கால் பந்தைத் தவற விட்டிருந்தனர். அது நரியின் கண்ணில் சிக்கியது. எப்படித் தெரியுமா?

காட்டு அதிகாரிகள் தங்கும் மாளிகையில் மராமத்துவேலை நடந்து கொண்டிருந்தது. வெள்ளையடித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் வாளியில் கால் பந்து குளித்துக்கொண்டிருந்தது. சாப்பாட்டு வேளை முடிந்து மறுபடி வெள்ளையடிக்க வந்த கந்தன், பந்தைத் தூக்கி வீசி எறிந்தான். சுண்ணாம்பில் ஊறிய வெள்ளைப்பந்துதான் நரியின் பார்வையில் பட்டது. நரி அதை உருட்டிக்கொண்டு போய் கோழியிடம் காண்பித்தது.

''பார்த்தாயா! எத்தனை பெரிய முட்டை... சிங்கராஜாவின் பிறந்த நாள் பரிசை தட்டிச்செல்!'' என்றது நரி.

கோழி கண்கள் விரிய, ''அடேயப்பா! யார் போட்ட முட்டை?'' என்று கேட்டது.

''யாருக்குத் தெரியும்! அநாதையாய்க் கிடந்தது.எடுத்துவந்தேன். பயன்படுத்திக் கொள். யோசிக்காதே!'' என்றது நரி.

**பி**றந்தநாள் வந்தது. எல்லாப் பறவைகளும் கோழியையே பொறாமையோடு பார்த்தன. 'கோழியைவிட முட்டை பெரிதாயிருக்கிறதே! எப்படிப் போட்டிருக்கும்?' என்று யோசித்தன.

மயிலும், குயிலும், கருடனும் எப்படியெல்லாமோ கேட்டும் கோழி வாயே திறக்கவில்லை. 'தளுக்காய் அலங்காரம் வேறு பண்ணிக்கொண்டிருக்கிறது. அதற்குத்தான் பரிசு!' என்று எல்லாம் பெருமூச்செறிந்தன.

சிங்கராஜா ஒவ்வொரு முட்டையாய்ப் பார்வையிட்டபடி வந்தார். கோழியின் வெள்ளை வெளேர் முட்டை அவரைக் கவர்ந்தது. வேகமாக நெருங்கி அதைக் கையிலெடுத்தார்.

''மந்திரியாரே! எத்தனை பெரியது! இதற்கே பரிசு கொடுத்து விடலாமா?'' என்று அருகிலிருந்த கரடியின் பக்கம் திரும்பினார்.

அஜாக்கிரதையால் கை நழுவிய பந்து, விழுந்த வேகத்தில் காய்ந்த சுண்ணாம்பு செதில் செதிலாக உதிர்ந்தது. ஒன்று சிங்கத்தின் கண்ணுக்குள்ளும் புகுந்தது. அவ்வளவுதான், சிங்கத்தின் கோபத்துக்கு அளவே இல்லை.

''இது மனிதர்கள் விளையாடும் பந்து. என்னை ஏமாற்ற உனக்கு எத்தனை துணிச்சல். இதற்காக உன்னை நாடு கடத்துகிறேன். நாட்டிலுள்ளோர் பொருளைக் கொண்டு வந்து ஏமாற்றிய நயவஞ்சகனே! மானிடர்களுக்கு நீ விருந்தாவாய்! இனி உனக்குக் காட்டில் இடமில்லை!'' என்று ஆணையிட்டது.

அன்றைக்கு ஓடிவந்த கோழிதான், மனிதர்களின் விதவிதமான விருப்ப உணவாக மாறிவிட்டது. காட்டுக்கே போக முடியவில்லை.

**சுயபுத்தியோடு செயல்படுவதே நன்மை தரும். சதிகாரர்கள் பேச்சைக் கேட்டு குறுக்கு வழியில் புகழ் தேடுவது ஆபத்தையும், அவமானத்தையும் தரும்!**



தென் ஆப்ரிக்காவின் வடமேற்கு மாகாணத்தில் உள்ளது தலைநகர் மாபிகென் நகரம். இது 1880 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்டது. 'மாபிகென்' என்பதற்கு அங்கு வழக்கிலுள்ள ஸ்வானா மொழியில் 'பாறைகளின் இடம்' என்று பொருள்.

**தெரியுமா?**

உலகிலேயே வேகமாக காற்று வீசும் பகுதி நியூஹாம் ஷையரில் உள்ள மவுண்ட் வாஷிங்டன். எவரெஸ்ட் என்பது உலகிலேயே மிக உயரமான சிகரம். ஆனால், மவுண்ட் வாஷிங்டன் கடல் மட்டத்திலிருந்து ஆயிரத்து தொள்ளாயிரத்தி பதினெட்டு மீற்றர் உயரத்தில் உள்ளது. இங்கு மணிக்கு 300 கி. மீற்றர் வேகத்தில் காற்று வீசுகிறது. இங்கு காற்று வீசும் வேகத்தில் மனிதர்கள் இறக்கக் கூட நேரிடும்.

# பெற்றோரும் ஆசான்களும் பிள்ளைகளுக்குப் பயப்படும் காலம் இது






**அ.அருள்ஜோதி,**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:**முன்பெல்லாம் பிள்ளைகள் ø Ã u ¼ .Àö ?

**பதில்:** பெற்றோர் மட்டுமல்ல கற்பிக்கும் ஆசான்களும் கூடப் பிள்ளைகளுக்குப் பயப்படும் காலகட்டம் இது.

**தி.தினேஸ், வட்டக்கச்சி.**

**கேள்வி:** உம்மை 'ஒரு பொறுக்கி' என எனது நண்பர்கள் சிலர் விமர்சிக்கிறொர்களே?

**பதில்:** அது முற்றிலும் உண்மையே. வசகர்களிடமிருந்து வரும் ஏராளமான கேள்விகளில் சிலவற்றை மட்டுமே நான் பொறுக்கியெடுத்துப்பதிலளிப்பவனாயிற்றே.

**க.ஹமீது,**
**சாய்ந்தமருது.**

**கேள்வி:** மணமான பின்னர் காதலிக்கலாமா?

**பதில்:** கட்டாயமாக உம் மனைவியை மட்டும் காதலித்தாக வேண்டியது நெறிமுறை.

**ம.நிலக்ஷி,**
**கொழும்பு.**

**கேள்வி:** திருத்திக் கொள்ளமுடியாத ஒரு தவறு எது பித்தரே?

**பதில்:** திருமணம். ஒருமுறை தவறிழைத்தால் வாழ்க்கையில் பிழைத்துக் கரையேற இயலாத பந்தம் அது.

**ப.அபிஷேக்,**
**ஹற்றன்.**

**கேள்வி:**காதலியின் தொல்லைக்கும் மனைவியின் தொல்லைக்கும் வேறுபாடென்ன பித்தரே?



**பதில்:** முதலாவது குறும் புத் தொல்லை. இதமாயிருக்கும். இரண்டாவது குடும்பத் தொல்லை தலைவலி தந்தாகும்.

**த.சந்துரு,**
**மன்னார்.**

**கேள்வி:** நகைச்சுவை உணர்வு ஆண்களுக்கா பெண்களுக்கா அதிகம்?

**பதில்:** நிச்சயமாகப் பெண்களுக்குத் தான். அவர்கள் தான் 'நகைச்' சுவை அதிகம் கொண்டவர்கள்.

**ச.கார்த்தி,**
**தெல்லிப்பழை.**

**கேள்வி:**எனது நீண்ட நாள் காதலி என்னை நட்டாற்றில் 'அம்போ' என்று விட்டுவிட்டாளே?



**பதில்:** எற்காகப் புலம்புகிறீர். உமது பெற்றோர் ஏற்றிவிடும் படகில் ஏறிப் பயணத்தைத் தொடருவதே புத்திசாலித்தனம்.

**ச.தாரணி,**
**கண்டி.**

**கேள்வி:** காதல் மொழி கவிதை மொழி இவற்றுக்கு ஏதாவது ஒற்றுமை கண்டா?

**பதில்:** அது அவரவர் இருக்கும் நிலைமையைப் பொறுத்தது. இவை இரண்டுமே வெறும் பிதற்றல்கள் தான் என்பது அடியேனின் அபிப்பிராயம்.

**ம.கவிதா,**
**வவுனியா.**

**கேள்வி:**காதலனிடம் பெண்கள் தமது வாழ்க்கையின் கடந்த கால உண்மைகள் எல்லாவற்றையும் கூறுவது புத்திசாலித்தனமா?

**பதில்:** சில காட்சிகளைத் தணிக்கை செய்தால்தான் படம் நன்றாக ஓடும் என்பது யதார்த்தம்.

**மா.கண்மணி, வெள்ளவத்தை.**

**கேள்வி:**அண்மையில் தான் திருமணம் செய்து கொண்டேன். சமைக்க அதிகம் தெரியாததால் உணவில் உப்பைக் கூடப் போட்டாலும் சரி, குறைத்துப் போட்டாலும் சரி எனது கணவர் எதுவும் குறை கூறுவதில்லையே?

**பதில்:** பலருக்குப் புதிதில் உப்புப் புளிப்புத் தெரிவதில்லை. போகப் போக ஒரு கட்டத்தில் நீர் திட்டு வாங்கியே ஆக நேரும்.

**த.சந்துரு,**
**மன்னார்.**

**கேள்வி:**காதலித்த பின் திருமணம் செய்வதா திருமணத்தின் பின் காதலிப்பதா சிறப்பானது?

**பதில்:** காதலிப்பதும் திருமணம் செய்யப் போவதும் ஒருவரைத் தானா என்பதைப் பொறுத்தது அது.

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 479

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | ■ |
| ■ | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | | ■ | |
| | ■ | 17 | | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:...........................................

விலாசம்:...........................................

...........................................

கையொப்பம்:...........................................

### மேலிருந்து கீழ்

01. பொருந்தாது/ தகுதியுள்ளது/ கூடாது.
02. மணப் பெண்ணுக்கு பெற்றோர் வீட்டிலிருந்து வழங்கப்படுவது.
03. மணம்.
04. தடுக்கும் நடவடிக்கை.
05. ஈரலிப்பான இடத்தில் வளரும்.
08. வலு.
10. நுகர்ந்து / அனுபவித்து மகிழ்.
11. ஒரு வாத்தியக் கருவி.
13. இதுவும் பாத்திரம்.
14. வழக்காளிக்கு எதிராளி.
15. இரண்டு பத்து.
16. புத்திரன்.
17. தடம்.
18. படிப்பு.
20. விழி
21. இது ஓயாது.

### இடமிருந்து வலம்

01. ஆசி கொடுத்தல்.
06. நீர் கொண்ட கருமையான மேகம்.
07. கூந்தல்.
08. இது வரப் பத்தும் பறக்கும்.
09. ஒரு பருப்பு வகை.
11. சேர்.
12. முனிவர்.
13. நுளம்பின் வாழ்வு நிலைகளில் ஒரு பருவம்.
15. சங்கீதத்துடன் தொடர்புடையது.
16. பெண்களிடம் இருகக வேண்டிய பண்புகளுள் ஒன்று.
17. நலம்.
18. வேகம்.
19. திருவள்ளுவர் கூறும் இருவரில் ஒருவர்.
21. ஓர் இனிப்புப் பலகாரம்.
22. ஒன்றின் பகுதி.
23. தலையில் எழுதப்பட்டது.

## சொற்சிலம்பம் போட்டி இல. 479

*சொற்சிலம்பம் 479 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஒகஸ்ட் 07 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒகஸ்ட் 21 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக்குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**561, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 476 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** — **இ.நளினி,** இல33-5/1, 42வது ஒழுங்கை, கொழும்பு-06.

**2 ஆம் பரிசு** — **ஈ.கே.அந்தோனிப்பிள்ளை,** இல.99/55, A, D.R.O தெரு. கந்தானை.

**3 ஆம் பரிசு** — **ஏஞ்சல் ஆரபி சொருபன்,** இல.49-3/3 ,கொலிங்வூட் பிளேஸ் கொழும்பு-06.

## சொற்சிலம்பம் போட்டி இல.476 விடைகள்

### மேலிருந்து கீழ்

**01.மதுரகவி 02.காந்தி 03.மது 04.கபிலன் 05.சக 06.திருவுளம் 08.நன் 11.வனிதை 12.கடிதம் 13.அயலவன் 15.நாவலர் 17.ரிசி 20.சகா 21.பாரி 23.தினை.**

### இடமிருந்து வலம்

**01.மகாமகம் 05.சதி 07.துந்துபி 08.நகரு 09.ரதி 10.லவன் 12.கன்னி 13.அள 14.விநாடி 16.தைரியம் 18.வதம் 19.சில 20.சலம் 22.வதி 24.கார் 25.பெரியன்னை**

### பாராட்டுப் பெறுவோர்

**(1) சு.கருணாநிதி,**
இல.28. 4ஆம் குறுக்கு வீதி,
கொழும்பு-11.

**(2) சா.விக்ரர் உ மெல்,**
இல.51/ 2, பிரான்சவத்த லேன்,
கொழும்பு -15.

**(3) எம்.எய்.எம்.ரிம்ஸாத்,**
இல.115, அண்ணல் வீதி ,வாழைச்சேனை,
கிண்ணியா-03

**(4) V.விஜயபிரசாத்,**
இல.14, பிரதான வீதி, மடுல்சீமை.

**(5) க.தில்லையம்பலம்,**
கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

**(6) க.கமால்தீன்,**
புன்னக்குடா வீதி, ஏறாவூர்-03.

**(7) சிவமணி பூபாலசிங்கம்,**
புலவளை ,அளவெட்டி மத்தி அளவெட்டி.

**(8) பொ.பாலசுப்பிரமணியம்,**
இல368/8. சின்சபா வீதி,
வெள்ளவத்தை-06.

**(9) இ.வியாகரன்,**
இல 71. முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.

**(10) க.சூரியகுமாரன்,**
இல.136. ஜெயந்திநகர், கிளிநொச்சி.

# மறைந்த நகரம்

உண்மைச் சம்பவம்

ஜெகன்

**செ**யின்ற் ஜீன் வியன்னி நகருக்குப் பேரழிவு ஏற்படப் போவதற்கு அறிகுறியாக நாய்கள் வழமைக்கு மாறாகத் தொடர்ந்து குரைத்துக் கொண்டேயிருந்தன.


திருமதி.ஜாக்குலினின் பொம்மை போன்ற பொம்ரேனியன் இடைவிடாமல் குரைத்து ஊளையிட்டது. 'மார்ஷல்' என்றழைக்கப்படும் அவளது பதினொரு வயதான அந்தச் செல்லநாய் முன்னர் ஒருபோதும் அவ்விதமாக குரைத்துப் பார்த்ததேயில்லை வழமைக்கு மாறாக அது பயந்து நடுங்கியது. 'ஏ! கத்தாதே" என்று அவள் பலமுறை சொல்லிப் பார்த்தாள். பயனேதுமில்லை. மார்ஷல் குரைப் பதை நிறுத்தவில்லை. அவளுக்கு வந்த கோபத்தில் அச் சின்னஞ் சிறு நாயை ஓங்கி அடித்து உள்ளே விரட்டினாள்.

கல்லூரி அதிபர் ஜான்சனின் வீட்டு நாயும் குரைக்கத் தொடங்கிற்று. அது சுற்றிச் சுற்றி வந்து பல இடங்களில் முகர்ந்து பார்த்தது. எதையோ அது தேடுவது போலக் காணப்பட்டது. மொன்ரீயலுக்கும் சிக்காகோவுக்கும் இடையில் நடக்கும் உதைபந்தாட்டப் போட்டியைப் பார்க்க விரும்பிய ஜான்சன் தொலைக் காட்சியை இயக்கினார். ஆனால் நாயின் குரைப்பு தொலைக்காட்சியில் வந்த போட்டியின் நேர்முகவர்ணனையை அமுக்கிவிட்டது.

அந்த நகரத்து மக்களில் எவராலும் நாய்கள் எதற்காக அவ்விதம் குரைக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. கியூபெக்கிற்கு வடக்கே 215 கிலோமீட்டர் தூரத்தில் செயின்ற் ஜீன்வியன்னி நகரம் இருந்தது. 1350 குடும்பங்கள் வசிப்பதற்கு ஏற்றவாறு திட்டமிட்டு அமைக்கப்பட்ட நகரம் அது. அதற்கு முன்னர் அது பயிர் நிலமாய் கிடந்தது. கடந்த பத்து ஆண்டுகளில் வீடுகள் எழும்பின. அங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள், அருகாமையிலுள்ள அலுமினிய, காகிதத் தொழிற்சாலைகளில் நிர்வாகப் பிரிவிலோ, இயந்திர தொழில்நுட்பப் பணியாளராகவோ, தொழிலாளராகவோ பணிபுரிந்து வந்தனர். அவர்களுடைய இல்லங்கள் நவநாகரீகமாக அலங்கரிக்கப்பட்டுச் சுத்தமாக இருந்தன. அவர்களின் மனைவிமார்கள் தங்களது ஓய்வு நேரத்தை வீட்டையும் நகரத்தையும் அபிவிருத்தி செய்வதில் செலவிட்டனர். பல மாடி வீடுகளுடன் புதிய நகரமாக உருவாகி யுள்ள அதே இடத்தில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய நிலச்சரிவு ஏற்பட்டிருந்தது என்று அங்கு வசிப்பவர்கள் ஒருவருக்கும் தெரியாது ஒரு சிலர் அது பற்றித் கேள்விப்பட்டிருந்தாலும் அது பற்றி அவர்கள் அலட்டிக் கொண்டதில்லை. அரு காமையிலுள்ள மலையிலிருந்து நிலச்சரிவு ஏற்பட வில்லை. சமதரையாக இருந்த இடம்தான் சரிந்து கியூபெக்கின் ஒரு பகுதியான அந்த இடம், மணல் மேடாய் இருந்தது. இப்போதும் முப்பது மீற்றர் ஆழத்திற்குத் தோண்டினால் மணலைக் காணலாம். அதனால் அடிக்கடி மண்சரிவு ஏற்படுகிறது. மணல்குவியல் மீது தண்ணீர் தேங்கத் தொடங்கியதும், களிமண் மீது பாரம் அழுத்த, அது கரைந்து சென்று கொண்டிருந்தது.

> **பல மாடி வீடுகளுடன் புதிய நகரமாக உருவாகியுள்ள அதே இடத்தில் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய நிலச்சரிவு ஏற்பட்டிருந்தது என்பது அங்கு வசிப்பவர்கள் ஒருவருக்கும் தெரியாது**

நகரம் அழியப்போவதற்கு முன் பல நிகழ்ச்சிகள் நடந்தன. அவை ஒரு எச்சரிக்கை விடுவன போலவும் காணப் பட்டன. இரண்டு தெருக்களில் வெடிப்பு ஏற்பட்டது. வண்டிப் பாதைகள் இரண்டில் நிலம் பதின்மூன்று சென்ரிமீற்றர்கள் உள்ளே இறங்கியது. ஒருவன் தன்வீட்டு அடித்தளத்தில் தெரிந்த பகுதியில் அடையாளமிட்டிருந் தான். ஊற்று நீர் பெருக்கெடுத்துக் கட்டடத்தைச் சுற்றியிருந்த மண்ணை அரித்துச் சென்றது. வீடு இருபது சென்ரிமீற்றர் ஆழத்திற்கு நிலத்துள் அமிழ்ந்தது. பக்கத்து வீட்டுக்காரர்கள் அவன் இட்ட அடையாளத்தைச் சுட்டிக் காட்டிக் கேலி செய்தனர். அத்தோடு நின்று விடவில்லை. அவ்வீட்டிற்கு முன்பாக நடப்பட்டிருந்த தொலைபேசிக் கம்பம் காற்று வேகமாக வீசாத நிலையிலும் எப்படியோ சாய்ந்துவிட்டது.



1972 ஆம் ஆண்டு சித்திரை மாதத்தின் பிற்பகுதியில் அந்த நகரத்தில் வசித்த பலர் தங்கள் வீடுகளின் அடியிலிருந்து யாரோ பலமாகத் தாக்குவது போன்ற ஓசைகளைக் கேட்டனர். மக்கள் தங்கள் வீட்டு அடிப்பகுதியைச் சுற்றிப் பார்த்தனர். ஜன்னல்கள் கூடத் தடதட வென்ற ஓசை எழுப்பின. எதையும் கண்டுபிடிக்க முடிய வில்லை.

மறுநாள், பிளாக்பிரவுன் என்பவர் கிழக்கிலுள்ள அவரது விவசாயப் பண்ணைக்குப் போக விரும்பினார். குறிப்பிட்ட சில வேலைகள் அங்கு செய்ய வேண்டியிருந்தன.

அவரது நிலத்தில் பன்னிரெண்டு மீற்றர் உயர முடைய குன்று ஒன்று இருந்தது. அங்கிருந்து செயின்ற் ஜீன் வியன்னி நகரத்தைப் பார்க்க முடியாதவாறு அந்தக் குன்று மறைத்துக் கொண்டிருந்தது. பிரவுன் தனது பண்ணைக்குக் காரில் சென்ற போது குன்றின் பின்பக்க நிலம் மறைந்து விட்டது. அந்த இடத்தில், 150 மீற்றர் நீளமும் 60 மீற்றர் அகலமும் 25 மீற்றர் ஆழமுமான பெரிய பள்ளம் தான் காட்சியளித்தது. இதனைக் கேள்வியுற்று அந்த இடத்தை வேடிக்கை பார்க்கவென நகரத்திலிருந்து ஏராளமானோர் வந்திருந்தனர்.

ஒரு வாரத்திற்குப் பிறகு திருமதி மயூரி, தனது அண்டை வீட்டுக்காரியான மெரினாவைப் பார்க்கச் சென்றாள். எமது நகரத்தைச் சுற்றி என்ன நடக்கிறது? அடிக்கடி பெரும் சலசலப்பு ஒலி கேட்கிறது. என் கணவர் அதைப் பிரமை எனக் கேலி செய்கிறார்" என்று குறைபட்டுக் கொண்டாள் மயூரி.


சித்திரை மாதம் மழை விடாமல் பெய்தது. இருப்பினும் திடீரென்று விட்டுவிட்டுப் புழுக்கமாகவும் இருந் தது. இது வேனிற்காலத்தின் இயற்கையான மாற்றம் என்றே சிலர் கருதினர். மழைத் தண்ணீர் முழுவதும் வடிந்து ஓடுவதில்லை. மழைத் தண்ணீரை தரை உறிஞ்சி மெள்ள மெள்ளக் களிமண்ணைக் கரைக்கும் என்பதை எவரும் உணரவில்லை.


வைகாசி மாதம் 4 ஆம் திகதி பெய்த மழையில் களி மண் கரைந்து நீருடன் அடி பட்டுச் சென்று கொண்டிருந் தது. இரவு 10.45க்கு பவுல் என்ற பெண்மணி, ஆறு வீடுகளுக்கு அப்பால் வசிக்கும் தனது நெருங்கிய சிநேகிதியான அலெனுடன் தொலைபேசியில் கதைத்தாள். **(தொடரும்)**

## பறவை உருவத்தில் உளவு பார்க்கும் கருவி!

**வி**ஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியானது அனைத்துத் துறைகளிலும் பல நவீன மாற்றங்களுக்கு வித்திட்டுள்ளது. போர் மற்றும் உளவு பார்த்தலிலும் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பண்டைய காலத்தில் உளவு பார்ப்பதற்கு பல்வேறு உத்திகள் கையாளப்பட்டன.

ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல், பறவைகள் மற்றும் மிருகங்கள் மூலம் உளவு பார்க்கும் நடைமுறைகள் அக்காலத்தில் பின்பற்றப்பட்டன. அதன் பின்னர் செய்மதி மூலம் உளவு பார்க்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. தற்காலத்தில் அதைவிட மிக நுணுக்கமான முறைகள் கையாளப்படுகின்றன. அமெரிக்க இராணுவம் இத்தகைய பல உளவு பார்க்கும் கருவிகளை தயாரித்துள்ளது. இவற்றை யாராலும் எளிதாக அடையாளம் காண முடியாத வண்ணம் அவை உருவாக்கப்பட்டுள்ளன. இவை உருவத்தில் பறவைகள் மற்றும் பூச்சிகள் வடிவிலும் காணப்படுவதால் அவற்றை அடையாளம் காண்பது எதிரிகளுக்குச் சற்று கடினம்.








# TVS wego - பயணம் Balance

- BODY BALANCE தொழில்நுட்பத்துடன் கூடிய 110cc ஸ்கூட்டர்.
- சொகுசான, வசதியான பயணத்திற்காக சிறந்த தொழில்நுட்பத்தைக் கொண்ட ஷொக் அப்ஸோபர் பாகம்.
- உங்கள் வசதிக்கென 15 இற்கும் மேற்பட்ட விசேட அம்சங்கள்.

அறிமுக விலை ரூ. 142,768/- + vat.

துரித அழைப்பு: 0770 777888

BODY BALANCE wego

TVS MOTOR CO. GENUINE PARTS

TVS லங்கா (தனியார்) நிறுவனம். 757, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14 தொ.பே: 0114 605200 பெக்ஸ்: 0114 614909
பிரதான காட்சியறை: தொ.பே: 0114 605246 நகர காட்சியறை: தொ.பே: 0114 710416 கிருளப்பனை காட்சியறை: தொ.பே: 0114 954375 ஜா-எல காட்சியறை: தொ.பே: 0114 979189 மற்றும் நாடுமுழுவதும் விநியோகஸ்தர்கள்.











# அமெரிக்காவில் ரூ.112 கோடி மதிப்பில் தயாராகும் பறக்கும் கார்.!

கார் விண்ணில் பறக்க முடியுமா? என்ற கேள்வி பலரது மனதில் எழும். ஏன் முடியாது. இன்னும் 5 ஆண்டுகளில் அது சாத்தியமாகும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். புதுவிதமான பறக்கும் காரை அமெரிக்காவைச் சேர்ந்த கார்ல் டயட்ரிச் என்பவர் தயாரித்துள்ளார். இது 2 இருக்கைகள் மட்டுமே கொண்டது. மிகவும் எடை குறைந்த விமானம் போன்றது. மணிக்கு 185 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும். 800 கிலோ மீற்றர் தூரம் செல்ல தேவையான எரிபொருள் நிரப்பும் டாங்கி அமைக்கப்பட்டுள்ளது. விண்ணில் பறக்கும்போது அவற்றின் இறக்கைகள் விரியும். அதே நேரத்தில் ரோட்டில் இறங்கி கார் ஆக மாறும்போது அவை மடங்கி சக்கரங்களாக வடிவம் பெறும். இந்த நிகழ்வு 15 வினாடிகளில் நடைபெறும். இந்த கார் சுமார் ரூ.112 கோடி செலவில் தயாரிக்கப்படுகிறது. இதை ஓட்ட 20 மணி நேரம் மட்டும் பயிற்சி பெற்றால் போதும். புதுவகையான இக்கார்கள் இன்னும் 5 ஆண்டுகளில் அமெரிக்க வீதிகளில் ஓடுவதைக் காணமுடியும். அதற்கான அனுமதியை அமெரிக்க தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து பாதுகாப்பு நிர்வாகம் அளித்துள்ளது.


PHILIPS

காலங்காலமாய் எமது நம்பிக்கையை வென்ற உலகத்தரம் வாய்ந்த பிலிப்ஸ் உற்பத்திகள்

LCD / LED தொலைக்காட்சிகள்

32PFL3605
- 32" LCD திரை
- முழு HD
- 50000:1 டயனமிக் கொண்டாஸ் ரேஷியோ
- 20W ஒலித்திறன்
- 2 HDMI/USB/PC input

வட்டியில்லை 12 மாத கொடுப்பனவு
ரூ.59,990

42PFL3605
- 42" LCD திரை
- முழு HD
- 50000:1 டயனமிக் கொண்டாஸ் ரேஷியோ
- 20W ஒலித்திறன்
- 2 HDMI/USB/PC input

வட்டியில்லை 12 மாத கொடுப்பனவு
ரூ.109,990

32PFL5605
- 32" LED திரை
- முழு HD
- 100 Hz
- 50000:1 டயனமிக் கொண்டாஸ் ரேஷியோ
- 40W Surround Sound
- 3 HDMI/USB/PC input
- 40% மின் சேமிப்பு

இலவசம் புளூ ரே டிவீடி ப்ளேயர்
ரூ.109,990

ஹோம் தியட்டர்கள்

HTS2500
- 300W RMS மின் திறன்
- CD/VCD/DVD
- USB Play-back
- FM ரேடியோ

வட்டியில்லை 12 மாத கொடுப்பனவு
ரூ.17,990

HTS3540
- 1000W மின் திறன்
- HDMI 1080p
- டொல்பி டிஜிடல் மற்றும் Pro Logic II surrounding
- DVD, VCD, CD & USB

ரூ.38,990
வட்டியில்லை 12 மாத கொடுப்பனவு

HTS3530
- 600W RMS மின் திறன்
- HDMI 1080p
- டொல்பி டிஜிடல் மற்றும் Pro Logic II surrounding
- DVD, VCD, CD, FM & USB

ரூ.32,990
வட்டியில்லை 12 மாத கொடுப்பனவு

கொண்டுசெல்லக்கூடிய ஒலிநாடாக்கள்

AZ102
- CD, CD-R & CD-RW
- கெசட் டெக்
- FM/MW ரேடியோ

ரூ.4,990

AZ382
- USB/MP3/WMA-CD, CD & CD-RW
- FM/MW ரேடியோ

ரூ.6,990

AQ4140
ரூ.3,590
- FW/AM/SW ரேடியோ
- கெசட் டெக்
- பில்ட்-இன்-பிலட் மைக்

டிவீடி ப்ளேயர்

DVP3550K
- Play CD, VCD, DVD, DivX MP3, WMA, JPEG Hi-Speed USB 2.0
- கரோக்கி

ரூ.5,990

புளூரே டிவீடி ப்ளேயர்

BDP2700
- அகன்றத்திரையில் ப்ளூரே டிஸ்க் காட்சிகளை முழு HD 1080p யில் காண்பதற்கு ஏற்றது
- DivX® Ultra for DivX®

விலை ரூ. 18.990
விசேட விலை ரூ.16,990

தெரிவு செய்யப்பட்ட கடனட்டையாளர்களுக்கு வட்டியின்றிய மீள் செலுத்தும் முறைகள்

அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்கள்

A-Z Electronics (Pvt) Ltd.

A-Z: 0773179593, அபான்ஸ்: • சுண்ணாகம்-0777684068, சங்கானை- 0773763503 • JVC-HAIER: 0776163420

நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய சேவை நிலையங்கள்

அபான்ஸ்



SONDERVERKAUF

Möbel Ferrari

HINWIL

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

Öffnungszeiten
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00



KOMPLETT
1290.-
statt 1950.-

DIABOLO
Komplette Eckpolstergruppe
Textil-Leder weiss
6 Rückenkissen/3 Zierkissen
In diversen Farb- und Materialvarianten erhältlich

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

0.0% Direkt Finanzierung



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, ஜூலை 24ஆம் திகதி வெளியிடப்பட்டது.